
பக்கங்கள் 20
20/=
Registered as a Newspaper in Srilanka
# எதிரொலி
Ethiroli
21-27 நவம்பர் 2018
வாரஇதழ்

Raja Bojun
Sri Lankan Buffet
Liberty Arcade,
No 282, R.A.De Mel Mawatha Colombo 03.
Tel. 4 71 61 71 / 2577097-8 web : rajabojun.lk








# முதலாவது மாவீரர் தின உரையில் தலைவர் சொன்னது என்ன?

இதுவரை காலமும் எமது புனித இலட்சியமான தமிழீழ இலட்சியத்துக்காக உயிர்த் தியாகம் செய்த போராளிகளை நினைவு கூரும் முகமாக இந்த மாவீரர் நாளை நாங்கள் ஆரம்பித்துள்ளோம்.

எத்தனையோ உலக நாடுகளில் அந்த நாடுகளின் விடுதலைக்காகப் போரிட்ட படைவீரர்களின், பாதுகாப்புக்காகப் போரிட்ட படைவீரர்களின் நினைவாக இப்படிப்பட்ட மாவீரர் நாட்களை கொண்டாடுவது வழக்கம். உங்களுக்குத் தெரியும் இதுவரை காலமும் எமது இயக்கத்தில் வீரச்சாவு அடைந்த ஒவ்வொரு போராளிக்குமாகத் தனிப்பட்ட நினைவுநாளைக் கொண்டாடுவது வழக்கம். வீரச்சாவு அடைந்த எல்லோரையும் மொத்தமாக வருடத்தில் ஒரு நாள் நினைவு கூர்ந்து அந்த நாளையே மாவீரர் நாளாகப் பிரகடனப்படுத்தி உள்ளோம்.

அதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. அதாவது, எங்களது விடுதலைப் போராளிகளில் முதலாவதாக வீரச்சாவு அடைந்த சங்கரின் நினைவு தினமாக மாவீரர் நாளை நாங்கள் பிரகடனப்படுத்தி உள்ளோம்.

அத்தோடு வழமையாக எங்கள் மக்களில் ஒரு பழக்கம் உண்டு. உயர்ந்த பதவிகள், வசதியானவர்கள் இப்படிப்பட்டவர்களைத் தான் பெரிதாகப் பார்க்கும் பழக்கம் உண்டு. அதுபோல் எமது விடுதலைப் போராட்டத்திலும் தலைவர்களை மட்டும் பிரித்து அவர்களது செய்கைகளை மட்டும் பெரிதாகப் பார்க்கக் கூடாது என்பதற்காகவும் எல்லாப் போராளிகளும் சமம் என்னும் ஒரு நோக்கத்துடனும் இந்த நாளை கொண்டாட முடிவு எடுத்துள்ளோம்.

அதாவது எமது போராளிகளை நினைவு கூரும் தினத்தை ஒரு நாளில் வைப்பதால் எல்லோரும் அன்று எமது இயக்கத்தில் வீரச்சாவு அடைந்த தலைவர்களில் இருந்து சாதாரணமாகப் போராடி வீரச்சாவு அடைந்த உறுப்பினர் வரை எல்லோரையும் சமமாகத்தான் கருதுகிறோம் என்பதுடன், வீரச்சாவு அடைந்த எல்லாப் போராளிகளின் நினைவு நாட்களையும் ஒன்றாக நினைத்து மாவீரர்நாளாகக்கொண்டாடுகிறோம். காலப் போக்கில் குறிப்பிட்ட சில ஆட்களுக்கே முக்கியத்துத்துவம் கொடுக்கப்படும் நிலை தடுக்கப்பட்டு எல்லோருமே சமமாக ஒரே நாளில் நினைவு கூரப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இந்த மாவீரர் நாளைக் கொண்டாடுவதற்கு முடிவெடுத்தோம். ஓர் இனத்தைப் பொறுத்தவரை வீரர்களையும் அறிவாளிகளையும் பெண்களையும் மதிக்காத ஓர் இனம் காட்டுமிராண்டி இனமாகத்தான் மாறி அழிந்து விடும். எங்களுடைய இனத்தில் அறிவாளிகள் இருக்கிறார்கள். மற்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது எங்கள் இனத்தில் பெண்கள் புனிதமாக மதிக்கப்படுகிறார்கள்.

அதே வேளை வீரர்களுக்குத் தான் பஞ்சமாக இருந்தது. ஆனால் இன்று இந்த மாவீரர் நாளில், ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி விட்டோம். ஆம், எமது வீரர்களைக் கூட நாம் கௌரவிக்க ஆரம்பித்துள்ளோம். இதுவரைகாலமும்எங்களுடைய இனத்தில் வீரர்கள் என்றால் யார் என்று கேட்கும் நிலை இருந்தது. நாம் எம் இனத்தின் வீரர்களை நினைவுகூரும்நாள்ஒன்றைஉருவாக்கியுள்ளோம். எனவே இனி எமது இனம் நிச்சயமாக அழியாது.

எமது இனம் உலகிலேயே தலை நிமிர்ந்து இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் எமது 1307 போராளிகளின் உயிர்த்தியாகம் தான். அவர்களுடைய வீரமான, தமது உயிரையே மதியாது போராடிய உண்மையான தியாகம் தான் எங்களுக்கு உலக நாடுகளில் ஒரு மரியாதையை ஏற்படுத்தியுள்ளது. எனவே இந்த மாவீரர் நாளை நாங்கள் எங்களுடைய வாழ்நாளில் முக்கியமான விழாவாக இன்றிலிருந்து ஒவ்வொரு வருடமும் கொண்டாட ஆரம்பிக்க வேண்டும்."

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்!.

(1989 இல் முதலாமாண்டு மாவீரர் நாள் விழாவில் மேதகு பிராபாகரன் ஆற்றிய உரையின் ஒரு பகுதியே மேற்படி உரையாகும். அன்று முதல் பிரபாகரன் அவர்கள் மாவீரர் நாள் உரையை 2008 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 20 ஆண்டுகள் நிகழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.)





எதிரொலி
Ethiroli

அம்பலம் பதிப்பகம்,
இல. 241, கைதடி – மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
ethirolimedia@gmail.com, 0212243818

## தேவை ஒரு தேர்தல்

கத்தி, மிளகாய்த்தூள் என்று இலங்கை நாடாளுமன்றத்தில் விதவிதமான தாக்குதல்கள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு அமர்வும் திட்டமிடப்பட்டு மகிந்த தரப்பால் குழப்பப்பட்டு வருகின்றன. இந்தக் குழப்பகரமான நிலையில், மகிந்தவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை குரல்வழி வாக்கெடுப்பின் மூலம் சபாநாயகர் நடத்தி, அதனை உறுதி செய்யும் வகையில் மகிந்தவுக்கு எதிராக வாக்களித்த உறுப்பினர்களின் கையொப்பம் அடங்கிய கடிதத்தை ஜனாதிபதிக்கு 2 தடவைகள் அனுப்பி வைத்தபோதும் அதனை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. இத்தனைக்கும் குரல்வழி வாக்களிப்பு நாடாளுமன்ற விதிகளின் படி இடமுண்டு. ஆனால் அதனை ஏற்றுக்கொள்வதில்லை என்று மைத்திரி வீம்புக்கு நிற்கிறார்.


மகிந்த தரப்பும் நாடாளுமன்றம் குழப்பத்தோடு கலைவதையே அதிகம் விரும்புகின்றது. ஏனெனில் டிசெம்பர் 8 ஆம் திகதி, நாடாளுமன்றத்தை மைத்திரி கலைத்தமை சரியா, தவறா என்பது தொடர்பில் உயர் நீதிமன்றில் மீண்டும் விசாரணைகள் ஆரம்பிக்கவுள்ளன. அதுவரை தமது ஆட்சியைத் தக்கவைத்து, நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது சரி என்று தீர்ப்பு வந்தால், அமைச்சுப் பதவிகளோடும் அதிகாரத்தோடும் தேர்தலை மகிந்த அணி சந்திக்க முடியும். சலுகைகளையும், பணத்தையும் வாரி இறைத்து எப்படியாவது பெரும்பான்மைப் பலத்தைப் பெறுவதே அவர்களின் திட்டம்.

சிலவேளைகளில் நாடாளுமன்றத்தைக் கலைத்தமை தவறானது எனத் தீர்ப்பு வந்தால், மீண்டுமொருமுறை குதிரை பேரத்தில் இறங்கி இன்னும் சிலரை எதிர்த்தரப்பில் இருந்து வளைத்துப் போட்டு ஆட்சியைத் தொடர மகிந்த அணி முயற்சிக்கும். அது கைகூடாமல் போனால், தொடர்ச்சியாக நாடாளுமன்றைக் குழப்பியடித்து, அதனை அடிப்படையாக வைத்து, நாடாளுமன்றத்தைக் கலைப்பது தொடர்பில் சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தி அதன்மூலம் தேர்தலுக்குச் செல்வதே அவர்களின் இறுதித் திட்டமாகும்.

என்ன விலை கொடுத்தேனும், எப்படிக் குளறுபடி செய்தேனும் இன்னொரு தேர்தல் ஒன்றையே மகிந்தவும் அவரது சகாக்களும் விரும்புகின்றனர். அதனாலேயே நாடாளுமன்றில் மிளகாய்த்தூளால் விசிறியடித்து, தன் சகாக்கள் தாக்குதல் நடத்துவதைப் பார்த்து ரசிக்கிறார் மகிந்த. அதேபோன்று பெரும்பான்மை உறுப்பினர்களின் கையொப்பங்களுடன் கூடிய மகிந்தவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எவ்வித சட்டரீதியான காரணமும் சொல்லாமல் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார் மைத்திரி.

ஆனால் இப்படியே நாடாளுமன்றம் குழம்பல் நிலையில் இருப்பது அரசியல்வாதிகளுக்கு அனுகூலமாக இருக்கலாம். மக்களுக்கு ஒருபோதும் நன்மையாக இருக்காது. குறிப்பாக அடுத்த வருடத்துக்கான பட்ஜெட் நவம்பரில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதுபற்றிய எந்தப் பிரக்ஞையும் இன்றி, கூத்தாடுகின்றனர் எம்.பிக்கள். இதனால் அடுத்த வருடம் இலங்கை மிகப்பெரிய பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ளும், அந்த நெருக்கடியின் சுமையைச் சுமப்பது பாவம் அப்பாவி மக்கள் தான். மக்கள் சேவகர்கள் என்று பீற்றிக்கொள்ளும் அரசியல்வாதிகள் இனியாவது கதிரைச் சண்டையை விடுத்து கொஞ்சமேனும் மக்களுக்காக ஏதும் செய்ய முயலுங்கள்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"



# தேசத்தை சீரழிக்கும் ஐந்துகள்

● ஸபர் அஹமட்

ஒருவகைத்தவளைகளை, தேரைகளை நீங்கள் பார்த்திருப்பீர்கள். மழைக் காலத்தில் வீட்டு வாசலில் கிடக்கும். பிடித்துத் தும்புத்தடியால் ஒரு எகிறு எகிறினாலும் சனியன் வீட்டைப் பார்த்துக் கொண்டு தான் விழும். திரும்ப ஒரு 'ஜம்ப்' பண்ணி வீட்டு வாசலுக்கு வரும்..

அதே போல தான் இந்த மகிந்த ராஜபக்சவும். கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாக இரண்டு தடவை நம்பிக்கையில்லாத்தீர்மானம் கொண்டு வந்தார்கள். பெரும்பான்மை இல்லை என்று நன்றாகத் தெரிகிறது.. 'ஆயுபோவன்' என்று சொல்லி விட்டு போவது தானே? ஏன் இந்த எழுபத்து மூன்று வயதில் இத்தனை அதிகார வெறி ?

மகிந்த ராஜபக்சவுக்கு ஏதோ சில இலக்குகள் இருப்பதாகத் தெரிகிறது. கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் மிளகாய்த்தூள் வீசி காடைத்தனம் புரிந்த கேடிகள் எல்லாம் மகிந்த ராஜபக்சவின் காலில் விழுந்து வணங்கும் பக்த கோடிகள். ராஜபக்ச வழிபாட்டு அரசியலில் ஒரு குறியீடு..

ராஜபக்ச சபை நடுவே வந்து ஒரே ஒரு 'எக்ஸ்ரே' பார்வையில் ஆசனங்களில் அமருங்கள் என்று சொல்லி இருந்தால் இந்த அடிப்பொடிகளும் எடுபிடிகளும் எட்டாக மடிந்து ஈ என்று இளித்தவாறு அடங்கி ஒடுங்கிப் போய் இருக்கும். ராஜபக்ச அதைச் செய்யவில்லை. அவருக்கு மிக விருப்பமான ரகர் மட்ச்சைப் பார்ப்பது போல நடந்த அத்தனை அட்டூழியங்களையும் ரசித்துக் கொண்டு இருந்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கடைசி முடிவுகள் வர முன்னர் அதிகாலை வேளையில் வெளியேறிய ராஜபக்சவல்ல இவர்.. இது வேறொரு ராஜபக்ச...இவரைச் சுற்றி இருக்கும் கொள்ளைக்காரக் கும்பல், வாரிசு அரசியல் என்று எல்லோர் நலனும் கருதி உடும்புப் பிடியில் இருக்கிறார். இல்லாவிட்டால் தேர்தலுக்கு ஒன்றரை வருடங்களே இருக்க இப்படி வந்து சீரழிய என்ன தேவை இருக்கிறது?

இந்த அமளிதுமளிகள், தடியடிகள் தூசணப் பேச்சுக்கள் எல்லாம் நடக்கும் போது நாலாவது வரிசையில் உட்கார்ந்து இருந்தார் ரணில். அவர் மீது ஒரு கீறலும் படாது. இந்தப் பிரச்சினைகள் அத்தனையினதும் ஆதாரப் புள்ளியே ரணில் தான். வரிசையாக இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களில் தோல்விகள், கடைசியாக நடந்த இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களிலும் வாடகைக்கு ஆட்களைக் கொண்டு வந்தார். அப்படிக் கொண்டு வந்த ஒரு பொது வேட்பாளர் பைத்தியம் எல்லோரையும் வைத்துச் செய்கிறது.

**மகிந்த ராஜபக்சவுக்கு ஏதோ சில இலக்குகள் இருப்பதாகத் தெரிகிறது. கடந்தவாரம் நாடாளுமன்றத்தில் மிளகாய்த்தூள் வீசி காடைத்தனம் புரிந்த கேடிகள் எல்லாம் மகிந்த ராஜபக்சவின் காலில் விழுந்து வணங்கும் பக்த கோடிகள். ராஜபக்ச வழிபாட்டு அரசியலில் ஒரு குறியீடு.**

இருபத்தைந்து ஆண்டுகால கட்சியின் தலைவர். அதாவது கால் நூற்றாண்டுகள். கண்ட பலன் என்ன? யாரையாவது எவனையாவது பிடித்து ஆட்சிக்கு வந்தாலும் செய்வது எல்லாமே மக்கள் விரோத, இந்த மண்ணுக்குப் பொருத்தமே இல்லாத வேலைகள். இந்த ஆள் சீ.ஐ.ஏ ஏஜெண்டோ என்ற சந்தேகம் வேறு வருகிறது.

நடந்து கொண்டிருக்கும் நாடாளுமன்ற அவலங்களைப் பேசு பொருளாக்கி ஐக்கிய தேசியக் கட்சி பெரும் கூட்டம் வைக்கும். அதற்கு ஆயிரக்கணக்கில் தொண்டர்கள் சேர்வார்கள். மக்களின் நாடித்துடிப்பு தெரியாத ரணிலும் அவரைச் சுற்றி இருக்கும் ஆங்கிலத்தில் யோசித்து சிங்களத்தில் பேசும் சொசேஜஸ்களும். "சார் இது உங்களுக்காக சேர்ந்த கூட்டம், நீங்கள் விலகவே வேண்டாம்." என்று அடித்துவிடுவார்கள்..

இது எப்படி இருக்கும் என்றால் பிரசித்தி பெற்ற கோயில் உற்சவங்களில் இலட்சக்கணக்கில் மக்கள் கூடும் போது இந்த 'எப்எம்' வானொலிக்காரர்கள் போய் நாலு கதிரைகள், ரெண்டு சோடா போத்தல்களுடன் உட்கார்ந்து கொண்டு, "எமது கலையகத்தைக் காண வந்த மக்கள் வெள்ளம்" என்று 'லைவ்' கொடுப்பது போல இருக்கும்.

மகிந்த, சிரிசேனா, ரணில் இது மூன்றுமே இனித் தேவை இல்லை. அந்தளவுக்கு இந்த மூன்று பென்ஷன் கேஸ்களாலும் தேசமே சீரழிந்து போய்விட்டது. ■

# மலையக மக்களின் குரலான பீரங்கிப் பேச்சாளர்

■ கங்காணி



மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைக்களுக்காகப் பலபேர் அன்று குரல் எழுப்பியிருந்தாலும் - போராட்டங்களை நடத்தியிருந்தாலும் ஒருசிலர் மாத்திரமே இன்றளவிலும் பேசப்படுகின்றனர். சிலர் காணாமல்போனோர் பட்டியலில் இணைந்துவிட்டனர். இலக்கியத்துறையிலும் இதேநிலைதான்.

இவர்களும் எமக்காக ஏதோவொரு வகையில் போராடியவர்கள்தான்.

அவர்களை என்றும் மறந்திடலாகாது. அவ்வாறானவர்களை, இன்றுள்ளவர்களுக்கு அறிமுகப்படுத்துவதும் எதிரொலியின் மலையகப் பக்கத்தின் நோக்கங்களில் ஒன்றாகும். அந்தவகையில் மலையக மக்களுக்காக எழுத்தாயுதம் ஏந்திப் போராடிய அதுவும் முஸ்லிம் நாவலாசிரியர் ஒருவர் பற்றியதே இந்தப் பதிவாகும்.

'கங்காணி மகள்', 'சதியில் சிக்கிய சலீமா' ஆகிய நாவல்களை வாசித்துள்ளீர்களா? மலையக மக்களுக்காகவே வெளிவந்த 'நவஜீவன்' பத்திரிகை பற்றித் தெரியுமா? இவையெல்லாம் அவரின் அயராத உழைப்பின் வெளிப்பாடுகள். மலையகம் தொடர்பில் பல சிறுகதைகளையும் எழுதியுள்ளார்.

ஆம். தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினை உச்சகட்டத்திலிருந்த காலப்பகுதியான - 1949 ஆம் ஆண்டு மே தினத்தன்று தமிழக திருநெல்வேலிச்சீமை கல்லிடைக் குறிச்சியின் மண்ணின் மைந்தன் டி.எம்.பீர் முஹம்மது என்கிற டியெம்பி கொழும்பில் கால் வைக்கிறார்.

அவர் ஈ.வெ,ரா, பெரியாரின் சுயமரியாதைக் காரராக, தி.மு.க தீவிரராக, அறிஞர் அண்ணா பக்தராக மிளிர்பவர்.

இலங்கையில் 13 ஆண்டுகள் (1962 ஆம் ஆண்டுவரை) வாழ்ந்தபோதும் ஊடகவியலாளர், எழுத்தாளர், கவிஞர், நாவலாசிரியர், எனப் பல பரிணாமித்துடன் மலையகப் பீரங்கிப் பேச்சாளர் என ஒரு புரட்சிகர பெயரையும் பெற்றார்.

அவர் இங்குவர 7 மாதங்கள் இருக்கையில் மலையக மக்களுக்கென ஒரு தனித்துவச் செய்தி இதழ் இல்லாப் பெருங்குறையைப் போக்க- தொழிலாளர் முன்னேற்றத்துக்குத் தொண்டுபுரிய - சிறந்த வாரப் பத்திரிகை என முன்பக்கத்தில் கட்டியம் கூறிக்கொண்டு 'நவஜீவன்' என்ற பெயர் தாங்கி நான்கே பக்கங்களில் பத்தே சதம் விலையில் ஓரிதழ் வெளிவந்தது.

கொழும்பில் ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியாகி அன்றே தோட்டங்களுக்குச் சென்றது. "பத்திரிகையின் சொந்தக்காரர் நிர்வாக ஆசிரியர் எஸ்.கே. காளிமுத்து" என அறிவிக்கப்பட்டது. (இவரும் இந்திய வம்சாவளியே)

இதழ் வெளியாகி ஏழெட்டு மாதகாலம் ஆன சமயத்தில்தான் டியெம்பி வருகை நிகழ்ந்தது. அவரை எவ்வாறு "நவஜீவன்" நட்பாக்கிக் கொண்டான் என்பதை அப்துல் அஸீஸூக்கு எழுதிய நூலில் (1992) 8ஆம் பக்கத்தில் ஓரிரு வரிகளில் இப்படி குறிப்பிட்டுள்ளார்.

" நவஜீவன் வார இதழின் நிர்வாக ஆசிரியரான காளிமுத்து ஏற்கனவே ஒரு நிறுவனத்தில் பணியாற்றி வந்தார். அதனால் என்னைப் பத்திரிகை ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக் கொண்டார். அதன்படி நவஜீவன் வார இதழின் ஆசிரியர் பொறுப்பை ஏற்று திறமையாகப் பணியாற்றினேன். இதன்படி ஒரேநேரத்தில் பீரங்கிப் பேச்சாளராகவும் பேனாச் சக்கரவர்த்தியாகவும் ஒரு பீர்மஹம்மது தோற்றம் பெற்றார்.

"நவஜீவன்" முதலாம் ஆண்டுப் பூர்த்தியை நெருங்கிக் கொண்டிருந்த சமயத்திலிருந்து ஐந்தாம் ஆண்டு பிற்பகுதி (1953.08.16) வரை ஊடக சேவை புரிந்து பிரமிப்பூட்டியுள்ளார்.

நான்கே பக்க "நவஜீவன்" அவரது தலையங்கங்களாலும், பரபரப்பு செய்திகளாலும் தோட்டங்கள் எங்கும் எதிரொலித்தன. அத்தோடு தோட்டச் செய்திகளை மட்டும் பிரசுரித்த ஏடாக அது இல்லை. வார இதழ் என்ற இலக்கணத்துக்கு அமைய முன் பக்கத்திலேயே முக்கிய கவிதை!

"காந்தி நாமாவளி" ஆ.முத்தையா (07.10.1951) இரண்டாம் பக்கத்தில் தலையங்கமும் கட்டுரையும்! ('கல்லிடைத் தம்பி'- 'பீரங்கி') புனைப்பெயர்களில் கைவண்ணம்! மூன்றாம் பக்கத்தில் கேள்வி-பதில். நான்காம் கடைசிப்பக்கத்தில் 'நமது தீர்ப்பு'- புத்தகத் திறனாய்வுகள் (இவையெல்லாம் அவர்தான்)

இவ்வாறு அவர் 16.08.1953 வரையில் ஆசிரியராகத் திகழ்ந்த பின் அடுத்த 3 மாதங்கள் இதழியல் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

இருப்பினும் இலக்கியத்துறை ஈடுபாடும் கலை விழாக்கள், தொழிற்சங்கக் கூட்டங்கள் என்றும் பம்பரமாகச்சுழன்று கொண்டே இருந்தார். அப்போது உதயசூரியனாகப் புறப்பட்டிருந்த திமுக வளர்ச்சிக்கான பிரசாரக் கூட்டங்களில் இவர் முக்கிய பேச்சாளர்.

1985 ஆம் ஆண்டு மே மாதம் மீண்டும் பற்றிக் கொண்டது பத்திரிகைப் பணி. "நண்பன்" இதழ். இலங்கைக்கு வந்த புதிதில் யார் முதலில் நண்பராக அவருக்கு வாய்த்தாரோ அவரே யட்டியாந்தோட்டை கே.ஜி.எஸ். நாயர். அந்தப் பெயரில் டியெம்பியை வார இதழ் ஆசிரியராக்கி நடத்தும் முடிவுக்கு வந்தார்.

அடுக்குமொழியில் தலைப்பிடுவார். "சம்பளத்தைக் குறைத்து சமருக்கழைக்காதீர்" என 'அவர் இட்ட தலைப்பை என்றும் மறந்திடமுடியாது.

இவ்வாறு 'நவஜீவன்', 'நண்பன்' இதழ்களில் ஆசிரியராக இருந்த அந்த ஆளுமையாளர் தன் சேவைகளை 60 களில் முடித்துக்கொண்டு தமிழ்கம் திரும்பிவிட்டார்.

மலையகத் தமிழர் சுபீட்சத்துக்காகவும், முஸ்லிம்களின் தாய் மொழி தமிழே என எழுதியும் பேசியும்வந்த ஒரு மனிதத்துவமிக்க பீர்முகம்மது என்ற பீரங்கிப் பேச்சாளரை, இலக்கிய வித்தகரை நம் மலையக சமூகம் நிச்சயம் போற்றவேண்டும். எழுத்துமூலம் சமூகவிடுதலைக்குரிய விதையை மக்கள் மனங்களில் விதைத்தவர்.

1955 ஆம் ஆண்டுதான் அவர் எழுதிய 'கங்காணி மகள்' நாவல் வெளிவந்தது. விலை வெறும் ஒரு ரூபாதான். மேற்படி நாவலைப்பற்றி ஒரு நல்ல திறனாய்வையும் ' நண்பன்' பத்திரிகை 1955 இல் வெளியிட்டிருந்தது.

தேயிலைக்காட்டில் பெண்கள் கொழுந்து பறித்துக் கொண்டிருக்கும் காட்சியை நல்ல மூவர்ணக் கலரில் முகப்பில் பொறித்திருக்கின்ற இந்தப் புத்தகத்தில், ஆசிரியர் கங்காணி மகளை ஓர் 'இலட்சியப் பெண்மணியாகவும், தமிழ் மரபு குன்றா மங்கையாகவும் சிருஷ்டித்திருக்கிறார்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இலையக பீரங்கிப் பேச்சாளர் தொடர்பில் தமிழ் மணி மானா மக்கீன் தமிழ்த் தேசிய நாளிதழ்களில் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

'மலையக 'பீரங்கி'ப் பேச்சாளரின் 'கங்காணி மகளும் - சதியில் சிக்கிய சலீமா'வும் எனும் தலைப்பில் 2018 ஜனவரி 14ஆம் திகதி தினக்குரல் பத்திரிகையிலும், 2018 பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி வீரசேகரியின் சங்கமம் பகுதியில் 'நவஜீவனாகவும், நண்பனாகவும் திகழ்ந்த ஒரு 'கல்லிடைத் தம்பி'! எனும் தலைப்பிலும் கட்டுரைகள் பிரசுரமாகியுள்ளன.

தமிழ் மணி மானா மக்கீன், இவர் தொடர்பில் புத்தகமொன்றையும்விரைவில்வெளியிடவுள்ளார். ■

## வற்றா ஊற்றாய் வலம்வரும் 'நதி'!




கண்ணுக்கு விருந்தளிக்கும் அட்டைப்படத்துடன், கடற்றொழில் செய்வோரைக் கனப்படுத்தி கார்த்திகை - 2018இன் கலை இலக்கிய மாத சஞ்சிகையான 'ஜீவநதி' தனக்கேயுரிய ஆளுமைப்பாங்குடன் வெளிவந்துள்ளது.

இலக்கியத்தின் பல்துறைகளி லும் பிரகாசித்த நட்சத்திரம் - இணுவையூர் சிதம்பர திருச்செந்தில் நாதன் எனும்பதிவை, சஞ்சிகையின் பிரதம ஆசிரியரான கலாமணி பரணீ தரன் எழுதியிருப்பதோடு, 'வேற்றுமையில் ஒற்றுமை' என்ற

ஆசிரியர் தலையங்கம் இயற்கையின் சமநிலை குறித்தும் வேண்டி நிற்கிறது.

சிறுகதைகள், கவிதைகள், கட்டு ரைகள், குறுங்கதை, பத்தி எழுத்து, நூல்விமர்சனங்கள், நேர்காணல், தொடர் நாவல்...போன்ற பயனுள்ள பல அம்சங்கள் ஆக்கவியல்களாக சஞ்சிகையை நிறைத்துள்ளன. ஒரு பழைமையின் பண்பாட்டு பழக்கவழக்கங்களை இன்றைய தலைமுறையினர் அறியும் பொருட்டு, இதயராசன் என்பவர் எழுதிய ' ஒரு மூதாட்டியின் பயணம்' எனும் சிறுகதை முனைப்புக்காட்டி நிற்பது வரவேற்கத்தக்கதொன்றாகும். இதுதவிர, த.ரிலக்சன் என்பவர் எழுதிய 'ஈழத்து ஓலைச்சுவடி ஆவணப்படுத்தலும் - பாதுகாப்பும்' எனும் கட்டுரை அவசியம் படிக்கவும் அறிந்துகொள்வேண்டியதும் அவசியமாகும்.

ஈழம்வாழ் 21 படைப்பாளிகளின் படைப்புகளுக்கு களம் அமைத்துக் கொடுத்திருக்கும் ஜீவநதி, தொடர்ந் தும் வற்றா ஊற்றாய் வாசகர்கள் மத்தியில் வலம்வர வாழ்த்துவோம்!

- உமைபாலன்

## வசிப்பிடமான மருத்துவமனை



50 வயதான Mimi Tebeதந மற்றும் 21 வயதான Ruth Kidane என்ற தாயும் மகளும் வடக்கு லண்டனில் உள்ள ஓர் அரசு குடியிருப்பில் வாழ்ந்து வந்தனர். இந்த நிலையில் கடந்த வருடம் ஜூலை மாற்றுத்திறனாளியான ஷரூத், பார்னெட் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். அவரது தாயாரும் அதே மருத்துவமனையில் உள்ள பொது விடுதியில் தங்கியுள்ளார்.

சிகிச்சைகளின் பின் ஷரூத் குணமடைந்தமையால், அவர் வீட்டுக்கு செல்ல மருத்துவர்கள் அனுமதி வழங்கியுள்ளனர்.

ஆனால் அவர்களின் குடியிருப்பு வேறொரு நபருக்கு வழங்கப்பட்டிருந்தமையால், தாயாரும் மகளும் செல்ல இடமின்றி கடந்த 15 மாதங்களாக மருத்துவமனையில் வசித்து வருகின்றனர். இதனால் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக பல நோயாளிகள் படுக்கை இன்றி பரிதவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.



## உயிர்த்த மனிதன்

ராஜஸ்தான் மாநிலத்தை சேர்ந்த 95 வயதான ராம், முதுமை காரணமாக படுத்த படுக்கையானார். இவர் கடந்த தீபாவளியன்று நீண்ட நேரம் உறங்கியுள்ளார். இதனால் அச்சமடைந்த உறவினர்கள மருத்துவரை அழைக்க, ராம் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். உறவினர்களின் அழுகைக்கு மத்தியில் இறுதிசடங்குகள் ஆரம்பிக்கப்பட்டன. அவரது உடம்பில் குளிர்ச்சியான நீர் பட்ட அடுத்த கணம் அவர் கண்விழித்தார்.குழுமியிருந்தவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தாலும், அவரது பிள்ளைகளும் உறவினர்களும் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கியுள்ளனர்.






## 370 கோடிக்கு ஏலம் போனவைரக்கல்

1920 களில் தென் ஆப்பிரிக்க சுரங்கத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஓர் அரிய வகை இளஞ்சிவப்பு வைரக்கலானது சுவிட்ஸரலாந்தில் ஏலத்தில் விடப்பட்டுள்ளது. ஜெனீவா நகரில் கிறிஸ்டி ஏல மையத்தினால் நடாத்தப்பட்ட இந்த ஏலத்தில் 100 ஆண்டுகள் பழைமையான இந்த இளஞ்சிவப்பு வைரக்கலானது 370 கோடிக்கு ஏலம் போனது. பொதுவான வெள்ளை நிற வைரங்களைப் பார்க்கிலும் இது நீள் சதுரவடிவமும் பளிச்சென்ற இளஞ்சிவப்பு நிறமும் கொண்டது. பழைமையின் பெறுமதி நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு தான் வருகிறது.



## விநோதமான பழிவாங்கும் படலம்

உலகத்தில் இப்படியெல்லாம் நடக்குமா என்று அனைவரையும் வியக்க வைத்துள்ளார் அமெரிக்காவைச் சேர்ந்த டூழடி உயளெடநச. பாம்பு ஒன்று கடித்ததனால் இவர் மூன்று நாட்கள் ஐ.சி.யூவில் வைக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டார். இவர் தன்னைக் கடித்த rattlesnake என்னும் ஒருவகைப் பாம்பை பழி வாங்கும் எண்ணத்தில் அதே வகை பாம்பொன்றைத் தெரிவு செய்து அதைச்சமைத்துச்சாப்பிடும் வீடியோவை யூடியுபில் பதிவேற்றியுள்ளார். சுமார் அரை மில்லியன் பார்வையாளர்களை கவர்ந்த இந்த வீடியோவில் அவர் அந்த பாம்பை சமைக்கும் முறையும் அதனை தனது செல்லப்பிராணி நாயுடன் உண்டு மகிழும் விதமும் அனைவரையும் வியக்க வைத்துள்ளது.

## அகோர பசி

பசி ருசி அறியாது என்பர். ஏனென்றால் மனிதனின் வாழ்க்கையே உணவில் அடங்கியுள்ளது. பசியின் கொடுமை எந்த மனிதனாலும் தாங்க முடியாது. கேரள மாநிலத்தைச் சேர்ந்த கோபிகா எனும் 14 வயதுடைய சிறுமி அகோரப் பசியினால் பீடிக்கப்பட்டு அவதியுற்று வருகிறார். 115 கிலோ நிறையுடைய இச்சிறுமியால் வாய் பேச முடியாது. 2 வயது முதல் பகல், நள்ளிரவு என்று பாராமல் அகோர பசியால் தவிக்கும் இவளின் அழுகையைப் பார்க்கும் இவளின் பெற்றோர் என்ன செய்வதென்றே தெரியாமல் தவிக்கின்றனர்.



## ஏலத்தில் நிச்சயிக்கப்படும் திருமணங்கள்

பொதுவாக பெண் என்பவள் திருமணத்துக்காகப் பெண்பார்க்கும் படலத்தில் ஒரு காட்சிப்பொருளாக வைக்கப்படுகிறாள் என்பது யாவரும் அறிந்ததே. ஆனால் சூடான் நாட்டில் Dinka எனும் கலாச்சாரத்துக்கு அமைவாக, பெற்றோர் தங்கள் பெண் பிள்ளைகளை ஏலத்தில் விட்டு, அதில் யார் அதிகமாகப் பொருட்களோ, பணமோ கொடுக்கிறார்களோ அவர்களுக்கே அந்தப் பெண்ணைத் திருமணம் செய்து வைக்கப் பார்கள். அந்த வகையில் அண்மையில் 17 வயதுடைய பெண் ஒருத்தியை ஏலத்தில் விட்ட அவளது தந்தை, 6 பேர் கலந்து கொண்ட இந்த ஏலத்தில் இறுதியாக 500 மாடுகள், 3 விலையுயர்ந்த கார்கள் மற்றும் ஒரு மில்லியன் உள்ளூர் மதிப்பிலான பணம் கொடுத்த பிரபல தொழிலதிபர் ஒருவருக்குத் தனது மகளைத் திருமணம் செய்து வைத்துள்ளார். திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்ற நிலை மாறி ஏலத்தில் நிச்சயிக்கப்படுகின்றது.





## உயிர் கொடுத்தவள்

குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று என்று பலர் சொல்லக் கேட்டிருக்கின்றோம். அது உண்மை தான் உயிர் கொடுப்பவள் தாய்தான் என்பார்கள். ஆனால் பிரிட்டன் நாட்டைச்சேர்ந்த 9 வயதான சேடி பிஸ்ரோ எனும் சிறுமி உயிருக்குப் போராடிய நான்கு பேருக்கு உயிர் கொடுத்துள்ளார்.

சேடி சிறு வயது முதலே, Anaphylaxis எனும் கொடிய உயிர்கொல்லி ஒவ்வாமை நோயால் பீடிக்கப்பட்டிருந்தார். சேடிக்குச் சிகிச்சை நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இந்த நிலையில் இவரது பெற்றோர் சேடியின் சிறுநீரகங்கள், இதயம் மற்றும் கல்லீரலை தானம் செய்து, நால்வரின் உயிரைக் காப்பாற்றியுள்ளனர். உடல் உறுப்பு தானம் பல உயிர்களைக் காப்பாற்றுகிறது, இறந்தும் இப்பூமியில் நாம் வாழ ஒரே வழி உடல் உறுப்புத் தானம் தான்.

## தீவைக் காணோம்


வடக்கு ஜப்பானின் ஹொக்கய்டோவிலிருந்து பார்வைக்கு தென்பட்ட இசாம்பே ஹனகிட்ட கொஜிமா எனும் தீவு, ஜப்பானின் கண் பார்வையிலிருந்து காணாமல் போயுள்ளது. 1987ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட இத்தீவானது கடல் மட்டத்திலிருந்து 1.4 அடி உயரத்தில் காணப்பட்டது, ஆனால் இயற்கை மாற்றங்களின் காரணமாக இத்தீவு கடலில் மூழ்கியதா? இல்லையெனில் அதன் தற்போதைய நிலை என்ன எனும் ஆராய்ச்சியில், ஜப்பானிய அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.


## ராட்சத கண்காட்சி

பொதுவாகக் கண்காட்சிகள் கண்களுக்கு விருந்தளிக்கும். ஆனால் பிரான்ஸ் நாட்டின் டூல் ஹவுஸ் நகரில் இடம்பெற்ற இயந்திரக் கண்காட்சியானது அந்நகர மக்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது. அரியானா எனும் 43 அடி உயர ராட்சத இயந்திர சிலந்தியானது இந்த கண்காட்சியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது, இதன் நிறை 38 தொன்களாகும். அதுமட்டுமன்றி 46 அடி உயர ஆஸ்டேரியன் பூச்சி, 50 அடி உயர எருது தலையுடைய ராட்சத மனித உருவ இயந்திரம் ஆகியனவும் இக்கண்காட்சியில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தகுதியறிந்து மோத வேண்டும்!

குட்டிக் கதை





ஓர் அடர்ந்த காட்டில் காட்டுப் பூனை ஒன்று சென்று கொண்டிருந்தது. மிகவும் பருத்துக் காணப்பட்ட அந்தப் பூனை, தான் புலியின் இனம் என்று எண்ணி மகிழ்ந்தது.தனது மீசையை முன்னங்கால்களால் நீவி விட்டுக் கொண்டு சுற்றும் முற்றும் பெருமை யுடன் பார்த்தது. அதைக்கண்டு சிறிய பறவையினங்கள் "கீச் கீச்" என்று கத்திக் கொண்டு ஓடியதும் அதன் கர்வம் அதிக மானது.

என்னைக் கண்டு இத்தனை பேர் பயப் படுகின்றனரே. நாமும் புலிதான் என்று மேலும் ஆனந்தம் அடைந்தது காட்டுப் பூனை. அது அங்கேயே அமர்ந்து சுற் றும் முற்றும் இரை எதுவும் சிக்காதா என்று பார்த்துக் கொண்டிருந்தது. அப் போது அங்கே நிலவிய நிசப்தத்தைக் கலைத்தவாறே மான் ஒன்று சரசரவென ஓடிவந்தது. மான் ஓடிவருவதைக் கண்ட காட்டுப் பூனை, "என்ன மானாரே! ஏன் இவ்வாறு தலை தெறிக்க ஓடி வருகிறீர்." என்று கேட்டது பூனை.

"உயிர் போகிற விசயம் பூனையாரே. புலி ஒன்று இந்தப் பக்கமாக வருகிறது. ஓடித் தப்பித்துக் கொள்ளும்." என்று போகிற வேகத்தில் சொல்லி மறைந்து விட்டது மான்.

"அட புலியும் என் இனம்தானே. இதற்கெல்லாம் பயப்படலாமா? நீ வேண்டு மானால் ஓடு." என்று இருந்த இடத்தி லேயே படுத்துக் கொண்டது காட்டுப் பூனை. சற்று நேரத்தில் அங்கே புலி வேகமாக வந்து வழியில் படுத்துக்கிடக் கும் பூனையைக் கண்டது. காட்டுப் பூனையோ நிதானமாக எழுந்து சோம் பல் முறித்தபடி, புலியே நீயும் நானும் ஒரே இனம். சொல்லப் போனால் என் னில் இருந்து உருவானவன் தான் நீ. நீ என் வழியில் குறுக்கிடக் கூடாது. மரியாதை யாக ஒதுங்கிச் செல்" என்றது கர்வமாக.

"ஏய் அற்ப பூனையே வீணாக எரிச் சலைக் கிளப்பாதே. நீ என் இனமா? இப் படி சொல்ல உனக்கு என்ன தைரியம் இருக்க வேண்டும். மரியாதையாக வழியை விடு" என்று உறுமியது புலி. "முடி யாது! முடிந்தால் என்னை வென்று விட்டுப் பின்னர் செல்." என் றது கர்வம் பிடித்த பூனை.

"ஓஹோ நீயாக வந்து உயி ரைக் கொடுக்கிறாய். விதி யாரை விட்டது. வேண் டாம் இப்போதும் உன்னை மன்னித்துவிடுகிறேன். என் தகுதிக்கு உன்னைப் போன்ற அற்ப பிராணிகளுடன் மோதுதல் குறைவா னது." என்று சொன்னது புலி. "பார்த் தாயா! என்னைக் கண்டு நீயே பயப் படுகிறாய். தைரியம் இருந்தால் மோது" என்று கர்வத்துடன் சவால் விட்டது பூனை.


புலி தன் முன்னங்காலால் ஒரே அடி தான். அந்தப் பூனை வலி தாளாமல் அலறியபடியே தொலைவில் பறந்து விழுந்தது.

"பூனையே உன்னைக் கொன்றிருப் பேன். ஆனால் அது என் தகுதிக்கு அழ கல்ல! பிழைத்துப் போ! இனியாவது உன் தகுதிக்கு ஏற்றவருடன் மோது. என்று சொல்லிவிட்டுச் சென்றது புலி. காட்டுப்பூனை அதன் பின் யாருடைய வம்புக்கும் போவதே இல்லை.

# நட்சத்திரப் பெண்



- அமெரிக்க நாட்டைச் சேர்ந்த பெண் வானியலாளரும் விண்மீன் களின் தொலைவைத் துல்லிய மாகக் கணிக்கும் வழியைக் கண் டறிந்தவருமானஹென்றியேட்டா ஸ்வான் லீவிட் (Henrietta Swan Leavitt), மசாசூசெட்சில் உள்ள லான் கேச்டெர் என்ற இடத்தில் 1868 இல் பிறந்தார்.
- பள்ளிப் படிப்பை முடித்த பிறகு, ரெட்கிளிஃப் கல்லூரியில் கிரேக் கம், நுண்கலைகள், தத்துவம், பகுப்பாய்வு வடிவியல் மற்றும் நுண்கணிதம் என்பனவற்றைப் பயின்று பட்டம் பெற்றார். கல் லூரி இறுதி ஆண்டில் வானியல் பாடத்தைத் தெரிவு செய்தார். எதேச்சையாக எடுத்த முடிவு என் றாலும், பின்னாளில் வானியலே இவரது வாழ்க்கையானது.
- திடீரென்று ஏற்பட்ட காய்ச்ச லின் பாதிப்பால் கேட்கும் திறனை நிரந்தரமாக இழந்தார். 1880 ஆம் ஆண்டு முதல் ஹார்வர்ட் வான் ஆராய்ச்சி நிலையத்தில் எடுக்கப் பட்ட பல ஆயிரக்கணக்கான புகைப் படத் தட்டுகளை ஆய்வு செய்ய நியுமிக்கப்பட்ட ஏராளமான பெண் களில் ஒருவராகப் பணியாற்றி னார்.
- அந்தப் புகைப்படத் தட்டுகளில் பல விண்மீன்கள், நெபுலாக்கள் போன்றவற்றின் நிறமாலை உள் ளிட்ட விவரங்கள் இருந்தன. அங்கே நட்சத்திரங்களின் ஒளியை அளவிடும் பணியில் ஈடுபட்டார்.
- காலப்போக்கில் மாறுபடும் நட்சத் திரங்களை (variable stars) ஆய்வு செய்யும் பணியையும் ஏற்றார்.
- ஒரு நட்சத்திரத்தின் ஒளி மாறு பாட்டுக் காலம் என்பதை இவர் வரைபடம் மூலம் வகுத்தார். நாம் இருக்கும் இடத்திலிருந்து அதிதொலைவில் உள்ள அண்டங் கள் மற்றும் ஒளிமிகு நட்சத்தி ரங்களின் தொலைவை துல்லியமா கக் கணிக்கும் வழிமுறையைக் கண்டறிந்தார்.
- இவர் தன் வாழ்நாளில் 2,400 வேரியபிள் விண்மீன்களைக் கண் டறிந்தார். புற்றுநோய் பாதிப் பால் இவர் மரணமடைந்ததை அறியாத, சுவீடன் கணிதவியலா ளர் ஒருவர் இவரது பெயரை நோபல் பரிசுக்காக பரிந்துரைக்க முன்வந்தார்.
- உயிரிழந்த ஒருவருக்கு நோபல் பரிசு வழங்கப்படுவதில்லை என்ப தால், இவரது பெயர் பரிசீலிக் கப்படவில்லை. நிலவில் உள்ள சிறுகோள், குழிப்பள்ளம் எனப் பல வற்றுக்கு இவரது பெயர் சூட்டப் பட்டுள்ளது. 20 ஆம் நூற்றாண் டின் இணையற்ற பெண் வானி யலாளர் ஹென்றியேட்டா ஸ்வான் லீவிட் 1921ஆம் ஆண்டு மறைந் தார்.



# அப்பிள் பழமும் அறிவியலும்

ஐசாக் நியூட்டன் என்கின்ற
அறிஞர் சிறந்த விஞ்ஞானி...
தேசப் பற்று மிகக் கொண்ட
திறமை மிக்க மெய்ஞானி...

மரங்கள் நிறைந்த பூங்காவில்
மகிழ்வாய் ஒருநாள் அமர்ந்திட்டார்...
வரமாய் இயற்கை தந்திட்ட
வளங்களைக் கண்டு ரசித்திட்டார்...

'பட்'டென அப்பிள் பழமொன்று
பக்கத்தில் வந்து விழுந்திடவே...
சட்டென அவரும் அதைப்பார்த்தார்
சற்றே ஆழ்ந்து சிந்தித்தார்...

மரத்தில் உள்ள காய்கனிகள்
மண்ணின் மீது விழுவது ஏன்?
தரையில் இருந்து வீசும் பொருள்
தரைக்கே மீண்டும் வருவது ஏன்?

சிந்தனைக் குதிரை அவிழ்ந்தோட
சிறப்பாய் அவரும் யோசித்தார்!
அந்தச் சிந்தனை தெளிவு பெற
அவர்க்குக் கிடைத்தது விடையொன்று!

பொருட்களை ஈர்க்கும் பெரும் சக்தி
பூமிக்கு உண்டெனத் தெரிந்திட்டார்..
அரிய செய்தியை நியூட்டனுமே
அப்பிள் பழத்தால் அறிந்திட்டார்...

அறிவைக் கொண்டு சிந்தித்தால்
அனைவரும் புதுமைகள் படைத்திடலாம்....
அறிவியல் இனிக்கும் கரும்பாகும்
அகிலம் நமக்குத் துரும்பாகும்.....

# வாழ்த்தலாம் வாங்கோ

ஹாய் குட்டீஸ்!

நவம்பர், டிசம்பர் மாதங்களில் பிறந்தநாள் கொண்டாடும் சிறார்களின் விவரங்களை, இப்படிவத்தில் பூர்த்தி செய்து, வெட்டி, தெளிவான புகைப்படத்துடன் அனுப்புங்கள். உங்களை வாழ்த்துவதற்கு எதிரொலி தயாராக உள்ளது.

பெயர் : ____________________

பிறந்த திகதி : ____________________

வயது : ____________________

முகவரி : ____________________

____________________

தொலைபேசி இலக்கம் : ____________________


வாழ்த்தலாம் வாங்கோ
அம்பலம் பதிப்பகம்,
இல. 241,
கைதடி - மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
**அல்லது**
ethirolimedia@gmail.com

# மின்மினிகள் ஒளிர்வது ஏன்?

அறிவோம்



மின்மினிப் பூச்சியின் வயிற் றின் பின்பகுதியில் ஒளிரக்கூடிய உறுப்பு இருக்கிறது. ரசாயன மாற் றத்தால் உயிர் ஒளிர்வு (Bioluminscence) நடைபெறுகிறது. லூசி ஃபெரேஸ் என்ற நொதி, லூசி ஃபெரினாக மாற்றம் அடைந்து மக்னீசியம் அயனிகள், அடினோ சின், ஒக்ஸிசன் ஆகியவற்றுடன் சேர்ந்து ஒளியை உருவாக்குகின் றன. முதிர்ச்சி அடைந்த மின் மினிப் பூச்சிகள் எச்சரிக்கை செய் வதற்காகவே ஒளியை உமிழ்வ தாக முன்பு சொல்லப்பட்டது. ஆனால், ஆண் மின்மினியும் பெண் மின்மினியும் இணைந்து இனப் பெருக்கம் செய்வதற்கு அழைப்பு விடுப்பதற்கே இந்த ஒளியை உமிழ் வதாக தற்போதைய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.



# ‘கை’ காணாமல் போவதால் கடும் அதிருப்தியில் ‘ஜீனியர்ஸ்’

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மஹிந்தவின் கரங்களை மீண்டும் பலப்படுத்தும் வகையில் அரசியல் முடிவுகளை எடுப்பதால், சுதந்திரக்கட்சியின் மேலும் சில சிரேஸ்ட உறுப்பினர்கள் கடும் அதிருப்தியில் இருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

பௌஸி, பியசேன கமகே போன்ற சு.கவின் மூத்த தலைவர்கள் தமது எதிர்ப்பை வெளிப்படையாகவே பதிவு செய்துள்ளதுடன், சுயாதீனமாக இயங்கவுள்ளதாகவும் அறிவித்துள்ளனர்.

இந்தநிலையிலேயே ஏனைய சில உறுப்பினர்களும், கட்சித் தலைவரான மைத்திரிமீது கடும் சீற்றத்துடன் இருக்கின்றனர். நேற்று முளைத்த கட்சியொன்றுக்காக, பிரதான கட்சியான சுதந்திரக்கட்சியை வீழ்த்தும் வகையில் முடிவுகளை எடுப்பதாக விமர்சித்து வருகின்றனர்.

அதேவேளை, மைத்திரி பக்கமுள்ள எம்.பிக்கள் சிலரும் எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் சங்கமிக்ககூடும் என அரசல் புரசலாகக் கதை அடிபடுகின்றது. ■

# மாமாவுக்காக சபையில் போராடிய மருமகன்



நாடாளுமன்றத்தில் சபாநாயகர் பதவியை வகிக்கும் கருஜய சூரிய, நவீன் திஸாநாயக்கவின் மாமனாராவார். கருவின் மகளையே அவர் கரம்பிடித்துள்ளார்.

கரு ஐக்கிய தேசியக்கட்சியில் இருக்கும்போது, நவீன் மஹிந்தவுடன் சங்கமித்திருந்தார். மாமாவின் ஆலோசனையின் பிரகாரம் மீண்டும் ஐ.தே.கவுக்கு வந்த அவருக்கு தேசிய அமைப்பாளர் பதவி வழங்கப்பட்டது.மாமா, மருமகன் என்றாலும் அரசியலில் அவர்கள் அதை வெளிக்காட்டிக்கொள்வதில்லை.

நாடாளுமன்றத்தில் கடந்த 15 ஆம் திகதி கடும்மோதல் ஏற்பட்டது. ஆளும், எதிரணி எம்.பிக்கள் அடிதடியில் இறங்கியதால் அதி உயர்சபை அடிதடி சபையாக மாறியது. சபாபீடத்தை முற்றுகையிட்ட மஹிந்த அணியினர், சபாநாயகர்மீது தாக்குதல் நடத்துவதற்கு முற்பட்டனர். மறுமுனையில் சபாநாயகரைக் காப்பதற்காக ஐ.தே.க. எம்.பிக்களும் படையெடுத்துவந்தனர்.

குறிப்பாக பின்வரிசையிலிருந்து சபாபீடத்தைநோக்கி ஓடிவந்த நவீன் திஸாநாயக்க, தனது மாமாவான சபாநாயகரைச் சூழ்ந்து அவருக்கு பாதுகாப்பு அளித்தார். தாக்கமுற்பட்ட மஹிந்த அணி உறுப்பினர்களுடனும் கடும் சொற்போரில் ஈடுபட்டார்.






# ரணிலுக்காக ஆசனத்தை விட்டுக்கொடுத்த திகா!

பெரும் அமளி துமளிக்கு மத்தியில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை கடந்த 14 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதையடுத்து ஐக்கிய தேசியக்கட்சியும், அதன் பங்காளிக் கட்சிகளும் வெற்றிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டன.

சபை ஒத்திவைக்கப்பட்ட கையோடு ஐக்கிய தேசிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும், பங்காளிக்கட்சிகளின் தலைவர்கள், நாடாளுமன்ற வளாகத்தில் ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தினர். ஆளுங்கட்சி எம்.பிக்களும், கூட்டமைப்பு எம்.பிக்களும் குறித்த அறைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

நாடாளுமன்ற குழு அறையில் மேற்பகுதியில் பங்காளிக்கட்சிகளின் தலைவர்களுக்கே ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதான கதிரையில் அமர்ந்து கருத்து வெளியிட்ட பின்னர், ஏனைய தலைவர்களுக்கு வாய்ப்பளிப்பதற்காக தனது கதிரையிலிருந்து எழுந்து அருகிலிருந்த ஆசனத்தில் அமர்ந்தார்.

எனினும், அந்த ஆசனமானது ஏனைய ஆசனங்களைவிட சிறிதாக இருந்தது. இதனால், அதில் அமர்ந்த பின்னர் பிரதமர் குள்ள மனிதர் போல் காட்சி தந்தார். இதைக் கண்ட பின்னர் தனது ஆசனத்தை பிரதமருக்கு வழங்கவிட்டு, மேடையிலிருந்து கீழே இறங்கினார் திகா. செய்தியாளர் மாநாடு முடிவடைந்த பின்னர் திகாவின் முதுகில் தட்டி நன்றி தெரிவித்தார் ரணில். ■



# வடிவேல் சுரேஸை ‘வச்சிசெய்யும்’ மலையக நெட்டிசன்கள்!

தாவல் அரசியலுக்கு பேர்போன வடிவேல் சுரேஸுக்கு எதிராக முகநூலில் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுவருகின்றன. மலையக இளைஞர்களால் அவருக்கு எதிராக கடும் சொற்கணைகள் தொடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக தமிழ்நாட்டுப் பாணியில் ‘மீம்ஸ்களை’ தயாரித்து - சமூகவலைத்தளங்கள் ஊடாக கலாய்த்து, பார்ப்பவர்களுக்கும், வாசிப்பவர்களுக்கும் சிரிப்பு விருந்தளிக்கின்றனர் மலையக நெட்டிசன்கள்.

இவற்றுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் வடிவேல் சுரேஸின் ஆதரவாளர்களாலும் கருத்துகள் முன்வைக்கப்பட்டுவருவதால் கடந்த வாரம் முழுவதும் சமூகவலைத்தளங்களில் ஹிட்டான அரசியல்வாதியாக அவர் வலம்வந்தார்.

அங்குமிங்குமாக தவளை அரசியல் நடத்திவரும் வடிவேல்சுரேஸ், ஐ.தே.க.வில் மீண்டும் எவ்வாறு இணைந்தார் என்பதைப் பார்க்கலாம்.

நாடாளுமன்றமானது பெரும் பரபரப்புக்கு மத்தியில் கடந்த 14 ஆம் திகதி 10 மணிக்கு சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது. ஆரம்பம் முதல் சபை ஒத்திவைக்கப்படும்வரை அவைக்குள் அமளி துமளி நீடித்தது. இதனால் கூச்சல் குழப்பத்துக்கு மத்தியிலேயே வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்ட பின்னர், சபை வளாகமானது பெரும் பரபரப்பாகவே காட்சி தந்தது. ஐக்கிய தேசியக்கட்சியினதும், அதன் பங்காளிக்கட்சிகளினதும் எம்.பிக்கள், குழுஅறைகளை நோக்கிப் படையெடுத்தனர்.

அவ்வேளையில், ரவிகருணாநாயக்க, ஹரின் பெர்ணான்டோ ஆகியோருக்கு அழைப்பை ஏற்படுத்திய வடிவேல் சுரேஸ் எம்.பி., தாம் மீண்டும் ஐ.தே.கவுக்கு ஆதரவளிக்கும் நிலைப்பாட்டை அறிவித்தார்.

இதையடுத்து அவசரமாக இயங்கிய ரவி கருணாநாயக்க, திகாம்பரத்துடன் வடிவேலை தொலைபேசியூடாக பேசவைத்தார். மனோ கணேசனுடன் ஹரின் கலந்துரையாடினார்.

குழு அறைக்கு முன்னால் இவ்வாறு சந்திப்பு நடந்துக்கொண்டிருக்கையில், மின் உயர்த்தி மூலம் அவ்விடத்துக்கு வந்த சுரேஸை ஐ.தே.க. உறுப்பினர்கள் வரவேற்றனர்.

அதன்பின்னர் ஊடகவியலாளர் மாநாடு ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. பின்வரிசையில் அமர்ந்திருந்த வடிவேல் சுரேஸை, சஜித் பிரேமதாஸ முன்வரிசைக்கு அழைத்தார். அவ்வேளையில் ரணிலுடன் ஏதோ இரகசியம் பேசினார். ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துவெளியிட்டிருந்தாலும், தனிப்பட்ட ரீதியில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுவதை வடிவேல் சுரேஸ் தவிர்த்தார். ■



● வேதநாயகம் தபேந்திரன்



# ஊர் கூடி தேர் இழுத்த பொற் காலங்கள்

**களம் 1**

ஆவணி மாதம் வந்தது. மாரி காலம் கிட்டப் போகிறது. வீடு மேய வேண்டும். பனை யோலைகள் வெட்டப்பட்டன. அவை முறையாக அடுக்கி உழக்கி விடப்பட்டன. அயன் பொக்சால் அயர்ன் பண்ணிய உடுப்புப் போல அவை நேர்சீராக இருக்கும்.

வீடு மேய்வதற்கு அயல் அட்டத்தில் உள்ள சொந்தங்கள் எல்லாம் ஒரு நாளில் அதிகாலை நிலம் வெளித்த கையுடன் கூடினார்கள். வெறும் தேத் தண்ணீரும் (பிளேன் ரீ) பனங்கட்டியையும் சிவகாமி அம்மா கொண்டு வந்து எல்லோருக்கும் கொடுத்தார்.

அவற்றை அருந்தி விட்டு வீட்டின் கூரை மீது ஏறி விறுவிறுவென பழைய மேய்ச்சல் பனை ஓலைகளை வெட்டும் வேலையில் நாலுபேர் இறங்கினார்கள்.

வெட்டிய பழைய மேய்ச்சல் பனையோலைகள் படபடவென கீழே விழுத்தப்பட்டன. அவற்றைப் பொறுக்கிப் பின் வளவில் அடுக்கும் வேலையில் ஓர் அணிப் பெண்கள் ஈடுபட்டனர். இன்னுமொரு அணி பெண்கள் நிலத்தைக் கூட்டித் துப்புரவாக்கும் பணிகளைத் தொடங்கினார்கள்.

உழக்கி அடுக்கிப் பதத்துக்கு வந்த பனை யோலைகளை மேய்ச்சலுக்கு ஆயத்தமாக ஆண்கள் அணி ஒன்று கொண்டு வரத் தொடங்கியது. வெய்யில் உச்சிக்கு ஏற முந்தி மேய்ச்சல் முடிக்க வேண்டுமெனப் பரபரப்பாக பணிகள் தொடங்கியன. கிணற்றடியில் ஊற வைத்த பனம் ஈக்கு மேய்ச்சல் நடக்கும் இடத்துக்கு வந்தது.

ஆளுக்கு ஒரு கட்டுக் கொடுபட அவை சாறக் கட்டுடன் இடுப்பில் கட்டப்பட்டது.

கூரைப் பனை மரங்கள் சீர் பார்க்கப்பட்டன. அவற்றில் மேய்ச்சலுக்குப் பொருத்தமாக இழைக் கயிறுகள் கட்டப்பட்டன.

பனையோலைகள் கீழிருந்து மேலாக போடப் போட மேய்ச்சல் பணிகள் வெகு உற்சாகமாக நடந்தன. இடையிடையே ஊர்ப் புதினங்கள் முஸ்பாத்திகள் கதைபட்டு பரபரப்பாக மேய்ச்சல் வேலைகள் நடந்தன. உச்சி வெய்யில் தலையில் சுட முன்பாக மேட்டுக்குக் கூரை கட்டும் பணிகளும் முடிந்தன.

வேலை முடிய காலைச் சாப்பாடாக சுடச்சுடத் தோசையும் தாளித்த சம்பலும் வழங்கப்பட்டது.

தோசையின் இடையில் தாளித்த சம்பல் இருந்தது. அது ஊறித் தோசையில் இருக்கத் தோசையை பிய்த்து பிய்த்துச் சாப்பிடும் போது அது ஒரு தனிச் சுவை தான்.

பிடுங்கிய பழைய கூரைகள் தோட்டத்திற்கு எருவாகப் போட வண்டிலில் ஏற்றப்பட்டது.

அடுத்த நாள் இன்னுமொரு வீட்டில் வீடு மேய்ச்சலுக்குச் சென்றார்கள். இப்படியாக குடும்பங்கள் பல ஒன்று சேர்ந்து தமது வீடுகளை மேய்ந்துகொண்டார்கள்.

ஊர் கூடித் தேர் இழுத்த ஒற்றுமைப் பண்பாட்டின் மகிழ்வை இன்று கல் வீடுகளில் தொலைத்து விட்டோம். அது மட்டுமா? பணக்கார வாழ்க்கை வாழ ஆசைப்பட்டு பணக்கார வருத்தங்களாகிய பிறசர், சலரோகம் ஆகியவற்றை எல்லாம் இளமையில் கண்டு மருந்துக் குளிசைப் போத்தல்களுடன் வாழ்வின் பொழுதுகள் கரைகிறன.

**களம் 2**

புரட்டாதி மாத முதல் மழை கண்டவுடன் பனம் பாத்தி போடுவதற்கு உறவுகள் கூடியது. நாளுக்கு ஒரு இடமென முறை வைத்து அதிகாலை வேளையில் பாத்தி போடும் படலம் தொடங்கியது:

மணல் பாங்கான தறை உள்ள இடத்தில் சென்ற வருடம் பாத்தி போட்ட இடத்தில் இவ் வருடமும் பாத்தி போடப்பட்டது.

தைப் பொங்கல் கழிந்து சில நாள்களின் பின்னர் பாத்தி கிண்டும் படலம் தொடங்கியது.

ஊர் கூடியது. உறவுகள் சேர்ந்தனர். ஆடிப்பாடி வேலை செய்தால் களைப்பிருக்காது என்பார்கள். அது போல உறவுகள் ஊர்க் கதைகள், உறவுக் கதைகள் பல சொல்லிப் பாத்தி கிண்டும் வேலை தொடங்கியது. சிறுசுகள் முளைப் பூரான், தண்ணீர்ப் பூரான் வெட்டுவதற்காக வெட்டுக் கத்தியுடன் கூடினார்கள்.

பாத்தி கிண்டி பனங்கிழங்கு எடுக்கும் வேலைகள் மிகவும் உற்சாகமாகத் தொடங்கியது.பனங்கிழங்கில் தடித்த முதல் தரமான கிழங்குகளை சிவகாமி அம்மா எடுத்து மண்பானையில் வைத்து பனஞ்சிராய் ஊமல் கொட்டைகள், கொக்காரைகள் போட்டு அடுப்பை எரித்து அவிக்கத் தொடங்கினார்.

பாத்தி கிண்டும் வேலைகள் ஒரு பக்கமும் சிறுசுகளின் பூரான் வெட்டும் வேலைகள் ஒரு புறமும் நடக்க, பனங்கிழங்குகள் அவிந்து முடிந்தது.

அவிந்த கிழங்குகளை ஆறப் போட்டு பின்னர் அவற்றைத் தோல் உரித்து துண்டு துண்டாக்கும் படலத்தை சில பெண்கள் பார்த்தார்கள்.

கிழங்கு துண்டாக்கிய பின்னர் மர உரல் ஒன்றில் மிளகு, நற்சீரகம், போட்டு உலக்கையால் இடிக்கத் தொடங்கினார்கள். பின்பு அளவாக உப்பைச் சேர்த்து இடித்த பின்பு பனங்கிழங்குத் துண்டுகளையும் போட்டு இடிக்கத் தொடங்கினார்கள்.

நன்றாகத் துவைத்து இடித்த பின்பு சிவகாமி அம்மா அவற்றை உரலில் இருந்து

எடுத்து வட்டா (பாத்திரம்) ஒன்றில் போட்டார். பின்பு அவற்றை அளவான சிறு உருண்டைகளாக்கி சாப்பிடக் கொடுத்தார்.

ஆஹா ஆஹா அது என்ன அருமையான சாப்பாடு என புழுகிப் புழுகிச் சாப்பிட்டார்கள்.

இப்படியாக பாத்தி கிண்டும் நாள்களில் எல்லாம் ஒவ்வொரு குடும்பமும் சேர்ந்து மகிழ்ந்து கூட்டுறவாக வேலை செய்தார்கள். ஊர் கூடித் தேரிழுத்த மகிழ்வான இந்தப் பொழுதுகளை நிலத்திலும் புலத்திலும் அசைபோட்டபடி எமது தலைமுறைகளின் காலம் கழிகிறது. கொடுத்த வைத்த வாழ்க்கை ஒன்றை வாழ்ந்த தலைமுறையின் மன நிறைவு உயிரின் இறுதி மூச்சு வரை இருக்குமல்லவா ?

**களம் 3**

அக்காவுக்கு கல்யாணம். ஆவணியில் நாள் எடுத்தாகி விட்டது. பள்ளிக் கூட லீவு நாளில் கல்யாணம் வந்தது. சிறுசுகளான எமக்குக் கொண்டாட்டம் தான். ஒளித்துப் பிடித்து விளையாடுதல்.

மாபிள் அடித்தல். கிட்டிப் புள்ளு, கிளித்தட்டு என விளையாட்டுக்கா பஞ்சம். ரியூசன், ஸ்கொலசிப் எக்ஸாம் என எதுவுமே தெரியாத காலமல்லாவா.

ஓய்வுக்கும் மகிழ்வுக்கும் ஏது பஞ்சம். மனம் ஆனந்த தாண்டவமாடியது. ஊரிலுள்ள எம் தரவளி சிறுசுகள் எல்லாமே பறையறிவித்துக் கொண்டோம். விடுமுறையின் விளையாட்டு, மகிழ்வு குறித்து மகிழ்ந்தோம். எப்பயடா அந்த ஆவணி விடுமுறை வருமென ஆவல் பட்டோம்.

ஊர் கூடியது. உறவுகள் இணைந்தன. சிறுசுகள் நாமும் எங்கள் விளையாட்டு மகிழ்வுகளில் பொழுதுகளைக் கரைத்தோம். நல்ல நாள் பார்த்து பந்தல் போட வேண்டும். ஊரில் உள்ள பந்தல் கால்கள் எல்லாம் ஒவ்வொன்றாக வீட்டுக்கு வந்தன.

நாள் கால் போட்டு பந்தல் போடும் படலம் தொடங்கியது. பந்தல் மேயவென கிடுகுகள் பறிக்கப்பட்டன. அவை வேயப்பட்டன. பலகாரம் சுடும் படலம் தொடங்கியது. அரியதாரம், முறுக்கு, பயித்தம் பணியாரம் என சுவையும் உடலுக்கு நலமும் தரும் பலகாரங்கள் புத்தம் புதுத் தேங்காய் எண்ணையில் சுடும் படலம் தொடங்கியது.

முற்றிக் காய்ந்த பூவரசம் விறகுகள், ஊமல் கொட்டைகள், பழைய பனங் கொட்டுகள் யாவும் விறகாக வந்து குவிந்தன. அடுப்பு முளாசி எரிய எரிய கொதித்துத் துள்ளும் தேங்காய் எண்ணெய்யில் பலகாரங்கள் போடப்பட்டு பக்குவமாக எடுக்கப்பட்டன.

பந்தல் போடுதல், பலகாரம் சுடுதல் யாவும் நிறைவுபட அக்காவின் கல்யாண நாளும் வந்தது.

இராக் கல்யாணம். இரவில் தான் கல்யாண நிகழ்வு. அயலில் நாலைந்து வீடு தள்ளித் தான் மாப்பிள்ளையான அத்தானின் வீடு. பொழுது பட பெற்றோ மக்ஸ் பிடித்தபடி ' மாப்பிளைத் தோழனாகிய நான் உறவுகளுடன் இணைந்து கால் நடையாக மாப்பிளை வீடு போனோம். மாப்பிள்ளையை அழைத்து பலகாரம் பெட்டி, சீர் 'வரிசைகள் முறைப்படி நிகழ்ந்து மாப்பிள்ளை மணவறைக்கு அழைத்து வரப்பட்டார்.

இரவு எட்டு மணியளவில் குருக்களின் சடங்குகள் முறைப்படி நிகழத் திருமணவைபவம் இனிதாகவே நிறைவெய்தியது.

ஊர் முழுவதும் மகிழ்வாக மங்கல நிகழ்வானது போர் தந்த அவதி எமது திருமணங்களின் இரவுக் கொண்டாட்டங்களைப் பகலாக்கிப் போட்டதா?

வீடுகளில் கூடிய உறவுகள் வீதிக்கு வந்து திருமண மண்டபங்களில் பணத்தைக்கொட்டும் பகட்டாகிப் போனதா?

ஊர் கூடித் தேர் இழுத்த அந்த ஒற்றுமையான காலங்கள் இனி வெறும் கனவா ? உலக மயமாக்கம் சுதேசியத்தின் இனிமைகள் யாவற்றையும் விழுங்கும் ஒரு கொடூர அரக்கனா ?

■

# மலையகம் தந்த மாவீரம்!



மின்மினி

"நீர் இன்றி அமையாது உலகு
உங்கள் நினைவின்றி விடியாது பொழுது
கல்லறை முன் கைகள் தொழும்போது – நாங்கள்
தமிழர் என்று தலைநிமிர்ந்து கொள்ளும்"

ஆம். மண்டியிட்டு வாழ்வதைவிட, சண்டையிட்டு மடிவதே மேலானது என்பதை உலகுக்கு உணர்த்தியவன்தான் வீரத் தமிழன். அதுமட்டுமல்ல, இறுதிமூச்சு இருக்கும்வரை இலக்கை அடைய தன்மானத்துடன் தளராது போராடுபவன் என்ற பெருமையும் தமிழனுக்கே இருக்கின்றது.

இதை சொல்லளவில் மட்டும் உச்சரிக்காது, செயலிலும் செய்துகாட்டியவர்கள்தான் விடுதலைப்புலிகள். தம்மைக் காப்பதற்காக அவர்கள் ஆயுதம் ஏந்தவில்லை. தம் இனத்தைக் காக்கவே களமாடினார்கள். காவல் தெய்வங்களாக வலம் வந்தார்கள். அப்படிப்பட்ட மாவீரர்களை எம் உடலில் இறுதிமூச்சு இருக்கும்வரை எம்மால் மறந்திடமுடியாது. மறந்திடவும் கூடாது.

விடுதலைப்புலிகள் என்ற அமைப்பு முப்படைகளுடனும் வீறுநடைபோடுவதற்கு ஒற்றுமையே பக்கபலமாக இருந்தது. அது சிதைவடையத் துவங்கிய பின்னர்தான் தமிழர்களின் ஆயுதப்போராட்டமும் மௌனிக்கத் தொடங்கியது.

தற்போதுகூட ஒற்றுமையின் முக்கியத்துவத்தை உணராமல் தமிழர்கள் பல்வேறு கோணங்களில் பிரிந்து நிற்கின்றனர். பிரதேசவாதம் பேசுதல், குலபேதம் பார்த்தல், அரசியல் குத்துவெட்டுக்கள் என்ற அசிங்கமான சம்பவங்கள் அனைத்தும் எங்களின் கண்முன்னால் இடம்பெற்றுவருகின்றன. வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்களையும், மலையகத் தமிழர்களையும் பிரித்தாளும் சூழ்ச்சி வகுக்கப்பட்டு மிகக்கச்சிதமாக இனவாத அரசினால் அரங்கேற்றப்பட்டு வருகிறது. இந்தப்பிடிக்குள் தமிழர்கள் சிக்கக்கூடாது.

ஈழவிடுதலைப்போராட்டத்தின் வரலாற்றை விரித்துப்பேசுகின்றபோது ஒரு சிலரால் மலையகத் தமிழர்கள் மலினப்படுத்தப்படுவதுண்டு. மலையகத் தமிழர்கள் ஈழ விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்கவில்லை என்றும் அவர்களுக்கு போராட்டக்குணம் இல்லை என்றும் குற்றஞ்சாட்டப்படுவதுண்டு. வீரம் என்றால் என்னவென்றே தெரியாத மலையகத்தவர்கள் கொத்தடிமைகளாக வாழும் கூட்டம் என ஏளனமாகப் பேசப்படுவதுமுண்டு.

அத்தகையவர்களுக்கு ஈழப்போராட்டத்தில் மலையகத் தமிழர்களின் பங்களிப்பை எடுத்துரைப்பதே இப்பத்தியின் நோக்கமாகும்.

"1992 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழர் தாயகமெங்கும் போர் மேகம் சூழ்ந்து கிடந்தது. தமிழர்களுக்கு எதிரான ஒட்டுமொத்த அடக்குமுறைகளும் சிங்கள இனவாத அரசினால் கட்டவிழ்த்துவிடப்பட்டன. இதனால், ஏற்பட்ட இழப்புகளை வெறும் வார்த்தைகளால் மட்டும் விபரித்துவிட முடியாது!

வறுமை தலைவிரித்தாடியதால் குடும்பச் சுமையை தாங்குவதற்காக மலைநாட்டிலிருந்து பலர் கொழும்பை நோக்கிப் புறப்பட்டார். அவ்வாறு கொழும்பு நோக்கி புறப்பட்டு வந்தவர்களில் ஒருவன்தான் சுதாகரன். அங்கு கடையொன்றில் வேலை பார்க்கத் தொடங்கினான்.

தினமும் கடைக்கதவு அடைக்கப்பட்ட பின்னர், இரவுப்பொழுதில் கூடவிருப்போருடன் கதைத்துப் பேசி நேரத்தைக் கழித்துவிட்டு உறக்கத்துக்குச் செல்வதுதான் வழமை.

ஆனால் அன்று மட்டும் எல்லோரும் வானொலியைச் சுற்றியிருந்து எதையோ கூர்ந்து கேட்டபடியிருந்தார்கள். அன்றைய நாள் பி.பி.சி வானொலியில், செய்தியாளர் ஆனந்தி, தமிழீழத் தேசியத் தலைவரை சந்தித்துப் பெற்ற நேர்காணல் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. சுதாகரனும் கூட இருந்தவர்களுடன் இணைந்து தலைவரின் எண்ணங்களை செவிமடுத்தான்.

தலைவர் உதிர்த்த வார்த்தைகள் அவனை மெய்சிலிர்க்க வைத்தன. அன்றுதான் தமிழர்களுக்கென்றொரு தலைமை இருப்பதும், ஒரு கட்டுக்கோப்பான விடுதலைப் போராட்டம் நடந்துகொண்டிருப்பதையும் அவன் அறிந்துகொண்டான். அவனது நெஞ்சில் புதிய உத்வேகம் உருவானது. தலைவர் மீதும் விடுதலைப்போராட்டம் மீதும் இனம்புரியாத பற்று அவனுக்குள் கருக்கொண்டது.

அன்றிலிருந்து அவனுக்குள் மூண்ட விடுதலைத் தீ 1994 இல் அவனை தாயகம் நோக்கி நகர்த்தியது. பதுளையில் இருந்த அம்மாவிடம், "கொழும்பில் அடிக்கடி பிடிக்கிறாங்கள் அம்மா, நான் யாழ்ப்பாணம் போறன்" - என்று சொல்லி அம்மாவைச் சமாளித்துவிட்டு யாழ்ப்பாணத்துக்குச் சென்று இயக்கத்தில் இணைந்து கொண்டான்.

இந்தச் சுதாகரன் பின்னர் போராளியாகி களங்களிலே துணிச்சல் மிக்க ஒரு படைவீரனாக மாறினான்.

அது "ஜெயசிக்குறு" படை நடவடிக்கை மூலம் சிங்களப் படைகள் வன்னியை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த காலம். முன்னேறிவரும் சிங்களப் படையை வழிமறித்து மாங்குளத்தில் சண்டைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஆதித்தன் (இயக்கப்பெயர்) அந்தச் சண்டைக் களத்தில் 82 எம்.எம். எறிகணைச் செலுத்தி ஒன்றுடன் சிங்களப் படைக்கெதிராக சண்டையிட்டுக் கொண்டிருந்தான். அந்த மோட்டார் அணியில் பொறுப்பாளனும் அவனே. எத்தகைய நெருக்கடியான சூழல் ஏற்படினும், முடிவெடுத்துச் செயற்படுவது அவன் கையிலேயே தங்கியிருந்தது.

சண்டை கடுமையானதாயிருந்தது. "ஓயாத அலைகள் 2" என்ற பெருந்தாக்குதலை கிளிநொச்சிப் படைத்தளம் மீது புலிகள் மேற்கொண்டிருந்ததால், குறிப்பிட்ட அளவு போராளிகள்தான் அன்றைய சண்டையை எதிர்கொண்டனர்.

சண்டையின் ஒரு கட்டத்தில் புலிகளின் முன்னணி நிலைகளை ஊடறுத்து படைகள் தமிழர் பகுதியை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தன. தொலைத்தொடர்புக் கருவி மூலம் இராணுவம் நிற்கும் நிலைகளைக் கேட்டறிந்து மோட்டார் மூலம் எறிகணைகளை அவன் வீசிக்கொண்டிருந்தான்.

நீண்ட நேரமாகச் சண்டை தொடர்ந்தது. நேரம் செல்லச் செல்ல எறிகணையை வீசுவதற்கான தூரவீச்சு குறைந்துகொண்டே போனது. இந்தத் தரவின் மூலம் இராணுவம் எங்களை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கின்றதென்பதை ஆதித்தன் அறிந்து கொண்டான். அந்தக் களமுனையில் ஒரு நெருக்கடியான சூழல் உருவாகிக்கொண்டிருந்தது. ஆனால் ஆதித்தன் பதற்றப்படாமல் கூடவிருந்த போராளிகளுக்குத் தெம்பூட்டியபடி இடைவிடாமல் தாக்குதலை நடத்திக் கொண்டிருந்தான். எறிகணை வீச்சுக்கான தூரம் தொடர்ந்தும் குறைந்தபடியிருந்தது.

இன்னும் கொஞ்ச நேரம் தொடர்ந்து தாக்குதல் நடத்தினால் அவனது மோட்டார் நிலை எதிரியால் முற்றுகையிடப்படும் என்று அவனால் கணிப்பிட முடிந்தது. அப்படி முடிவெடுத்தால் எறிகணைகளை எதிரியிடம் இழக்கவேண்டிய நிலை ஏற்படும். அந்தநேரம் ஆதித்தன் ஒரு அதிரடி முடிவை எடுத்துக்கொண்டான். கடைசியாக மோட்டாரை அழிப்பதற்கு ஒன்றும், தங்களை அழிப்பதற்கு ஒன்றுமாக இரண்டு எறிகணைகளை வைத்துவிட்டு, ஏனையவற்றை எதிரி முன்னேறும் பகுதி நோக்கி விரைவாக அடித்து முடிப்பதென்பதே அந்த முடிவு.

இப்போது எதிரியின் தாக்குதல் இவர்களை அண்மிக்கின்றது. எதிரியின் துப்பாக்கிச் சன்னங்கள் இவர்களின் நிலையை நோக்கியும் சரமாரியாக வரத்தொடங்கியது. மிகக் கிட்டவாக எறிகணைகள் பறந்து வந்து கொண்டிருந்தன.

கடைசியாக 200 மீற்றர் வீச்செல்லைக்கு எறிகணையை அடிக்கும் கட்டளை கிடைத்தது. இராணுவம் துப்பாக்கிச் சண்டைக்கான வீச்செல்லைக்குள் வந்தாலும் அவர்கள் மோட்டார் சூடுகளை வழங்கிக் கொண்டிருந்தார்கள். இராணுவம், அவர்களைச் சூழ்ந்துகொள்ளும் கணங்கள் அண்மித்துக் கொண்டிருந்தன. ஆனால், பதற்றமில்லாமல் ஆதித்தனின் சுடுகுழல் இயங்கிக் கொண்டிருந்தது.

இராணுவம் இப்போது இவர்களின் மோட்டார் நிலையைக் குறிவைத்து தாக்கத் தொடங்கியது. இத்தனை நெருக்கடிக்குள்ளும் ஆதித்தன் தான் முடிவெடுத்த நிலை வரும்வரை தாக்குதலைத் தொடர்ந்தான். இராணுவத்தின் முற்றுகை வலைக்குள் மோட்டார் நிலை உள்ளாகிக்கொண்டிருந்தது.

ஆதித்தன் நினைத்தபடி எறிகணைகள் அனைத்தும் சுடப்பட்டு விட்டன. இனி, மோட்டாரை தகர்ப்பதற்கான நேரம். அதைவிட மாற்றுவழிகள் இல்லை. நூற்றுக்கணக்கான எறிகணைகளைச் சுட்டதினால் தணல் போலப் பழுத்துப் போயிருக்கும் அந்த எறிகணைக் குழலைக் கொண்டு செல்வதென்பது சாத்தியமே இல்லாத ஒன்று. அத்தோடு எதிரியால் அவர்கள் சூழப்பட்டுக் கொண்டுமிருந்தார்கள்.

எனவே சுடுகுழலைத் தகர்த்து விட்டு பின்வாங்குவதென்ற முடிவைத் தவிர மிச்சமாக எதுவுமில்லை. ஆயினும், ஆதித்தன் அப்படிச் செய்யவில்லை. கூட இருந்தவர்கள் எவருமே எதிர்பார்க்காத முடிவை அவன் எடுத்தான். இயக்கம் ஓர் எறிகணை செலுத்தியைப் பெறுவதற்கு எத்தகைய விலைகளைச் செலுத்துகின்றதென்பது அவனுக்கு நன்கு தெரியும். அதனால், அந்த எறிகணைச் செலுத்தியை அவன் இழக்க விரும்பவில்லை.

வெப்பத்தால் தகதகத்துக் கொண்டிருந்த அந்தச் சுடுகுழலைத் தனது தோளில் வைத்தபடி எதிரிக்கு எதையும் விட்டு வைக்காமல் முற்றுகையை உடைத்து வெளியேறினான் அவன்.

ஆதித்தன் மீண்டு வந்தபோது அவனது சுடுகுழல் பத்திரமாயிருந்தது. அவனது தோள்பட்டை மட்டும் வெந்து போய் கொப்பளம் போட்டிருந்தது.

இப்படி களங்களில் பல சாதனைகளை நிகழ்த்திய வீரன் பின்னர் கரும்புலியாகி விடுதலைப் போருக்குப் பெரும் பலம் சேர்த்து, வீழ்த்த முடியாத பெருங்கோட்டையென எதிரி மார்தட்டிய ஆனையிறவை மீட்கும் சமரொன்றுக்கு வலுச்சேர்த்து 25.12.1999 அன்று பாவப்பட்ட மக்களை மீட்கவந்த இயேசுநாதர் பிறந்ததாகச் சொல்லப்படும் நத்தார் நாளில், அடிமைப்பட்ட தன் இனத்தின் மீட்சிக்காகத் தன்னையே கொடையாக்கினான்.

■



# மொழியா
# எங்கள் மூச
# நாளை..

● செந்தூரி

ஈரம் குறையாதிருக்கும் கார்த்திகை வரும் போதெல்லாம் வீரம் குறையாதிருக்கும் நினைவுகளை அள்ளிச்சுமந்திருக்கும். இம்மண்ணின் ஒவ்வொரு பருக்கைகளிலும் - தம் மக்களின் இதயத்து ஒவ்வொரு செல்களிலும் இறைவர்களாக ஏறி வீற்றிருக்கும் மாவீரமுத்துக்களின் புகழுடைய நினைவுகளும் - உலகறிந்த பெருந்தியாகத்துக்குமான கண்ணீரின் திட வடிவத்தை மெய்ப்பிப்பது கார்த்திகையின் வழக்கம். மழையும் - இடியும் - மின்னலும் - பனியும் - குளிரும் - உறைவுமாய், கார்த்திகையின் காலநிலை தமிழினத்தின் விதைப்பை உறுதிப்படுத்தும் விதமாய் தன்னை வைத்திருக்க, வான வேறுபாடுகளின் காலநிலையும் - நிலமாறுபாடுகளின் புவித்தரைத்தோற்றமும் இலட்சிய உறுதியில் அணுவளவேனும் இடையூறை ஏற்படுத்திவிடாத மனோதிடத்தோடு தமிழீழப்பெருங்கனவை வாழ்க்கை நோக்கமாக சுமந்தவர்களின் வீரமும் - அறமும், இன்னோரன்ன பாடங்களை எங்கள் தலைமுறைகளிடம் கையளித்திருக்கும்.

### ஏன் அவர்கள் மாவீரர்கள்?

உலகத்தின் ஒட்டுமொத்த எதிர்ப்பும் தமக்கெதிராக திரும்பி நின்றபோதும், வரித்த கொள்கையில் விட்டுக்கொடுப்பில்லாத பற்றுறுதி எவரிடமிருந்ததோ அவர்களே மாவீரர்கள்.

தமிழின விடுதலையின் வழிப்பேறாக - தனி ஈழப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் ஆயுத ஏந்துதலை தீர்மானித்தமை இலகுவான தீர்மானமில்லை.

இலங்கைத்தீவுக்குள் தனியாக பிரிக்கப்பட்ட இன்னொரு தேசமாக தமிழீழத்தை தமது முன்னோடிகளிடமிருந்து தீர்மானங்களாக பெற்றுக்கொண்டவர்கள் - அத்தனித்தேசத்தின் வென்றெடுப்பை நடைமுறைப்படுத்துவற்கான பொறிமுறை ஆயுத வழியென்று தீர்மானித்தபோது வயதில் பதின்மராயும் - இருபதினராயுமே இருந்தனர்.

போராட்டத்தின் வழியே இலங்கையின் பௌத்த பேரினவாதத்திடம் - தமிழினத்துக்கான உரிமைகளை வலியுறுத்தும் ஏகவழி என்ற முடிவுக்கு வெவ்வேறு தலைமையின் கீழ் தமிழிளைஞர்கள் வருவதற்கு வழிகோலியது.

ஆயினும் தனித்த தமிழீழ இலட்சியத்தின் உறுதியை - இந்துசமுத்திர பிராந்தியத்தின் வல்லாதிக்க நலன்களுக்காக விட்டுக்கொடுக்க வற்புறுத்திய இந்தியாவிடம் அடகுவைத்த இயக்கங்கள் தாமாகவே தமிழின அபிமானத்தை இழக்க நேரிட்டது.

இனமுதன்மையை விடவும் சுயநலன்களையும் - இயக்க நலனையும் பெரிதென பார்த்த ஆயுத இயக்கங்கள், தமிழீழ தனித்தேசத்துக்கான பெரும்பயணத்தின் இடைநடுவில் விலகி வெளியேறியதுடன் - உறுதி கெடாத இயக்கங்களின் போராட்ட வழிகளில் தடங்கல்களை ஏற்படுத்தின.

இலங்கை அரசுக்கும் - இந்திய அரசுக்கும் ஒட்டுக்குழுக்களாக தங்களை இணைத்துக்கொண்டு தனித் தமிழீழப் போராட்டத்தின் காட்டிக்கொடுப்பாளர்களாக மாறிய இயக்கங்களை மக்கள் சுயமாகவே விலக்கி வைக்கத்தொடங்கினர் - விலகியிருக்கத்தலைப்பட்டனர்.

மாவீரர்கள் எனும் வீரத்தமிழால் பெருமைப்படுத்தப்

**பூசிப்பதற்கு ஏற்றவர்களாக மாவீரர்கள் போற்றப்படுவதற்கு அவர்களது இலட்சியம் எங்ஙனம் காரணமாயுள்ளதோ – அதே போன்றே வருகின்ற தமிழினத்தின் தலைமுறைகளுக்கு போராட்ட நெறியின் தேவை, இனவிடுதலைக்கான ஒரே தெரிவென்பதை வெளிப்படுத்துவதற்கும் மாவீரர் வழிபாடு காரணமாகின்றது.**

படும் அவர்கள் யாவரதும் மரணத்துக்கான புலப்படு காரணமாக கந்தக வெடிப்பினால் விசைப்படுத்தப்பட்ட உலோகத்துகள்களே இருக்கலாமாயினும் - வீரமரணத்துக்கான தோன்றாப்பொருள் : அவர்களிடமிருந்த இலட்சிய உறுதியே! தமிழீழ தேசம் அவர்களது அடைவிலக்காக மாற்றின்றி தெரிவு செய்யப்பட்டிருந்த நிலையில் - போராளிகளிடம் தனித்திருக்கும் இரண்டே தெரிவுகளில், ஒன்று இலட்சியம் - மற்றையது வீரமரணம். இலக்காகவிருந்த தமிழீழ தேசம் இன்னமும் எய்தப்படாதிருந்த நிலையில், தமது உறுதியிலிருந்து பின்வாங்கியிருந்தால் அல்லது போராட்ட வழியிலிருந்து இடைவிலகியிருந்தால் இவர்கள் இன்றளவும் உயிர்வாழ்ந்திருக்க சந்தர்ப்பம் கிட்டியிருக்கும் சாதாரணமானவர்களின் தக்கவைப்புக்கான தெரிவான பின்வாங்குதலில் இருந்து தம்மை முற்றாக விலக்கி தொடர்ச்சியான போராட்ட உறுதியை வெளிப்படுத்தியமையாலேயே அவர்கள் அசாதாரணமானவர்களாகினர் - அதனாலேயே இவர்கள் மாவீரர்கள்.

### போராட்ட நெறியின் தலைமுறைக்கடத்தலில் மாவீரர்களின் வகிபாகம் என்ன?

இருப்பை தக்கவைத்துக்கொள்வதற்கான போராட்டம் - உயிரினத்தொடர்ச்சியின் அடிப்படை இயல்புகளில் ஒன்று. காலக்கோட்டுக்கும் தமிழினத்தின் போராட்ட பண்புகளுக்கும் நேர்கோட்டுத் தொடர்புண்டு என்பது வரலாறு.

மொழியாலும் - மரபுகளாலும் ஆதாரப்படுத்தக்கூடிய தொன்மையை பண்புக்கூறாகக் கொண்ட தமிழினத்தின் உலக வரலாற்றில் போராட்டங்களின் எழுச்சியும் - வீழ்ச்சியும் புதிதானவையல்ல.

மாவீரர்கள் என்ற அடையாளங்கள், மறந்துபோக இயலாத போராட்ட இயல்பின் ஆகப்பிந்திய சமூகத்தழும்புகளாக எமக்கிடையில் தரப்பட்டு நிலைத்திருப்பவர்கள்.

இந்தத்தழும்புகள், தமிழினம் அடைந்திருக்கின்ற ஆகப்பிந்திய தோல்வியின் அகக்காரணங்களையும் - தற்சார்புபுவிச்சூழமைவின் நிலைப்பாடுகளை இவ்வினம் தரவேற்றிக்கொண்டு அடுத்தொரு நிலைத்திருப்புக்கான தேடல் தொடர்ச்சியை கையாள்வதற்குரிய அவகாசத்தையும் இக்கணம் வரையும் நினைவுறுத்திக்கொண்டிருக்கின்றார்கள்.

பூசிப்பதற்கு ஏற்றவர்களாக மாவீரர்கள் போற்றப்படுவதற்கு அவர்களது இலட்சியம் எங்ஙனம் காரணமாயுள்ளதோ - அதே போன்றே வருகின்ற தமிழினத்தின் தலைமுறைகளுக்கு போராட்டநெறியின் தேவை, இனவிடு

தலை
மாவீ
இ
உலக
களே
குரிய
ளுக்கு
சமய
கான
வடை
த
பலப்
யையே
தின்
நேர்
த
குக்கூ



## எங்கெங்கெல்லாம் எம் கோயில்களுண்டு?

| | |
|---|---|
| இரட்டைவாய்க்கால் | விசுவமடு |
| முள்ளியவளை | கிளிநொச்சி |
| கனகபுரம் | வன்னிவிளாங்குளம் |
| ஆலம்குளம் | ஈரப்பெரியகுளம் |
| முழங்காவில் | ஆட்காட்டிவெளி |
| பண்டிவிரிச்சான் | அளம்பில் |
| உடுத்துறை | கோப்பாய் |
| சாட்டி | கொடிகாமம் |
| ஈச்சங்குளம் | எல்லாங்குளம் |
| புதுவையாறு | மணலாறு |
| டடிமுகாம் | தரவை |
| தாண்டியடி | சுண்டலடி |
| வாகரை | திருமலை |
| கோடாலிக்கல்லு | மாவடி முன்மாதிரி |
| கஞ்சி குடிச்சாறு | பெரியகுளம் |
| தியாகவனம் | கோட்டைமாவடி |
| கண்டலடி | தியாவெட்டுவான் |
| கனிக்காடு | முள்ளிவாய்க்கால் |

**இங்கெல்லாம் துயில்கின்றன, எங்களின் விலாசங்கள்**

# கி

# சாகி

# ...



தலைக்கான ஒரே தெரிவென்பதை வெளிப்படுத்துவதற்கும் மாவீரர் வழிபாடு காரணமாகின்றது.

இலங்கையின் இனமுறுகலும் தமிழின ஒடுக்கலும், உலகளாவிய தமிழ்த்தேசிய வெறுப்பின் பகுதித்தெரிவுகளோடு ஒப்பிடுகையில் ஒரு பங்குக்குரியவையே.

மொழிவழியாகத்தனது இனத்தைப்பலப்படுத்துவதற்குரிய எண்ணற்ற வாய்ப்புகளிருந்தும், அலட்சியக்கூறுகளுக்கு ஆட்பட்டு தேசங்களாகவும் - சமூகங்களாகவும் - சமயங்களாகவும், சுயநலன்களுக்காக பிளவுபட்டமைக்கான விளைவுகளையே உலகத்தமிழன் தற்சமயம் அறுவடை காண நேரிடுகிறது.

தமிழ் மொழிவழி இனமுதன்மையை வலியுறுத்தி பலப்படுத்த தவறியமைக்கான விளைவுகளின் ஒரு பகுதியையே, ஈழத்தமிழர்கள் - சிங்கள பௌத்த பேரினவாதத்தின் எதிர்ப்பாகவும் அடக்குமுறைகளாகவும் எதிர்கொள்ள நேர்ந்தது.

தமிழ்த் தேசிய விடுதலைக்கான போராட்டத்தின் இலக்குக்கூறுகளான தாயகம் - தேசியம் - தன்னாட்சி ஆகியவை இன்னொரு இனக்குழுமத்தினதுடையதைப் பறிப்பதோ - இன்னொரு இனக்குழுமத்தினதுடையதை பங்கிடுவதையோ குறிப்பதல்ல.

மாற்றாக, தமிழினம் தனக்கு உரித்துடையதான - தன்னிடமிருந்து பறிக்கப்பட்டதான உரிமைகளை மீட்டெடுப்பதற்காக குறிவைக்கப்பட்டு உருவாக்கப்பட்டவை.

பின்வருகின்ற இனத்தின் பிள்ளைகள், தமக்கு உரித்துடையதான நிலத்தையும் - இனத்தனித்துவத்தையும் - ஆட்சியதிகாரத்தையும் சுட்டிப்பாகத் தெரிந்துகொள்ளவும் அவற்றிற்கான இடர்களுக்கெதிராக கையுயர்த்தவும் திடம் தருகின்ற வகிபாகமே மாவீரர்களுடையது.

இலட்சிய உறுதியின் திருப்பெயரால் விழுந்தவர்களால் மட்டுமே ஒவ்வொரு முறையும் விழ விழ மடங்குடைய வீரியத்தோடு எழுகின்ற தைரியத்தை, எஞ்சியவர்களிடம் தக்கவைக்க முடியும்.

அது மாவீரர்களுக்குரிய தெய்வநிலைப்படுத்தலினால் சாத்தியமாகின்றது.

ஆக, மாவீரர் நினைவிலும் - அவர் நிகரற்ற நெறியின் நிழலிலும் பின்தொடர்கின்ற சந்ததிகள் மட்டுமே இனத்தின் இருப்பை உறுதிசெய்கின்றார்கள்.

போராட்டக் குணத்தின் தொடர்ச்சியை வெளிப்படுத்த வேண்டிய எதிர்காலத்தேவைப்பாடுகளின் போதெல்லாம் - இறை நிலைக்கு உயர்ந்த வரிச்சீருடையணிந்த எல்லைச்சாமிகள், நிமிர்ந்து நடக்கின்ற மக்கள் அணிவகுப்பின் முன்வரிசையில் நிழலாக நடக்கின்றார்கள்.

### மனிதவழிபாடு, வென்றெடுப்பதற்கான விதையை உயிர்ப்பித்தல் சாத்தியமா?

பரம்பொருளை - அவதாரங்கள் வழியூடாக வழிபடுதலைப்போன்றே, இலட்சியத்தை - மாவீரர் நாமங்களூடாக முன்னெடுத்துக்கொண்டிருக்கின்றோம். மாவீர வணக்கம், உறவு நிலையிலும் - உணர்வெழுச்சியிலும் தனிமனித வழிபாடுகளாகத் தோன்றினாலும், மனிதர்களுக்கான தெய்வநிலைப்படுத்தல் விமர்சனத்துக்குள்ளாகினாலும் கூட, கொள்கையினால் திரட்டியெழுப்பப்பட்ட 'இலட்சிய உறுதி'யே உண்மையில் உட்பொதிந்து வழிபடப்படுகின்றது. மாவீரர்கள் ஒவ்வொருவரினதும் தனித்தனியான ஆளுமையும் - போர்க்குணமும் - வீரமும் இணைந்து, தமிழ்த்தேசியத்துக்கான போராட்ட வலிமையைப் பலப்படுத்தியதைப் போன்றே - மாவீரர்கள் மீதான எம் ஒவ்வொருவரினதும் தனித்தனியான பேரபிமானத்துடன் கூடிய மதிப்புறுத்தல்கள் திரண்டு விடுதலையின் புலப்படுவழியை வெளிச்சமிட்டு இலகுவாக்கும்.

வென்றெடுப்பதற்கான விதைகளை மண்ணில் உயிர்ப்புடன் வைத்திருப்பதற்கான வலிமை - மனித செல்வாக்குகளுக்கு அப்பாற்பட்டிருக்கும்.

வரித்துக்கொண்ட இலட்சியத்தின் மீதான நேர்மைத்திறம் - அறவுண்மை - விலகாப்பற்று - சாவிலுந்தளராமை ஆகிய வடிவமில்லாத அதீத வலிமையுடைய பெருஞ்சக்திகள், வென்றெடுப்பதற்கான உயிர்ப்பை யாதாகினும் வடிவங்களில் மண்ணில் தக்கவைக்கும் வினையுடையவை.

**போராட்டக் குணத்தின் தொடர்ச்சியை வெளிப்படுத்த வேண்டிய எதிர்காலத்தேவைப்பாடுகளின் போதெல்லாம் – இறை நிலைக்கு உயர்ந்த வரிச்சீருடையணிந்த எல்லைச்சாமிகள், நிமிர்ந்து நடக்கின்ற மக்கள் அணிவகுப்பின் முன்வரிசையில் நிழலாக நடக்கின்றார்கள்.**

போராட்டமற்ற வேறொரு இணக்கமுள்ள வழி இனவிடுதலையின் பூரணத்துவத்தை தமிழினத்துக்கு நிகழ்த்தப் போவதில்லை என்பது உறுதியாகத்தெரிந்த பிறகு,

போராட்டச்செல்நெறியை தவிர்த்த பிறிதொரு உபாயத்துக்கு புறக்காரணிகள் தயாரற்று இருக்குகையில் - வாழ்வும் சாவும், இலட்சியமே உருவான மாவீரத் தெய்வங்களையன்றி வேறேது எம் வழிபாடு?




கேள்வி – கைப்புள்ள நீர் ஆம்பிளதானே. நிம்மதியாத்தானே இருக்கிறீர். உமது பதில்கள் கொஞ்சம் அப்பிடி, இப்பிடியா இருக்கு. அதுதான் கேட்டன்.

**எல்.சுலக்ஷனா, கிளிநொச்சி**

**பதில்** - *நிம்மதியா இருக்கும் வயதில் மனைவியைத் தேடுவதும், மனைவி வந்த பின் நிம்மதியைத் தேடுவதுமே ஆண்களின் வாழ்க்கை.*

கேள்வி – நவரசமான பொண்டாட்டியைத் தேடுகிறேன். கிடைப்பாளா?

**ஆர்.மன்மதன், பருத்தித்துறை**

**பதில்** – *புளி ரசம் கூட வைக்கத் தெரியாத பொண்டாட்டிதான் அமைவா, ஏன்னா விதி வலியது.*

கேள்வி – என் காதலியின் பேச்சைக் கேட்டா லவ் சக்சஸ் ஆகும் போலவும் தெரியுது. சில சமயம் பெய்லியர் ஆயிடும் போலவும் தோனுது. எது நடந்தா நல்லது?

**எம்.காந்தன், வெள்ளவத்தை**



**பதில்** - *லவ் பெய்லியர் ஆனா தாடிய மட்டும் வளர்த்தாப்போதும். லவ் சக்சஸ் ஆயிட்டா பொண்டாட்டி, புள்ளைங்களையும் சேர்த்து வளக்கணும். SO யோசிச்சு முடிவெடுங்க.*

கேள்வி – பகல்ல தூங்கினா தொப்பை வருமாமே. உண்மையா கைப்புள்ள?

**பி.பரமேஸ்வரி, மட்டக்களப்பு**

**பதில்** – *அப்போ இராத்திரியில தூங்கினா சிக்ஸ் பெக் வருமா?*

கேள்வி – வேலைக்குப் போகாம வீட்டிலதான் இருக்கிறன். அதுவும் ஒரு வேலைதானே. வேலைக்குப் போறவங்க அப்பிடி என்ன பெரிசா வெட்டிக் கிழிக்கிறாங்க?

**எஸ்.கஜிதா, கோப்பாய்**

**பதில்** – *வேலைக்குப் போறவங்களுக்கு வேலை செய்யிற இடத்தில மட்டும்தான் பதில் சொல்லணும், வேலைக்குப் போகாதவர்களுக்கு பாக்கிறவங்களுக்கெல்லாம் பதில் சொல்லணும். இப்ப சொல்லுங்க யாருக்கு வேலை அதிகம்.*

கேள்வி – எனக்கு காய்ச்சல் விட்டு விட்டு அடிக்குது. ஏதாவது புது வைரஸா இருக்குமோ?

**பி.கார்மேகன், நீர்கொழும்பு**

**பதில்** – *விடாம அடிக்கிறதுக்கு அது உன் சம்சாரமா? காய்ச்சல்ன்னா விட்டு விட்டுத்தான் அடிக்கும்.*

கேள்வி – வேலைக்குப் போனா சரியாயிடும், கல்யாணம் பண்ணினா சரியாயிடும், குழந்தை பிறந்தா சரியாயிடும் எண்டு சொல்றாங்களே. உண்மையிலேயே சரியாயிடுமா?

**ஆர்.பாலராஜா, வத்தளை**

**பதில்** – *இப்பிடி சொல்றவங்கள மிதிச்சா எல்லாம் சரியாயிடும்.*

கேள்வி – நான் விரைவாகவே தூங்கி, விடியுமுன்னே எழும்பி விடுவேன். இது நல்ல பழக்கம்தானே கைப்புள்ள?

**எஸ்.கோணேஸ்வரன், மட்டக்களப்பு**

**பதில்** – *இதிலிருந்து என்ன தெரிகிறது. உமக்கு* wifi*யும் இல்ல,* wife*உம் இல்ல.*

# சொல்லுங்கோ டொக்டர்





அடிக்கடி நெட்டி முறிக்கக் கூடாது என பாட்டி சொல்கிறார். உண்மையில் அது தவறா டொக்டர்?

**எஸ். பிரணவி, சாவகச்சேரி**

*பதில்:- நெட்டி முறிப்பது தீங்கானது என்பது உங்கள் பாட்டியினது மட்டுமின்றி உலகளாவிய ரீதியிலும் பாட்டிகள் சொல்லி பரம்பரை பரம்பரையாக நம்பப்படுகிறது. ஏன் பல மருத்துவர்கள் கூட அது தீங்கானது எனச் சொல்லக் கூடும். மாற்றுக் கருத்துகளும் உள்ளன.*

## நெட்டி முறிப்பது ஆபத்தா?



*அண்மையில் அதாவது 2017இல் செய்யப்பட்ட ஆய்வுகள் நெட்டி முறிப்பதால் பாதிப்பு இல்லை என்கின்றன.*

*நெட்டி முறிக்கும்போது என்ன நடக்கிறது என 400 பேரை அல்டரா சவுண்ட் ஸ்கான் பரிசோதனை செய்து பார்த்தார்கள். அந்நேரம் சடுதியாக தனித்துவமான ஒளிப்பாய்ச்சல் போன்று மூட்டுக்குள் ஏற்பட்டது. நெட்டி முறிக்கும்போது மூட்டுக்குள் ஒன்றோடு ஒன்று முட்டிக் கொண்டிருக்கும் இரு எலும்புகளினதும் மேற்பரப்புகள் இழுபட்டு விலகுகின்றன.*

*மூட்டிற்குள் இருக்கும் எலும்புகள் ஒன்றுடன் ஒன்று உராயாது சுலபமாக அசைவதற்கு உதவியாக அதற்குள் சிறிது திரவம் இருக்கிறது. அதை* synovial fluid *என்பார்கள். இது கிறீஸ் போன்று செயற்படும். நெட்டி முறிக்கையில் எலும்பு மேற்பரப்புகள் சற்று விலகும். அப்போது மூட்டுக்குள் இருக்கும் அழுத்தம் குறைவதனால் அதற்குள் மேலதிக திரவம் வேகமாக உள்ளிழுக்கப்படும். இதன் போதே நெட்டி முறியும் சத்தம் உண்டாகிறது.*

*இவ்வாறு நெட்டி முறிக்கும் போது மூட்டினது உள்ளவு தற்காலிகமாக சற்று அதிகரிக்கிறது. அதனால் மூட்டினது செயற்பாட்டு வீதம் அதிகரிக்கிறது. அதாவது கூடியளவு வளையவும் நிமிரவும் முடிகிறது. எனவே நல்லது என்றுதானே சொல்ல வேண்டும்.*

*ஆனால் பல ஆண்டுகளுக்கு முன் அதாவது 1990இல் செய்யப்பட்ட ஓர் ஆய்வானது நெட்டி முறிப்பதால் கைகள் சற்று வீங்குவதுடன் பிடிக்கும் வலிமையும் குறைகிறது என்றது. ஆனால் அந்த ஆய்வானது சரியான முறையில் நடைபெறவில்லை என இப்பொழுது சுட்டிக் காட்டப்படுகிறது. அத்துடன் 2017இல் செய்யப்பட்ட இரு ஆய்வுகள் நெட்டி முறிப்பதால் பிடிக்கும் வலிமை குறையவில்லை எனத் தெளிவாகச் சொல்லின.*

*எனவே நெட்டி முறிப்பதால் பாதிப்பு இல்லை என்றே சொல்லத் தோன்றுகிறது. மாறாக சற்று சுகமான உணர்வு ஏற்படுகிறது. அதாவது சுலபமாக வளையவும் நிமிரவும் முடிவதால்.*

*சவ்வுகள் மாட்டுப்படுவதாலும், எலும்புகள் தேய்ந்து ஒன்றோடு ஒன்று உரசுவதாலும் சில வகை சத்தங்கள் கழுத்து, தோள்மூட்டு, முழங்கால் போன்ற மூட்டுகளில் கேட்பதுண்டு. இவை முற்றிலும் வேறான சப்தங்கள். நெட்டி முறித்தல் சத்தங்கள் அல்ல. அவை கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவையாகும். ஏனெனில் அவை நோய்கள் காரணமாக ஏற்படலாம் என்பதால் அடிப்படைக் காரணம் கண்டறியப்பட வேண்டும்*

*நெட்டி முறித்தவருக்கு அதன் பின்னர் அந்த மூட்டானது சுகமாக இருப்பது போன்ற உணர்வை ஏற்படுத்துகிறது என்பதை நாம் அறிவோம். எனவேதான் அவர் அவ்வாறு செய்கிறார். அந்த சுக உணர்வானது நாம் எற்கனவே கூறிய விளக்கங்களின் அடிப்படையில் உண்மையும் கூட.*

*ஆனால் நெட்டி முறிப்பதைப் பார்த்தும்கேட்டும்கொண்டிருப்பவருக்கு அந்த சத்தமானது எலும்புகள் முறிவது போன்ற உணர்வை ஏற்படுத்தும். அதைச் கேட்கச் சகிக்க முடியாதிருக்கிறது. அதனாலேயே அது ஆபத்தானது என்ற உணர்வைக் கொடுக்றது. அதுவும் வயதானவர்களுக்கு அது நரகாசமாக ஒலிக்கலாம். அதனால்தான் காலம் காலமாக அது ஆபத்தானது என்று சொல்லப்படுகிறது என நினைக்கிறேன்.*

*நீண்ட காலம் நெட்டி முறித்தவர்களுக்கு எலும்பு தேய்வு ஏற்படுமா என்பதற்கான ஆதாரங்களும் ஆய்வுகள் ஊடாக கண்டு பிடிக்கப்படவில்லை என்பதையும் குறிப்பட வேண்டும்.*

*எனவே இன்றுள்ள தரவுகளின் அடிப்படையில் நெட்டி முறிப்பது ஆபத்தானது அல்ல என்றே சொல்ல முடியும்.* ■



## குண்டக்க மண்டக்க
## கைப்புள்ள பதில்கள்

வீட்டில் வெட்டியாக இருந்து எதிரொலியை வாசித்து விட்டு, முகட்டைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா? இப்படி இருக்கும் போது உங்கள் மூளைக்குள் குறுகுறுவென்று ஏதேதோ கேள்விகளெல்லாம் எழுமே. எல்லாவற்றையும் உடனே எழுதி அனுப்புங்கள். எங்கள் கைப்பிள்ளை தன் பாணியில் அவற்றுக்கெல்லாம் பதில் சொல்லி உங்களைக் கலகலப்பூட்டக் காத்திருக்கிறார். ம்ம்..! கேள்விகள் புறப்படட்டும்!!!

மருத்துவ ரீதியாக உங்களுக்கு எழும் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள். அவை தொடர்பில் உரிய மருத்துவர்களின் பதில்கள் எதிரொலியில் பிரசுரமாகும். உங்கள் சுய விபரம் இரகசியமாகப் பேணப்பட வேண்டுமாயின் அதனை மறக்காமல் குறிப்பிடுங்கள். நோயற்ற வாழ்வுக்கு கேளுங்கள். பதிலோடு பயனும் பெறுங்கள்.



# தமிழர் பண்பாடும் மாவீரர் வழிபாடும்!

● கருணாகரன்

"தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய
சந்தனப் பேழைகளே! – இங்கு
கூவிடும் எங்களின் குரல்மொழி கேட்குதா?
குழியினுள் வாழ்பவரே!
உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள்
உறவினர் வந்துள்ளோம் – அன்று
செங்களம் மீதிலே உங்களோடாடிய
தோழர்கள் வந்துள்ளோம்....."

என்றொலிக்கும் இந்தப் பாடலை மாவீரர் நினைவாகக் கவிஞர் புதுவை இரத்தினதுரை எழுதியபோது, ஒரு காலை வேளையில் கையெழுத்துப் பிரதியாக முதலில் படித்திருந்தேன். அதற்குப் பிறகே இது பாடலாக இசைக்கப்பட்டது. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராளி மேஜர் சிட்டுவும் வர்ணராமேஸ்வரனும் இந்தப் பாடலைப் பாடினார்கள். கண்ணனும் அவருடைய மகன் முரளியும் இசையமைத்திருந்தனர். இந்தப் பாடல் எழுதப்பட்ட காலத்தில் மாவீரர் வழிபாடும் சுடரேற்றுவதும் நவம்பர் 27 நள்ளிரவு 12 மணிக்கே நடந்தன. அதனால், இந்தப் பாடலின் இரண்டாவது சரணத்தில் உள்ள வரிகள் -

"நள்ளிரா வேளையில் நெய்விளக்கேற்றியே
நாமும் வணங்குகின்றோம் – உங்கள்
கல்லறை மீதிலெம் கைகளை வைத்தொரு
சத்தியம் செய்கின்றோம்.."

என்றிருந்தன.

பிறகு சுடரேற்றும் நேரம் நவம்பர் 27 மாலை 6.05க்கு மாற்றப்பட்டது. விடுதலைப் புலிகளின் போராளியான லெப் சங்கர் என்ற செல்வச்சந்திரன் சத்தியநாதன் முதன் முதலில் சாவடைந்த - 1982.11.27 மாலை 6.05 என்ற - நேரத்தையே மாவீரர் வணக்கத்துக்குரிய நேரமாகப் புலிகள் அறிவித்தனர். சங்கர் சாவடைந்து, ஏழு ஆண்டுகளுக்குப் பிறகே மாவீரர்நாள் என்ற நினைவு கூரல் ஆரம்பிக்கப்பட்டது.

இந்திய அமைதிப்படைகளுடன் புலிகள் போரிட்டுக் கொண்டிருந்த 1989 இல், புலிகள் தீவிர முற்றுகைக்குள்ளாகியிருந்தனர். அந்த நாட்களில் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பெரும் நெருக்கடி நிலை ஏற்பட்டிருந்தது. இளைஞர்கள் ஊர்களில் இருக்க முடியாதென்ற நிலை. இதனால் பலரும் வெளிநாடுகளுக்குப் பறந்தனர். இன்னொரு தொகுதியினர் காட்டில் புலிகளைத் தேடிப் போனார்கள். காடு புலிகளால் நிறையத் தொடங்கியது. போர் உக்கிரமடைந்தது. இழப்புகளும் அதிகமாகிக் கொண்டிருந்தன. இந்த நிலையிலேயே விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், மாவீரர்நாளை அனுஸ்டிப்பதற்கு முடிவெடுத்தார். இதற்குக் காரணம், விடுதலைக்காகப் போராடி வீரமரணமடைந்தவர்களின் நினைவுகளைப் போற்றவும் அதற்குரிய குடும்பத்தினரின் உளநிலையை ஆற்றுப்படுத்தவுமே.

விடுதலைப் போராட்டமானது எதிர்பார்க்கப்பட்டதற்கும் அதிகளவிலான உயிரிழப்பைச் சந்திக்கத் தொடங்கியிருந்தது. யுத்தம் விரிய விரிய இழப்புகளின் தொகையும் கூடியது. இது சமூகத்திலே பெரும் உளத்தாக்கத்தை உண்டாக்கக்கூடிய நிலையை ஏற்படுத்தியது. "இந்த நிலை நீடித்தால், ஒவ்வொரு வீட்டிலும் சாவையே எதிர்கொள்ள வேண்டி நேரிடும் என்ற எண்ணம் - அச்சம் - மக்களிடத்திலே உருவாகி, எதிர்மறையான நிலைமைகளை உண்டாக்கும். அது பெரியதொரு சவாலாகவே மாறக் கூடும்" என்று புலிகள் கருதினர். இதனால், "போராடிக் களத்தில் வீழ்கின்ற போராளிகள் உன்னதமான இலட்சியத்துக்காக மரணித்தவர்கள். அவர்களுடைய வாழ்வும் மரணமும் மகத்துவமானது. வரலாற்றுச் சிறப்புக்குரியது. அவர்களுடைய மரணம் புகழ்மிக்கது, புனிதமானது" என்ற விடயங்களை உணர்த்தக்கூடிய வகையில் மாவீர் நினைவு கூரல் ஆரம்பிக்கப்பட்டது.

இதற்குப் பிறகு, ஒவ்வொரு போராளியும் தன்னுடைய சாவுக்கு ஒரு அர்த்தமும் மகத்துவமும் இருப்பதாகக் கருதத் தொடங்கினர். உயிரையும் விட உன்னதமான ஒரு காரியத்துக்காக மரணத்தைச் சந்திப்பது மகத்துவமானது என்ற எண்ணம் போராளிகளிடத்திலே உருவானது. இதேபோன்ற இன்னொருவிதமான உணர்நிலை மக்களிடத்திலும் ஏற்பட்டது. தங்கள் பிள்ளைகளும் சோதரரும் பெறுமதியான காரியங்களுக்காகவே மரணத்தை ஏற்கின்றனர். அவர்களுடைய சாவு சமூகத்தினால் மதிக்கப்படுகிறது. வரலாற்றுப் பெறுமதிமிக்கது. அவர்கள் ஒரு புனிதப்போராட்டத்திலே வரலாற்றைப் படைக்கும் மாவீர்கள் என்ற எண்ணம் உண்டானது.

இதைப் பின்னாளில் ஒழுங்கு முறைப்படுத்தி, ஒரு கட்டமைப்பாக்கி, தமிழ்ச்சமூகத்தின் மனதில் ஆழப் பதிந்த பண்பாடாக்கினர் விடுதலைப்புலிகள். இதற்காகப் பின்னாளில் அவர்கள் நடுகல் முறையை நடைமுறைப் படுத்தினர். இதற்காகத் தமிழ்ப்பண்பாட்டின் வேர்களைத் தேடிய பயணங்கள் நிகழ்ந்தன.

தமிழ்ப்பண்பாட்டிலும் அதனுடைய வரலாற்றிலும் வீரமும் அதனோடிணைந்த வீர வழிபாடும் வீரர்களுக்கான நடுகல் பண்பாடும் இருப்பதைக் கண்டறிந்த புலிகள் அவற்றை மீளுருவாக்கம் செய்தனர். சமகாலப் போரில் புறநானூற்றுக்காட்சிகள் இணைக்கப்பட்டன. தொடக்க காலத்தில் விடுதலைப்புலிப் போராளிகள் சாவடைந்திருந்தால், அந்த உடல் அந்தப் போராளியின் குடும்பத்தின் பண்பாட்டுச் சூழலின் அடிப்படையிலேயே இறுதி வணக்கத்துக்குரியதாக்கப்படுவதுண்டு. அவரவர் சார்ந்த மதப் பின்னணியில் அமைந்த சடங்குகளின் அடிப்படையிலேயே அந்த உடல் இறுதிக்குள்ளாக்கப்படும்.

ஆனால், காட்டில் விடுதலைப்புலிகள் இருந்த காலப் பகுதியில் சாவடைந்த போராளிகளின் உடல்கள் மதச் சடங்குகள் எதுவுமே இல்லாமல், புலிகளின் இராணுவ மரியாதையுடன் புதைக்கப்பட்டன. அவ்வாறு புதைக்கப்பட்ட இடங்கள் நினைவிடங்களாகக் கொள்ளப்பட்டு, உரிய போராளியின் நினைவு நாளில் நினைவு கூரப்பட்டது. இதை ஒரு வழிமுறையாகக் கொண்டே, பின்னர் மாவீரர் நினைவிடங்கள் எனப் பொதுவாக நடைமுறைப்படுத்தக் கூடிய விதிமுறைகளோடு அறிமுகப் படுத்தப்பட்டது. இதன்படியே, மாவீரர் துயிலுமில்லங்கள் உருவாக்கப்பட்டன. மாவீரர் துயிலுமில்லங்கள் உருவாக்கப்பட்ட பிறகு, சாவடையும் போராளிகளின் உடல்கள் வித்துடல்கள் என்று கொள்ளப்பட்டன. சாவடைந்த பிறகு அவர்கள் போராளிகள் என்ற நிலையிலிருந்து மாவீரர் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டனர். "வீழ்ந்த வீரர்கள் மண்ணோடு மடிவதில்லை" எனவும் "வீர்கள் புதைக்கப்படுவதில்லை. மண்ணில் விதைக்கப்படுகிறார்கள்" என்றும் சொல்லப்பட்டன. இதன்படியே பின்னாளில் மாவீரர்களின் உடல்கள் வித்துடல்கள் என்று கூறப்பட்டன. இந்த உடல்கள் விதைக்கப்படுவதாகவும் கொள்ளப்பட்டன. அப்படியே விதைக்கப்பட்ட வீரர்கள் நிரந்தரமாக விழி மூடிக் கொள்ளவில்லை. அவர்கள் துயில்கின்றார்கள் என்றழைக்கப்பட்டது. வீரர்கள் துயிலுமிடம் துயிலுமில்லங்கள் என்றாயின.

இந்த வீர வழிபாட்டைப் பற்றி, போராட்டத்தில் ஈடுபட்டுச் சாவடைந்த போராளிகளுக்குரிய மதிப்பை வழங்குவதைப்பற்றிய ஒரு உரையாடல் 1991 ஒக்ரோபரில் யாழ்ப்பாணத்தில் விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடன் நடந்தது. கலை, இலக்கியப் படைப்பாளிகளுடனான அந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட சிலர் இந்தக் கேள்வியை பிரபாகரனிடம் நேரிலே எழுப்பியிருந்தனர். விடுதலைப்போராட்டத்தில் பல இயக்கங்களிலிருந்தும் ஏராளமானவர்கள் சாவடைந்திருக்கின்றனர். அவர்களுடைய சாவுக்குரிய மரியாதையை எப்படி வழங்குவது? அவர்களுக்கான நினைவிடங்களை எப்படி அமைப்பது? எங்கே அமைப்பது? என்ற கேள்விகளாக அவை நீண்டன.

இதற்குப் பதிலளித்த பிரபாகரன் -

"அனைத்து இயக்கப்போராளிகளின் தியாகங்களும் போற்றுதற்குரியவையே. அவர்களுக்கான இடத்தை வரலாற்றில் நிச்சயம் பதியவே வேண்டும். தற்போதைய சூழலில் அதற்கான உடனடிச் சாத்தியங்கள் குறைவாக இருப்பதால், அவர்களை இந்தத் துயிலுமில்லங்களில் நாம் சேர்த்துக் கொள்ள முடியவில்லை. எதிர்காலத்தில் சில பொது இடங்களில் அனைத்துப் போராளிகளுக்குமான நினைவிடங்கள் அமைக்கப்பட்டு, அவர்கள் நினைவு கூரப்படுவார்கள். குறிப்பாக யாழ்ப்பாணக் கோட்டைக்குப் பக்கத்திலே இருக்கின்ற இடத்தை இவ்வாறு அனைத்துப் போராளிகளுக்குமான நினைவுச் சதுக்கமாக மாற்றலாம். அப்படியான திட்டம் எமக்குண்டு" என்றார்.

இப்படியே, உயர்ந்த இலட்சியத்துக்காக தமது உயிரை அர்ப்பணித்தவர்களுக்குரிய மாண்பை மாவீரருக்கு வணக்கம் செலுத்துவதன் மூலம் வழங்க முடியும் எனப் புலிகள் சிந்தித்தனர். இதன்மூலம் அழியாத வரலாற்றைப் படைக்க முடியும் என்று நம்பப்பட்டது. இதை மக்களும் ஏற்று புலிகளுடன் இணைந்து அதைப் பின்பற்றினர். மாவீரரை வழிபடுவது என்பது இன்று தமிழ்ச் சமூகத்தின் பெருந்திரள் பண்பாடாக மாறி விட்டது. அதேவேளை, அது கொண்டுள்ள புகழும் சிறப்பும் நெருக்கடிகளையும் சந்தித்துக்கொண்டிருக்கிறது. இந்த நெருக்கடியில் தமிழ்ச் சமூகத்தினரும் எதிர்ச்சமூகத்தினரும் இணைநிலையில் பங்கேற்றுள்ளனர் என்பதே வரலாற்றுத் துயர். ■



# சிறப்பு சித்திரவதை முகாம்

**23**



தோழர் பாலன்

"என்ன காரணம்?" என்று வினவினேன்.

"அரசாங்க உத்தரவு!" என்று பதிலளித்தார்.

"உத்தரவைக் காட்டுங்கள்!" என்று கேட்டேன். "கொண்டு வரவில்லை!" என்றார்.

"அப்படியானால் நான் மறுக்கலாம் தானே?" என்று கேட்டேன்.

"காவல் நிலையத்துக்கு வந்தால் உத்தரவைக் காட்டுகிறோம்" என்று சொன்னார்.

"நான் உணவு அருந்தி உடை உடுத்திக் கொண்டு வரும்வரை காத்திருக்க வேண்டும்!" என்று சொன்னேன்.

எவ்வளவு நேரமானாலும் காத்திருக்க தயார் என்றும் கையோடு அழைத்துச் செல்ல வேண்டும் என்றும் கூறினார்.

எனக்கு இது புதுமையாக இருந்தது. அப்படி அவசரமாக என்னை அழைத்துச் செல்லக் காரணமில்லையே என்று நான் அதிசயித்தேன். பின்னர் எனக்கெதிராக எந்தக் காரணமுமில்லையாதலாலும் நான் எவ்வகையிலேனும் சட்ட விரோதமாக நடக்கவில்லையாதலாலும் நான் அச்சமின்றி அலட்சியமாக அவர்களுடன் சென்றேன். பொலிஸ் வண்டியில் ஏறுமாறு கூறினார்கள். நான் மறுத்து எனது வண்டியில்தான் வருவேன் என்றேன். சிறிது விவாதத்துக்கு பிறகு அதற்கு சம்மதித்து அவர்களும் எனது வண்டிக்குள் ஏறிக்கொண்டார்கள்.

அப்பொழுது தான் எனக்கு சந்தேகம் ஏற்பட்டது. என்னைக் கைது செய்கிறார்கள் என்று உணர்ந்தேன். ஆனால் காரணமில்லாமல் பிடியாணையில்லாமல் கள்ளத்தனமாகக் கடத்தல் போல் கபடமாக அழைத்துச் சென்றார்கள். காவல் நிலையம் வந்த உடனே அந்தப் பொலிஸ் அதிகாரி அரசாங்க உத்தரவைக் காட்டினார். நான் அதிர்ந்து போனேன்!

என்னைக் கைப்பற்றி உடனடியாக காஞ்சிபுரம் அகதிகள் முகாமுக்கு அழைத்துச் சென்று ஒப்படைக்க வேண்டும் என்று தமிழக அரசு ஆணையிட்டிருந்து என்னால் நம்ப முடியவில்லை. கடந்த பத்தாண்டுகளாக இந்தியாவில் சட்டபூர்வமாக வாழ்ந்து வந்த என்னை திடீர் என்று அகதியாக்கி பொலிஸ் காவலில் அகதிகள் முகாமில் வைக்க அரசுக்கு என்ன கேடு வந்தது?

இன்றுவரை இந்தக் கேள்விக்கு விடையில்லை. நான் அகதியாக இந்தியாவுக்கு வரவில்லை. அரசிடம் அடைக்கலம் கோரவில்லை. ஐந்து பைசா உதவி கோரவில்லை. எனது முந்தையர் நாட்டுக்கு என் சுய விருப்பப்படி வந்து குடியேறி அரசாங்க அனுமதியுடன் பொதுத் தொண்டில் ஈடுபட்டிருக்கும் ஒருவனை எவ்வித எச்சரிக்கையு எதுவுமின்றி சிறைபிடிக்கும் செயலை யார் செய்வார்? ஏன் செய்வார்? இந்தியா ஜனநாயக நாடுதானா? சட்டத்தையும் மனித உரிமைகளையும் மதிக்கும் நாடுதானா? இதில் ஏதோ மர்மமிருக்கிறது என்று எனது மனம் தீவிரமாக சிந்திக்க ஆரம்பித்தது.

எனினும் எனது துணிச்சல் குன்றவில்லை. ஓரளவு நிலைமையை ஊகித்துக் கொண்டேன். எனது மனைவிக்கும் எனது அலுவலகத்துக்கும் செய்தி சொல்லி அனுப்பினேன். சென்னை செல்ல அவசியமான உடைகளையும் வாசிக்க சில நூல்களையும் அனுப்பி வைக்குமாறும் சென்னையில் உள்ள வழக்கறிஞர்களுக்கும் நீலகிரியில் நமது மன்றத்துக்கும் அறிவிக்குமாறு உடனே செய்தி அனுப்பினேன்.

தொண்டாமுத்துார் பொலிஸார் என் கை ரேகைகளைப் பதிவு செய்து என்னைப் புகைப்படமெடுத்தார்கள். உணவுக்குப் பிறகு அயர்வதற்கு வசதி செய்து கொடுத்தார்கள். சற்றே உறங்கினேன்.

மாலை எனது மனைவியும் மகளும் உறவினர் ஒருவரும் என்னைக் காண வந்தார்கள். எனக்குப் பிரயாணத்துக்கு தேவையான பொருட்களையும் உடைகளையும் கைச்செலவுக்குப் பணமும் கொண்டு வந்து கொடுத்தார்கள். சிறிது நேரம் அவர்களோடு உரையாடிக் கொண்டிருந்துவிட்டு அவர்களுக்கு ஆறுதல் கூறி அனுப்பிவிட்டு பந்தயக் குதிரைகள் போல பாய்ந்து செல்லும் எனது சிந்தனைகளோடு ஒன்றிவிட்டேன். என் மூளை நெருப்பாய் கொதித்தது. என் மனம் அநீதி கண்டு பொங்கியது. காவல் நிலையமோ வழக்கமான கலகலப்புடன் இயங்கிக்கொண்டிருந்தது.

என்னைக் காவல் நிலையத்துக்கு அழைத்துக் கொண்டு வந்த உடனேயே தொலைபேசி கணகணத்தது. உயர் அதிகாரிகள் விசாரித்துக்கொள்கிறார்கள்.

"கொண்டு வரப்பட்டுவிட்டாரா? அடம்பிடித்தாரா? ஒத்துழைத்தாரா?" இப்படிப் பல கேள்விகள் எஸ்.பி, கியு பிராஞ், உதவி எஸ்.பி ஆகியோர் விசாரித்துக் கொள்கிறார்கள். என்னைக் கைப்பற்றிய அதிகாரி கூறுகிறார் "அப்படியெல்லாமொன்றுமில்லை ஒத்துழைக்கிறார்!"

[சித்திரவதை தொடரும்]

# இந்த வாரம் உங்களுக்கு...

## மேடம்

உடன்பிறந்தோர் உதவிகரமாகச் செயற்படுவர். தகவல் தொடர்பு சாதனங்கள் பணிகளை விரைவாக செய்துமுடிக்க உதவி செய்யும். வாகனங்களை இயக்கும்போது அதீத எச்சரிக்கை தேவை. முடிந்தவரை அநாவசிய பிரயாணங்களைத் தவிர்ப்பது நல்லது. மாணவர்கள் தங்களின் கல்வி நிலையில் எதிர்பாராத இடைஞ்சலைச் சந்திக்கக் கூடும். கூட்டுப்பயிற்சி முறை மிகுந்த நன்மை தரும். பிள்ளைகளின் வாழ்வில் சுபநிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளைச் செய்ய நேரிடும். தொற்று நோய்களால் அவதிப்படும் வாய்ப்பு உண்டு.

## இடபம்

பொருளாதார நிலை நன்றாக இருக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். உடன்பிறந்தோரால் நன்மை உண்டாகும். மாணவர்கள் தங்கள் கல்வி நிலையில் நல்ல முன்னேற்றத்தைக் காண்பார்கள்.எந்த ஒரு பணியையும் நீண்ட ஆலோசனைக்குப் பின்னரே செய்யத் தொடங்குவீர்கள். எளிதில் கிடைத்துவிடும் என்று எதிர்பார்த்துக் காத்திருந்த நற்பலன்கள் வந்து சேர்வதில் தடைகளைச் சந்திக்க நேரிடும். உறவினர்களோடு ஒரு சில விஷயங்களில் கருத்து வேறுபாடு தோன்றும் வாய்ப்பு உள்ளது.

## மிதுனம்

வாகனங்களை இயக்கும்போது கூடுதல் கவனத்துடன் இருக்க வேண்டியது அவசியம். பிள்ளைகளின் விவேகம் நிறைந்த செயற்பாடுகளை எண்ணிப் பெருமிதம் கொள்வீர்கள். வாழ்க்கைத்துணையின் ஆலோசனைகள் செயல் வெற்றிக்குத் துணைபுரியும். ஆன்மீகப் பணிகளில் முன்னின்று செயற்பட வேண்டியிருக்கும். பொதுக்காரியங்களில் முழுமையான மனத்திருப்தியுடன் செயற்பட்டு வருவீர்கள்.

## கடகம்

பேசும் வார்த்தைகளில் அடுத்தவர்களுக்கு அறிவுரை கூறும் கருத்துக்கள் அதிகம் வெளிப்படும். சோர்வு நீங்கி செயல் வேகம் அதிகரிக்கக் காண்பீர்கள். தேவையற்ற அநாவசிய செலவுகள் அதிகரிக்கும். அதிகப்படியான செலவுகளைச் சந்தித்தாலும் ஒவ்வொரு விஷயத்திலும் ஆழ்ந்த அனுபவ அறிவைப் பெறுவீர்கள். ராசியில் அமர்ந்திருக்கும் ராகு பகவான் மனதில் தன்னம்பிக்கையையும், தைரியத்தையும் இடம்பெறச் செய்வார்.

## சிம்மம்

உடன்பிறந்தோர் உதவிகரமாகச் செயற்படுவார்கள். பொதுக்காரியங்களில் உங்களின் ஆலோசனைகள் வெற்றியைத் தருவதோடு சிறப்பான நற்பெயரைப் பெற்றுத் தரும். வாழ்க்கைத்துணையோடு கொண்டிருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும். நண்பர்களோடு இணைந்து செய்யும் பணிகளில் சற்று விட்டுக்கொடுத்துச் செல்ல வேண்டியது அவசியம்.

## கன்னி

முக்கியமான காரியங்களில் இறங்கும்போது மனதில் சிறிது தயக்கம் இருந்து வந்தாலும் நடப்பது நடக்கட்டும் என்ற தைரியத்துடன் செயற்படுங்கள். பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பதில் தனி ஆர்வம் கொள்வீர்கள். வாழ்க்கைத்துணையின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் அளித்து வருவீர்கள். நண்பர்களை நம்பி ஒப்படைத்த பணிகளில் தாமதத்தை சந்திக்க நேரிடும். பெற்றோருடன் சிறிது கருத்து வேறுபாடு தோன்றக்கூடும். அலுவலகத்தில் உடன் பணிபுரிவோரை அனுசரித்துச் செல்ல வேண்டியது அவசியம்.

## துலாம்

நேரத்துக்குத் தகுந்தவாறு விவேகத்துடன் செயற்பட்டு வெற்றி கண்டு காண்பார்கள். பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண சிறிது காலம் காத்திருக்க வேண்டியிருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவி வரும். பேசும் வார்த்தைகளில் விவேகமான கருத்துக்கள் அதிகம் வெளிப்படும். உடன்பிறந்தோரால் ஒரு சில சங்கடங்களுக்கு ஆளாவீர்கள். தகவல் தொடர்பு சாதனங்கள் முக்கியமான நேரத்தில் செயலிழந்து சிரமம் தரலாம். பொதுப் பிரச்சினைகளில் நண்பர்களோடு இணைந்து செயற்பட்டு வெற்றி காண்பீர்கள்.

## விருச்சிகம்

பொருளாதார நிலையில் ஏற்றத் தாழ்வுகளைச் சந்திப்பீர்கள். பிள்ளைகளின் ஆலோசனைகள் சரியான சமயத்தில் கைகொடுக்கும். மன உளைச்சல் காரணமாக உடல் நிலையில் சிறிது சிரமம் ஏற்படும். வாழ்க்கைத்துணையுடன் வீண் வாக்குவாதத்தின் காரணமாக கருத்து வேறுபாடு தோன்றும் வாய்ப்பு உண்டு. உறவுமுறைப் பெண்களால் அதிக செலவுகளைச் சந்திக்க நேரிடும். நண்பர்களால் குறிப்பிடத்தகுந்த ஆதாயம் காண்பீர்கள். கலைத்துறையினர் கடுமையான அலைச்சலைச் சந்திக்க நேரிடும்.

## தனுசு.

நினைப்பது ஒன்றும், நடப்பது ஒன்றுமாக இருப்பது கண்டு நாம் சரியான பாதையில்தான் பயணிக்கிறோமா என்ற குழப்பம் அவ்வப்போது மனதில் எட்டிப் பார்க்கும். சிறு காரியங்களுக்குக் கூட பெரு முயற்சி செய்ய வேண்டியிருக்கும். கடமையைச் செய்வதில் சற்றும் மனம் தளராத நீங்கள் எச்சூழலையும் எதிர்கொள்ளத் தயாராக இருப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவி வரும். பொருளாதார நிலையில் சீரான முன்னேற்றம் காண்பீர்கள்.

## மகரம்

பேசும் வார்த்தைகளில் வெளிப்படும் பொருள் நிறைந்த கருத்துக்கள் அடுத்தவர்களை சிந்திக்க வைக்கும். உடன்பிறந்தோருக்கு உதவி செய்ய நேரிடும். மாணவர்களின் கல்வி நிலை சிறப்பாக இருக்கும். பிரயாணத்தின்போது பொருளிழப்பு உண்டாவதற்கான வாய்ப்பு உள்ளமையால் சக பயணிகளிடம் அதிக கவனத்துடன் இருக்க வேண்டியது அவசியம். வாகனங்களின் பராமரிப்புச் செலவு அதிகரிக்கக் கூடும்.

## கும்பம்

புதிய விஷயங்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் உண்டாகும். வாகனங்கள் தொழில்முறையில் மிகுந்த பயனுள்ள வகையில் அமையும். உறவினர்களால் குறிப்பிடத் தகுந்த அனுகூலம் உண்டாகும். வாழ்க்கைத் துணையோடு வீண் விவாதம் காரணமாக அவ்வப்போது கருத்து வேறுபாடு ஏற்படும். பூர்வீகச் சொத்துக்களில் புதிய பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடலாம். தொழில்முறையில் உங்களின் சிறப்பான செயற்பாடுகளால்

## மீனம்


நினைத்த காரியங்களைச் செய்து முடிப்பதில் மிகுந்த வேகம் காட்டுவீர்கள் . உங்களைச் சார்ந்து இருப்பவர்களோடு அனுசரணையோடு நடந்து கொள்வீர்கள். பேச்சுத் திறமை செயல் வெற்றிக்குத் துணை புரியும். இடம், பொருள், ஏவல் அறிந்து பேசி வெற்றி காண்பீர்கள். உங்களின் பேச்சு சாதுர்யம் சிறப்பான தன லாபத்தைப் பெற்றுத் தரும். குடும்பத்தில் சலசலப்பும், கலகலப்பும் மாறி மாறி இருந்து வரும். பொருளாதாரம் தொடர்பில் கவனத்தோடு இருக்க வேண்டியது அவசியம்.

# அகதியல்ல அழகி



அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் யுத்தம் உக்கிரமாக நடைபெற்றுக்கொண்டிருந்த காலம் அது. கிளிநொச்சியில்படித்துக்கொண்டிருந்தாள் காவேரி. 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 162 புள்ளிகளைப் பெற்று 'கெட்டிக்காரி' என்று பெயரெடுத்த மாணவிதான் காவேரி. கிளிநொச்சிக்கு அரண் போல அமைந்திருந்த முக்கிய தளங்களான இரணைமடு, பரந்தன் ஆகிய இடங்களை இராணுவம் கைப்பற்றியது. அவர்களின் அடுத்த இலக்கு கிளிநொச்சி. புலிகளின் கட்டுப்பாட்டில் பாதுகாப்பாய் இருந்த மக்கள் எல்லோரும் கையில் கிடைத்தவற்றை அள்ளிக் கொண்டு முல்லைத்தீவை நோக்கி ஓடத் தொடங்கினார்கள். மக்களோடு மக்களாக காவேரியின் குடும்பமும் இடம்பெயர்ந்தது. படிப்பின் மீது அலாதிப் பிரியம் கொண்ட காவேரி, தான் படித்த பாடசாலையைத் திரும்பிப் பார்த்தபடி தன் இரண்டு சகோதரிகளோடும் கண்ணீரோடு நடந்து கொண்டிருந்தாள்.

2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதி இராணுவம் கிளிநொச்சி நகருக்குள் நுழைந்தது. புலிகளின் கீழ் இருந்த கிளிநொச்சியை அதிகளவான உயிரிழப்புகளுடன் இராணுவம் கைப்



பற்றியது. இராணுவம் கிளிநொச்சிக்குள் நுழைந்தபோது அந்த நகரமே வெறிச்சோடிக் கிடந்தது. வீடுகள் கூரைகளின்றிக் கிடந்தன. மிக மோசமான வான் தாக்குதல் நடந்து கொண்டிருந்ததால், காவேரி தன் தாய் மற்றும் சகோதரிகளுடன் பதுங்குகுழிக்குள்ளேயே வசிக்க வேண்டியதாயிற்று. காவேரிக்கு படிப்பதற்கு கையில் புத்தகம் இருந்தாலும் படிப்பதற்கு வெளிச்சம் இல்லை. இருள் அவர்களை சூழ்ந்திருந்தது. கிளிநொச்சியைக் கைப்பற்றிய அரசு , முல்லைத்தீவைக் கைப்பற்றும் நோக்கத்துடன் அடுத்த அடியை எடுத்து வைத்தது. அவர்களுக்குதவியாக ஹெலிகொப்டர்களில் இருந்து குண்டுகள் வீசப்பட்டன. முன்னேறும் இராணுவத்தின் மீது விடுதலைப்புலிகள் ஆவேசத்தாக்குதல் நடத்தினர். மண்மீட்புப் போரில் சீருடை தரித்தவர்கள் மட்டும் போராளிகள் அல்லர். அந்த மண்ணில் வாழும் அனைவருமே போராளிகள் தான். தங்களுடன் தந்தை இல்லாதை உணர்ந்த காவேரி, " அம்மா, அப்பா எங்கே?" என்பாள். அந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாதவளாய் குண்டு வீச்சால் அதிரும் பங்கரின் மேற்பகுதியை அண்ணாந்து பார்த்தவாறு நீண்ட பெருமூச்செறிந்தவளாய் தன் மகளைத் தேற்றினாள் காவேரியின் தாய் .

**[வருவாள்]**

**கவிஞர் பிரேம்ராஜ், கொழும்பு**

## முகத்துக்கு ஏற்ற கூந்தல் அலங்காரம்!

ஒவ்வொரு வடிவ முகத்துக்கும் ஒவ்வொரு வகையான கூந்தல் அலங்காரம் பொருத்தமாக இருக்கும். கூந்தல் அலங்காரம் செய்துகொள்வதற்கு முன்பு, உங்கள் பணி மற்றும் வயதையும் கருத்தில்கொண்டு தேர்வுசெய்வது அவசியம். எந்த மாதிரி முகத் தோற்றத்துக்கு என்ன வகையான அலங்காரம் பொருத்தமாக இருக்கும் என்று பார்க்கலாம்.

**நீள் வடிவ முகம்**

நீள் வடிவ முகம் உடையவர்களுக்கு, தாடைப் பகுதி நீளமாக இருக்கும். இவர்கள், முடியைத் தளர்த்தி (லூஸ் ஹேர்) விடாமல் நடு வகிடு எடுத்து, முடியை இழுத்துப் பின்னலிட்டால் முகம் எடுப்பாகத் தெரியும். நீள் வடிவ முகம் உடையவர்கள் முடியை நெற்றியில் விழுவது போன்ற ஸ்டைலை முயற்சிக்க வேண்டாம்.

**முக்கோண வடிவ முகம்**

நெற்றி பெரியதாகவும் தாடை சிறியதாகவும் உள்ளது எனில், உங்களுக்கு முக்கோண வடிவ முகம். இத்தகையவர்கள் முடியை முன்னால் வெட்டிக்கொள்வது பொருந்தாது. ஹை பொனிடை போட்டுக்கொண்டால் நன்றாக இருக்கும்.

**நீள் வட்ட வடிவம்**

நீள் வட்ட வடிவ முகம் உடையவர்கள் அதிர்ஷடசாலிகள் என்றே சொல்லலாம். இவர்கள் எல்லா வகையான அலங்காரங்களையும் முயன்று பார்க்கலாம். எந்த விதமான முடி அமைப்பிலும் நீள் வடிவ முகம் அழகாக இருக்கும்.

**சதுர முகம்**

நெற்றி, தாடை, கன்னங்கள் எல்லாமே சமமாக இருந்தால், உங்கள் முகம் சதுரவடிவ அமைப்பைக் கொண்டது. இவர்களுக்குத் தோள்பட்டை வரை முடியை வைத்துக்கொள்ளும் கட் பொருத்தமாக இருக்கும்.

**வட்ட முகம்**

முன் நெற்றியையும் கன்னங்களையும் இணைக்கும் விதமாகக் காதுகளுக்குப் பின்னால் முடிவருவது போன்ற லேயர் கட் பொருத்தமாக இருக்கும். முடியின் அடர்த்தி குறைவாக உள்ளவர்கள் இதனைத் தேர்வுசெய்யலாம்.

## பாசத்தின் பெயரால் பாலியல் வன்முறைகள்



பெரும்பாலான பெண்கள் வெளியே சொல்லாததற்குக் காரணம் அது அணுகப்படும் விதத்தில் நிறைந்திருக்கும் சிக்கல் தான். எந்தப் புள்ளியிலும் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு எதிராகவே அது திரும்பக்கூடும். அத்தோடு குழந்தைகள் மீது செலுத்தப்படுகிற பாலியல் வன்முறைகள் பெரும்பாலும் பாசம் என்ற பெயரில் புறந்தள்ளப்படுகிறது.

**எஸ். அருந்தா**

**ரௌத்திரம் பழகு**

நான் ஒரு கிராமத்துப் பெண். திருமணத்துக்குப் பின் எனது கணவர் நகரத்துக்குக் குடியேறினார். என் கணவரின் அம்மாவும், அப்பாவும் எங்களுடன் தான் வசிக்கின்றார்கள். ஒரு நாள் என் கணவர் வேலைக்குப் போய்விட்டார். மாமி கோவிலுக்குப் போய் விட்டார். அப்போது தன்விருப்பத்துக்கு இணங்கச் சொல்லி மாமனார் என்னை வற்புறுத்தினார். அதிர்ந்த நான் உடனே மாமியிடம் விஷயத்தைச் சொல்ல அவரோ, "உன் மேல் அவர் அதிக பாசமாக உள்ளார். அதை நீ தப்பாகப் புரிந்து கொள்கின்றாய்." எனக் கூறி விட்டு கண்டும் காணாமல் இருந்தார்.

கணவனிடம் சொன்னபோது அவரும் அதைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. கடைசியில் என் அம்மா அப்பாவிடம் கூட இந்த விடயம் பற்றிச் சொல்லவில்லை. சொன்னாலும் அவர்கள் நம்பமாட்டார்கள். வேறொரு காரணத்தைச் சொல்லி தனிக்குடித்தனம் வந்துவிட்டேன். திருமணமாகிவந்த புதிதில் மாமாவை அப்பா என்றே அழைத்தேன். இப்போது நினைத்தால் அசிங்கமாக உணர்கின்றேன்.

வீடுகளில் தங்களுக்கு நடக்கும் பாலியல் சீண்டல்களைப்

### பாலியல் தொல்லைகளை பகிரங்கம் செய்வோம்

உங்கள் இரகசியம் காக்கப்படும். நீங்கள் சந்தித்த பாலியல்சார் பிரச்சினைகளையும், அதைக் கையாண்ட விதத்தையும் எழுதுங்கள். உங்கள் அனுபவம் பல பெண்களைப் பாதிப்புறாமல் காக்கட்டும்.

**'ரௌத்திரம் பழகு'**
அம்பலம் பதிப்பகம்,
இல. 241,
கைதடி – மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
**அல்லது**
ethirolimedia@gmail.com

# இலங்கையில் உள்ள சீனத் தூதருக்கு ஒரு பகிரங்கக் கடிதம்

எழுதியவர் : பேராசிரியர் லியனகே அமரகீர்த்தி

மேன்மைமிகு ஜி.ஷியான்லியங் அவர்கட்கு,
தூதுவர், சீன தூதராலயம், இலங்கை.

வாழ்த்துக்கள். நீங்கள் நலமுடன் இருப்பீர்கள் என எண்ணுகிறேன். இலங்கையில் தோன்றியிருக்கின்ற சமகால நிலைமைகள் தங்களுக்கு மகிழ்ச்சியைத் தரவல்லதாக அமைந்திருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. அப்படியான சிக்கல்கள் நிறைந்ததாக அது அமைந்திருப்பதில் தங்கள் பங்களிப்பும் அதிகம் இருக்குமென்பது எனது எண்ணம். நான் ஓர் இலங்கைக் குடிமகன். அரசாங்கத்துக்குரிய வரியைத் தவறாமலும் நேர்மையாகவும் செலுத்தி வருபவன். அது மட்டுமல்ல ஒரு பல்கலைக் கழகத்தில் கல்வி கற்பிக்கும் பேராசிரியருமாவேன். அத்துடன் எமது நாடு தங்களிடம் பெற்றிருக்கும் அந்தப் பாரிய கடனை திருப்பிச் செலுத்தும் தவணைக்குரிய கட்டணத்தில் எனது பங்களிப்பும் நிரந்தரமாக உண்டு என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். விரும்பியோ விரும்பாமலோ என்மீது அந்தப் பொறுப்புச் சுமத்தப்பட்டிருப்பதாக எண்ணுகிறேன்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தங்கள் கடற்படையினரின் நடவடிக்கைகளை கட்டமைப்பதற்கும், அப்பிராந்தியத்தில் தங்கள் செல்வாக்கை வலுப்படுத்தவும் தாங்கள் எமது நாட்டின் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைப் பயன்படுத்துவது எனக்கு நன்கு தெரிகிறது. அதை வைத்து வங்காள விரிகுடாவில் தாங்கள் இந்தியாவின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி வைத்திருப்பதற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதை நான் நன்கு புரிந்து கொண்டிருக்கிறேன்.

அத்துடன் தங்கள் நாட்டவருக்குச் சொந்தமான ஸங்கிறில்லா ஹோட்டலும் காலிமுகப் பசுமையான கடற்கரைக்கு அண்மையில் வெகு கம்பீரமாக எழுந்து நிற்பதையும் பார்க்கிறேன். அது எமது மதிப்பிற்குரிய தலைவர் காலஞ் சென்ற திரு.எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் உருவச்சிலையின் முக்கியத்துவத்தை மறைத்தவாறு மிகவும் கம்பீரமாக எழுந்து நிற்கிறது. அண்மையில் நாம் அன்பாக மதிக்கின்ற முன்னாள் பாதுகாப்புச் செயலர் திரு கோத்தாபய ராஜபக்ஷ அவர்கள் இலங்கையில் ஒரு புதிய சகாப்தத்துக்குரிய வரைபை உருவாக்க வேண்டி, தனது அரசியல் கூட்டங்களில் ஒன்றை ஸங்கிரில்லா ஹோட்டலில் கூட்டியிருந்தார். எமது கிராமத்து மக்கள் அதுபோன்றதொரு நிகழ்வை அப்படியானதொரு ஹோட்டலில் வைப்பதற்குரிய அனுசரணையைக் கொடுத்ததற்காகத் தங்களை வானுயர வாழ்த்தியதைத் தங்களால் புரிந்து கொள்ள முடியாதபடி அது சிங்களத்திலேயே பாடப்பட்டது. அங்கு கண்ட உண்மையான கள நிலவரத்தை பின்வருமாறு உங்களுக்கு அறியத் தருகிறேன். உங்கள் சிறப்பு என்னவென்று நீங்கள் அறியாதவரா என்ன? - நீங்கள் எமது கதாநாயகன் எனக் கருதும் GR I அதிகாரத்துக்கு வர உதவினால் நிச்சயமாக நீங்கள் அதி முக்கியமெனக் கருதும் ஒரு சீனத் தயாரிப்பை இந்த மண்ணுக்குக் கொண்டுவர முடியும்: அது வெள்ளை வானாக இருக்கும். அது அவர்களை மிகுந்த நம்பகத்தன்மையுடன் இரவுகளில் மக்கள் நட்பைப் பெற உதவும். அத்துடன் மிகவும் குறைந்த வருமானத்தைப் பெறுகின்ற ஊடகவியலாளர்கள் வழமையாக வாழும் குறுகிய சந்துகளுக்கூடாகவும், தெருக்களுக்கூடாகவும், சமூக அடிமட்டங்கள்வரை சென்று அவர்களைப் பின்தொடரவும் அவர்களைத் தாக்கவும் அது உதவும்.

அதி மேன்மைக்குரியவரே! நான் மீண்டும் ஸங்கிறில்லா ஹோட்டல் விவகாரத்துக்கு வருகிறேன். அந்த ஹோட்டல் கட்டப்பட்டுள்ள நிலத்தைப் பற்றி நான் கவலைப்படப் போவதில்லை. ஏனெனில், நீங்கள் மேற்கத்திய நாடுகளிடமிருந்தும், வடக்கு நாடுகளிடமிருந்தும் - உடனடியாக இந்தியர்களிடமிருந்தும் எங்களை இரட்சிக்க வந்திருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். இந்தியா எமக்கு புத்த சமயத்தைத் தந்த வரலாறு அனைவருக்கும் தெரிந்த விடயம். ஆனால் தற்போது அந்தப் புத்த சமயத்தைப் பாதுகாக்க இந்தியாவைவிட சீனர்களே எமக்குத் தேவைப்படுகிறார்கள். நீங்கள் சீனாவை அப்படியே இங்கே கொண்டு வந்ததைத் தவிர வேறொன்றையும் கொண்டு வரவில்லை என்பதும் எனக்கு நன்கு தெரியும். உதாரணத்துக்கு எனது மகள் விளையாடுகின்ற அந்தச் சிறிய பொம்மை கூட சீன தேசத்துத் தயாரிப்பு. அவைகள் சிறந்தவை. எப்படி? அவை வெகுவிரைவில் உடையக்கூடியவை. அதனால் எனது மகளுக்கு ஒரு பொம்மையுடன் நீண்ட காலத்துக்கு விளையாட முடியாது. எனவே அவள் விளையாடுவதற்கு இன்னொன்றை வாங்குவதற்காக நான் எனது ஊரிலுள்ள கடைக்குச் செல்ல வேண்டும். அதுவும் இன்னொரு சீனத் தயாரிப்பாகவே இருக்கும்.

நீங்கள் எமது நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப் போகும் எனது மகளுக்குரிய விளையாட்டுப் பொருட்களும், வெள்ளை வான்களும் நாம் பேசுவதற்குரிய பெரிய விடயங்களாக எனக்குத் தோன்றவில்லை. அதைவிட சீனாவுடனான ஒரு பிணைப்பு எனக்கு உண்டு. அவைதான் சீன இலக்கியங்கள். நான் அவற்றின் வாசகன். எனது பாடத்திலுள்ள ஒப்பீட்டு இலக்கியத்தில் சீன இலக்கியத்தின் சிங்கள மொழி பெயர்ப்பையும், சீன இலக்கியக் கோட்பாட்டை ஆங்கில மொழியிலும் நான் அடிக்கடி உபயோகிப்பது வழக்கம். சீனச் சிவப்பு விளக்கு, சிவப்பு ஸோகன், விடைபெறும் காமக் கிழத்தி ஆகியன எனக்கு எல்லா நேரமும் பிடித்தவற்றைக் கற்பிப்பதற்காக சீனத் திரைப்படங்களைப் பயன்படுத்துகிறேன். அத்துடன் தாங்கள் விரும்பாத சிலவும் உண்டு. அவை தங்கள் கலைப் படைப்புகள் தொடர்பானவை. அவை எப்பொழுதும் தாம் சார்ந்த சமுதாயத்தைக் குறை கூறுபவைகளாகக் காணப்படுகின்றன. அவையும் உங்களைப்போன்று சீனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

அதி மேன்மைக்குரியவரே, இந்தக் கடிதத்தைத் தங்களுக்கு எழுதுவதற்குரிய அனைத்துத் தகமைகளும் என்னிடம் உண்டென்பதை நீங்கள் காணலாம். தற்போது எமது நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கக் கூடிய உணர்வு பூர்வமான விடயங்களை செய்திகளாக்கிக் கொண்டிருக்கிறேன். இருந்தும் தொடர்வது நிச்சயமாக எனது கருத்தாக இருக்க வேண்டும் என்பதல்ல. இப்படி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இது பற்றிப் புத்தமத நூல்களிலிருந்து ஒரு சொற்றொடரை நான் கண்டுள்ளேன்.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற உள்ளூர் அரசியல் கொடுக்கல் வாங்கலின் பின்னணியில் நீங்கள் இருப்பதாக ஒரு வதந்தி உண்டு. உங்கள் தூதரகக் காரியாலயத்தில் நல்ல சிங்கள மொழிபெயர்ப்பாளர் ஒருவர் இருந்தால் அவரினூடாக நீங்கள் அனைத்தையும் அறிந்து கொள்ளலாம். எமது மதிப்பிற்குரிய முன்னாள் அமைச்சர் எஸ். பி. திசாநாயக்க தமது எதிரணியிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தம்வசப்படுத்தப் பேரம் பேசி இருப்பது. அந்தப் பேரங்களிலுள்ள இலக்கங்கள் எத்தனையென்பது உங்களுக்குத் தெரியுமா? ஏறத்தாழ ஐநூறு மில்லியன்கள். அவர்கள் எப்படி இந்தப் பணத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள்? இந்தப் பிராந்தியத்தில் தாம் வல்லரசாக விரும்புகின்ற இந்தியா அதைக் கொடுத்திருக்க வாய்ப்பில்லை. ஏனெனில், அவர்கள் கருமிகள். அமெரிக்கர்கள் ஏற்கனவே இந்தப் பிராந்தியத்தில் ஓர் ஏகாதிபத்திய சக்தியாக விளங்குகிறார்கள். அவர்கள் அப்படி இருப்பதையே விரும்புவார்கள். எனவே தற்போது அரசியல் இலஞ்சமாகப் பரிமாறப்படும் அந்தப் பணத்துக்குரிய மூலவர்களாக உங்களைத்தான் பல இலங்கையர்கள் சந்தேகிக்கின்றார்கள். ஏனெனில் இலங்கையில் நீங்கள் கொண்டுள்ள பாரிய முதலீடுகளான கொழும்புத் துறைமுக நகரம், ஹம்பாந்தோட்டைத் துறைமுகம், கொழும்புத் துறைமுகத்தின் ஒரு பகுதி மற்றும் தெரிந்தும் தெரியாததுமாக இருக்கின்ற தங்களது பல முதலீடுகள் ஆபத்தில் உள்ளதென நீங்கள் கருதுவதால் தான் அந்தப் பணத்தை வீசி எறிவதாக எம் மக்கள் நம்புகின்றனர். இதை நான் கடந்த ஒகஸ்ட் மாத நாடாளுமன்றக் கூட்டத்தொடரிலிருந்தும், தற்போது தெருவோர மக்கள் பேசுவதிலிருந்தும் அறிந்திருக்கிறேன்.

மேற்சொன்ன வதந்திகளால் தூண்டப்பட்டதால்தான் இதை எழுதியிருக்கிறேன். அதைவிட நான் ஒரு பல்கலைக்கழகத்தில் கற்பிக்கும் பேராசிரியர் என்றவகையில் ஒரு உண்மையான ஜனநாயகச் சமூகத்தைக் கட்டி எழுப்பப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறேன். அந்தச் சமூகமானது நாட்டில் ஜனநாயகத்தை மதிக்கின்ற அதேவேளை நாட்டின் சட்டத்தையும், ஒழுங்கையும் மதிக்கின்ற வகையில் மக்கள் இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். சிலவேளைகளில் இவ்வாறான நிலைமை சீன தேசத்தில் காண்பது அரிதாகக் கூட இருக்கலாம். சிலவேளைகளில் சட்டத்தின் மூலம் அங்கு ஆட்சி நடைபெறுமானால் நான் எண்ணியது தவறாகக் கூட இருக்கலாம்,(அதுவும் தர்க்கத்துக்குரிய விடயமாகவே இங்கு காணப்படுகிறது). ஆனால் எமது நாட்டில் ஜனநாயகம் பேணப்பட்டு வருவதற்குரிய ஒரு நீண்ட வரலாறு உண்டு. சில வேளைகளில் அது தவறானதாகக் கூட இருக்கலாம். எமது ஜனநாயகம் தங்களுக்குக் கேலிக்குரிய விடயமாகத் தென்பட்டால், அதற்கும் ஒரு காரணத்தைச் சொல்லுகிறேன். நாங்கள் ஒரு சிலர் ஒன்றிணைந்து இலங்கையைச் சோசலிச நாடாகக் கட்டியெழுப்பப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

(17ஆம் பக்கம் பார்க்க)

# பாட்டு சொல்லித்தரும் பாடம்!



● நவீன சவாரித்தம்பர்

"யாரை எங்கே வைப்பது என்பது யாருக்கும் தெரியல்லே. அட! அண் டங்காக்கைக்கும் குயில்களுக்கும் பேதம் புரியல்லே... பேதம் புரியல்லே. நான் என்னத்தைச் சொல்வேண்டா தம்பி... என்னத்தைச் சொல்வேண்டா..."

இப்பிடியொரு சினிமாப்பாட்டை நீங்கள் கேள்விப்பட்டிருப்பியள் தானே. பழைய காலப்பாட்டு, இந்தப்பாட்டை சிலநேரங்களிலை ரேடியோவிலை கேக்கேக்கை, பாட் டின்ர வரியள் சொல்லுற அர்த்தங்கள், ' தத்துவங்களைக் குறிச்சு, ரசிக்கிறது மட்டுமில்லை, நான் வாய்விட்டுச் சிரிக்கிறதும் கூடப் பாருங்கோ!

நான் ஏன் சிரிக்கிறதெண்டால் – யாரை... எவரை...எங்கை... எந்த இடத்திலை வைக்கிறதெண்டது யாருக்கும் தெரியாமல் இருக்கிறதாலைதான், இண்டுவரையிலும் பல பிரச்சினையள் தீர்க்கப்படாமல், நிறைவேற்றப்படாமல் இழுபாடாய் இருக்கெண்டது ஒருத்தருக்கும் விளங்காமல் கிடக்குது. இது அரசியலுக்கையும் நடக்குது. அடிமட்டச் சனங்களுக்குள்ளையும் நடக்குது.

இஞ்சை அரசியலைப் பொறுத்தவரையில யாரை, எவரை, எங்கை வைக்கிறதெண்டதைத் தெரியாமல்,

அவனவனுக்குச் சனங்கள் வாக்குப் போட்டு, "எங்களுக்காக எங்கட பிரச்சினையளைப் போய்க்கதையுங்கோ..." எண்டு பார்லிமெண்டுக்கு அனுப்பி வைச்சால், அவையள் அங்கைபோய் கோடிக் கணக்கில காசுபணத்தை வாங்கிக் கொண்டு, குபேரசீவியம் நடத்தப் பார்க்கினம். இப்பிடி இவையள் சீவியம் நடத்த வாக்குப் போட்ட சனங்க ளெல்லாம், ஒழுக்குக் கொட்டிலுக்கை கிடந்து உபத்திரவப் படுகுதுகள் கண்டியளே!

அதுமட்டுமே பாருங்கோ! தமிழ் சனத்துக்கான தீர்வை வாங்கித் தாறமெண்டு போன ஆக்களும், தீர்வு இந்தாவருகுது... அந்தா வருகுது... அதாலைவருகுது... இதாலை வருகுது... அங்கைபார் ஐ.நா. சபை கொண்டு வருகுது... எண்டு ஆயிரத் தெட்டு பம்மாத்துக் கதையள்கதைக்கிறதைப் பார்த்தால், உவையளை எங்கட சனங்கள் வைக்கக்கூடாத இடத்திலை வைச்சிட்டுதுகள்...எண்டது தெரிய வருகுதல்லோ!

ஒருதடவை ஒருத்தனுக்கு வாக்குப் போட்டு, அதுக்குப்பிறகு அவன்ரை சுயரூபம் தெரிஞ்சாப் பிறகும் அவனுக்கு வாக்குப்போட்ட சனங்கள் திருந்தின மாதிரியும் இல்லை. சுயமாக யோசிக்கிற மாதிரியும் இல்லை. யானை தனக்குத் தானே மண்ணள்ளிப் போட்டமாதிரி பேந்தும் பேந்தும் அவனுக்கே தங்கட வாக்குகளைப்போட்டு, தங்களைச் சீரழிச்சுக் கொண்டிருக்குதுகள். அதோடை பாருங்கோ..பள்ளிக் கூடத்துக்குப்போய் படிச்சவனெல்லாம் பண்டிதனுமல்ல! படிக்காமல் இருந்தவனுமெல்லாம் முட்டாளுமல்ல. தங்களை மெத்தப்படிச்சவரெண்டு காட்டுற பலபேருக்குக்கூட தலைக்குள்ளை அறிவெண்டது கிடையாது. இதை அவையளின்ரை பேச்சுகளும், செய்கைகாரியங்களும் பொதுவெளியில காட்டிக்குடுத்துப் போடும்.

இப்படிப்பட்ட மனிசர்கள் இருக்கக்கூடாத இடத்திலை இருந்தாலும், வைக்கக்கூடாத இடத்தில வைச்சு அழகு பார்க்க வெளிக்கிட்டாலும், அவலப்படுகிறதும், அந்தரப்படுகிறதும் தங்கட தேவை கருதிப்போற பொதுச்சனங்கள்தான் எண்டது வெளிப்டையான உண்மை கண்டியளே.

உதாரணத்துக்கு ஒண்டு ரண்டல்ல. பல விசயங்களைச் சொல்லிப் போட்டுப்போகலாம் பாருங்கோ.


ஒரு அன்றாட அலுவலுக்காக அரசாங்க அலுவலகத்துக்குப் போனால், அங்கையிருக்கிற நீட்டுக் காற்சட்டை போட்டிருக்கிற உத்தி யோகத்தர்மார், தங்களை நாடி வந்திருக்கிற சனங்களோடை கதைக்கிற கதையளையும், பழகிற விதத்தையும்கொண்டு அவையள் எந்தளவு தூரத்துக்குப் படிச்சிருக்கினமெண்டதும், அப்பிடிப்பட்ட ஆக்கள் படிப்பில முன்னேறி முன் கதவால வந்தவையோ அல்லாட்டி எம்பிமாருடைய சலுகைகளோடை சத்தம் கித்தம் போடாமல் ' பின் கதவால்' வந்தவையோ எண்டதையும் வெளிக்காட்டிப்போடும்.

இந்தப் பின் கதவாலை வாற ஆக்களுக்கு 'பண்பியல்' எண்ட ஒரு அறுப்பும் தெரியாது. விளங்கவும் மாட்டுது. மனிசன்மார், பொண்டாட்டிமாருடைய வீட்டுப் பிரச்சினையள் எல்லாத்தையும் தலையில கட்டிக் காவிச் சுமந்து கொண்டுவந்து, தங்கட தேவை கருதிவாற பொதுச்சனங்கள் மேலைதான் அந்த வேக்காளத்தைக் காட்டுவினம் கண்டியளே. அவரவர் அவரவருக்குரிய தகுதி நிலையளோடை அந்தந்த இடங்களிலை இருந்துகொண்டு அனுபவத்தாலை அடுத்த நிலைக்குப் போக வேணுமெண்டு நினைக்க வேணுமேயொழிய, எடுத்த எடுப்பில அகலக்காலை வைச்சு அடுத்தவனை ஏறி மிதிச்சு முன்னேறவேணுமெண்டு நினைக்கக் கூடாது.

இப்பவெல்லாம் ஆர் தகுதிநிலை பார்த்து அவரவரை அந்தந்த இடங்களிலை அமர வைக்கினம்? பணத்தைக் கண்டால் பிணமும் வாய் திறக்குமெண்டு...கோடிப்பணத்தைக் கவிட்டுக்கொட்டினால், கோழி மேய்கிறவனும் எம்.பியா கலாம் எண்ட நிலை வந்திட்டுது பாருங்கோ! இப்படிக் கோழிமேய்கிறவன், கொய்யாப்பழம் விக்கிறவன் எல்லாம் அரசியலுக்கையும், அரசாங்க உத்தியோகத்துக்கையும் இருந்தால், பொதுச்சனத்தின்ர நிலை...?

" யாரை எங்கே வைப்பது என்பது யாருக்கும் தெரியல்லே. அட! அண்டங்காக்கைக்கும் குயில்களுக்கும் பேதம்புரியல்லே... பேதம்புரியல்லே. நான் என்னத்தைச் சொல் வேண்டா தம்பி... என்னத்தைச் சொல்வேண்டா... இதுக்கு மேலை நானும் என்னத்தையடா சொல்லுறது தம்பி. ■

# "ஒப்பிரேஷன் விக்கினேஸ்வரன்"
## கூட்டமைப்புக்கு குலைப்பன் 03



● ஔண்யன்

முதலமைச்சரின் அலுவலகத்தில் சுமந்திரன் அணியினருக்கு விசுவாசமான அலுவலர் ஒருவர் மூலமாக, அங்கிருந்த கணினியில் சேமிக்கப்பட்டிருந்த விசாரணை அறிக்கையின் "பைல்" ஊடகங்களுக்கு மின்னஞ்சல் மூலம் கசிய விடப்பட்டது. வெறும் வாயை மென்று கொண்டிருந்த ஊடகங்களுக்கு இந்த அறிக்கை புரியாணியாக மாறியது. அந்த விசாரணை அறிக்கையின் முழு வடிவத்தையும் அனுப்பினாலும், ஐங்கரநேசன் மீதான குற்றச்சாட்டுக்களை மட்டுமே பிரதானப் படுத்தி - சுமந்திரன் அணியின் விருப்பப்படி- சில ஊடகங்கள் கொந்தளிக்கத் தொடங்கின. இதனையடுத்து எவ்வித சமாளிப்புகளையும் சொல்ல முடியாத விக்னேஸ்வரன் மாகாண சபையில் விசாரணைக் குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்ததோடு, ஒட்டு மொத்தமாக 4 அமைச்சர்களையும் பதவியில் இருந்து நீங்குமாறு கோரினார்.

இங்குதான் விக்னேஸ்வரனுக்கு பெரும் சிக்கல் தோன்றியது. இதுநாள்வரை அவருக்கு ஆதரவாக இருந்த குருகுலராஜா உள்ளிட்டவ்ர்கள் அவருக்கு எதிரான அணிக்குத் தாவினர். இந்தத் தாவல் சுமந்திரனால் உருவாக்கப்பட்டிருந்த அணிக்கு மிகப்பெரிய உத்வேகத்தைக் கொடுக்க, தாம் காத்திருந்த தருணம் இதுவே என நம்பினர்.

ஏற்கனவே முதலமைச்சர் கனவில் கொட்டாவி விட்டுக் கொண்டிருந்த சி.வி.கே. சிவஞானத்தையும் இந்தத் திட்டத்துக்குள் உள்வாங்கி, விக்னேஸ்வரனுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டது. ஆனால் அது விக்னேஸ்வரனுக்கு மக்கள் மத்தியில் திடீர் மதிப்பை உண்டு பண்ண, அவருக்கு ஆதரவாக பெருந்திரளான இளைஞர்கள் போராட்டத்தில் குதித்தனர். இப்படியே போனால், அது கட்சிக்கு மக்களிடையே இருக்கும் செல்வாக்கை இழக்கச் செய்துவிடும் என்று கணித்த, கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், விக்னேஸ்வரனோடு கடிதம் மூலம் தொடர்பு கொண்டு நிலைமையைச் சீராக்கினார். விசுவாச அணியின் சதி புஸ்வாணமானது.

ஆனாலும் தமது முயற்சி தோற்ற வெப்பிராயத்தில், மாகாண சபையை அதன் பின்னர் கூச்சலும் குழப்பமுமான சந்தையாக மாற்றுவதில் சயந்தன், அஸ்மின், ஆர்னோல்ட் ஆகியோர் அயராது பாடுபட்டனர். மக்களுக்கான நலத்திட்டங்களைக் கிடப்பில் போட வைத்தனர். நியதிச் சட்ட உருவாக்க முயற்சிகளுக்குத் தடை போட்டனர். அடிக்கடி சபையை ஒத்திவைக்கச் செய்தனர். "வடக்கு மாகாண சபையின் செயற்றிறன் இல்லாத நிலைக்கு காரணம் முதலமைச்சர் விக்னேஸ்வரனே" என்ற தோற்றத்தை உருவாக்கவே இப்படி மக்கள் நலனையும், மாகாண சபையின் செயல்களையும் இவர்கள் மிதித்தார்கள். அவர்கள் போட்ட இந்தத் திட்டம் ஓரளவுக்குப் பயனளிக்கவும் செய்தது. ஒட்டு மொத்தமாக மாகாண சபையின் மீது மக்களுக்கு வெறுப்புணர்வு வரத் தொடங்கியது. அந்த வெறுப்பில் கொஞ்சம் விக்னேஸ்வரன் மீதும் திரும்பியது.

இந்த நிலையில் தான் மாகாண சபையின் ஆயுள் முடிந்தது. இப்போது கூட்டமைப்புக்கு ஒரு சிக்கல். அடுத்த மாகாண சபைக்கு யாரை முதலமைச்சர் வேட்பாளராக நியமிப்பது? விக்னேஸ்வரனை விட்டு வேறு ஒருவரைக் களமிறக்கினால், நிச்சயமாக விக்னேஸ்வரன் இன்னொரு கட்சியூடாக எதிர்த்து நிற்பார். இது கூட்டமைப்பின் வாக்கு வங்கியைப் பலமாக ஆட்டங்காண வைக்கும். ஒரு பலமான எதிரியைத் தாமே உருவாக்க சம்பந்தன் விரும்பவில்லை. அதனால் சுமந்திரன், மாவை சேனாதிராசா ஆகியோரை எப்படியாவது சம்மதிக்க வைத்து விக்னேஸ்வரனை மீண்டும் முதலமைச்சர் வேட்பாளராகக் கூட்டமைப்பில் களமிறக்க சம்பந்தர் முயன்றார். ஆனால் அது கைகூடவில்லை.

(ஒப்பிரேஷன் அடுத்த வாரமும்)

# இலங்கையில் உள்ள சீனத் தூதருக்கு ஒரு பகிரங்கக் கடிதம்

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதி மேண்மைக்குரியவே!. "சோசலிசம்" என்றதன் அர்த்தத்தை விளங்கிக் கொண்டவரா நீங்கள்? அது அங்கு தொன்மையாகப் பேணப்படுகிறதா? அதை அடைவதற்கு நான் இடதுசாரிகளோடு சேர்ந்து இங்கு பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். ஆனால் நீங்கள் இவ்வளவு சீன தேசத்து நிதியைக் கொண்டு வந்து எமது அரசியற் களத்தில் கொட்டுவீர்களானால், எங்களால் எப்படி ஒரு கொள்கையுள்ள அரசியலை கட்டியெழுப்ப முடியும்? உங்களுக்குத் தெரியும் அமெரிக்கத் தூதரகங்கள் போன்றவை இங்கு ஒரு சாதாரண அளவில் தன்னும் சோலிச நடவடிக்கைகள் வளர்வதை விரும்பமாட்டார்கள். அவர்கள் தான் பல இடங்களில் வெகுஜனப் படுகொலைகளைச் செய்தவர்கள். சோசலிச வரலாற்றோடு பெருந்தலைவர் மாவோ சே துங் மரபு வழி வந்த நீங்கள் ஓர் ஊழல் நிறைந்தவர்களை ஆட்சிக்குக் கொண்டு வர முயற்சி செய்யலாமா? அல்லது அவர்கள் தொடர்ந்து இருக்க உதவலாமா?

அதி மேண்மைக்குரியவரே! தற்போது இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் அரசியற் சதுரங்கத்தில் உபயோகப்படுத்தப் பட்டிருக்கும் பணத்தை, தற்போது காணப்படும் அரசியல் நெருக்கடிகள் ஒரு முடிவுக்கு வரும்வரை மீளப்பெற்று வைத்திருப்பீர்களா? என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன். தற்போது தோன்றியுள்ள அதிகாரப் போட்டியை அது சம்பந்தப்பட்டவர்கள் தாமாகத் தீர்த்து வைத்த பின்பு, தாங்கள் வழமையாக மேற்கொள்ளும் பாரிய அபிவிருத்தி எனச் சொல்பவைகளுக்கு "தங்கள் வழி" சென்று அவற்றை நடைமுறைப்படுத்தலாம்! (இதுவும் நாம் தெருவில் கேட்டவைகளில் ஒன்று)

வேறு ஏதாவது தூதராலயங்களும் தற்போது காணப்படும் அரசியற் சதுரங்கத்தில் இது போன்ற ஒரு அநாகரீகச் செயலைச் செய்வதாக அறிந்தால், தயவு செய்து அவர்களுக்கும் இதன் பிரதிகளை அனுப்பிவிடுங்கள்.

நன்றி

உங்கள் உண்மையுள்ள
லியனகே அமரகீர்த்தி
பேராசிரியர் – பேராதனைப் பல்கலைக் கழகம்.

**தமிழில் : மோகன் வைத்திலிங்கம்.**
**(நன்றி : கொழும்பு ரெலிகிறாப்)**

# கஜா புயல் போட்டுது. மைத்திரி புயல் ஓயேல்லை?



"பாத்தியே அண்ணை மைத்திரியின்ரை அதிரடியை? நெத்தி அடி அடிச்சு விட்டிட்டார்" எண்டு இரண்டு காதிலையும் செம்பருத்தம் பூ வைச்சுக் கொண்டு "சன்னதிக்குப் போனனான்" எண்டு கந்த சட்டிப் பிரசாதத்தையும் ஒரு சரையிலை கொண்டு காலமை வந்தான் முதலி.

"டேய் முதலி. மைத்திரி அடிக்கிற குத்துக்கறணம் எல்லாம் அடிச்சு முடிஞ்சிது. இனி அடிக்க ஒரு அடியும் இல்லை. இனி அந்தாள் அடியன்தான் அடிக்க வேணும். சும்மா அதை இதைச் சொல்லி ஆக்களைப் பேக்காட்டாதை. ஜேவிபி காரர் சொன்ன மாதிரி மைத்திரி இனி முல்லேரியாவுக்குப் போகவேண்டிய ஆள் போலைதான் கிடக்கு.சும்மா ஜனாதிபதி எண்டு இருக்கத் தகுதியில்லாத ஆள். நேரத்துக்கு ஒரு கதை.ஏதோ தான் ஒரு கடவுள் எண்ட நினைப்பு அவருக்கு" எண்டு நான் கத்தின கத்துதலிலை முதலி மூச்சும் விடேல்லை. அப்பிடியே கட்டிலை பிரசாதச் சரையை வைச்சிட்டுத் திரும்பிப் பாக்காமல் ஒரே ஓட்டமா ஓடிவிட்டான்.

ஒரு குடும்பத்தை நடத்திற ஆணுக்கு அல்லது பெண்ணுக்கு தலை சரி இல்லாட்டி எப்பிடி அந்தக் குடும்பம் சீரழியுமோ? அப்பிடி நாடு அல்லோலப்பட்டுப் போய்க் கிடக்கு. உலகமெல்லாம் பாத்துச் சிரிக்கிற மாதிரிக் கோமாளித்தனம் பண்ணி வைச்சிருக்கிறார் மைத்திரி. காலமை கனகத்தின்ரை பேரன் பேப்பரைக் காட்டிக் கேக்கிறான் "தாத்தா...தாத்தா இப்ப ஏன் ஜனாதிபதி மாமாவை ரீவி காட்டூனிலை வாற கோமாளிமாதிரிக் கீறி வைச்சிருக்கினம்." எண்டு. அதுக்கு நான் சொன்னன் "நீயும் அவர் செய்யிற மாதிரிக் கோமாளித்தனங்களைச் செய்தால் உன்னையும் இப்பிடித்தான் கீறுவினம்" எண்டு அவன் அப்பிடியே முதலி போனமாதிரிப் போவிட்டான்.

மைத்திரி மனுசனே?தன்னை நம்பி வாக்களிச்ச சனத்தை அந்தாள் கணக்கெடுக்கேல்லை. தன்ரை வெற்றிக்காக உழைச்ச மனிசரைப் பற்றி அந்தாள் சிந்திக்கேல்லை. தன்னை ஏன் கொண்டு வந்தவை எண்டதையும் மறந்து போச்சுது. ஆருக்கெதிராத்தான் எலக்சன் கேட்டவர் எண்ட விசயத்தையும் நினைக்கேல்லை. "குரங்கின்ரை கையிலை குடுத்த பூமாலை மாதிரி. அந்த ஆள் ஒரு மனுசனே இல்லை" எண்டும் சனம் திட்டுது.


முதலிலை இப்பிடியான பதவிக்கு ஆக்களைக் கொண்டு வரமுன்னம் அமெரிக்காவிலை செய்யிற மாதிரி அவரைப் பற்றின எல்லா வகை றிப்போட்டும் எடுக்க வேணும். வெளிநாட்டுக்குப் போற ஆக்கள் எடுக்கிற மெடிக்கலும் எடுக்கவேணும்.அப்ப ஆளுக்கு விசர் இருந்தால் தெரியுமெல்லே? அது தான் வெளிநாட்டுக் காரர் மெடிக்கல் கேக்கிறவை. தங்கடை நாட்டுக்கை வந்து நிண்டு கொண்டு சதிராடி நாட்டைக் கெடுக்கப்பிடாது எண்டு அவை நினைக்கிறது சரிதானே?

"நாங்கள் கனக்கப் பிழை விட்டிட்டம் எண்டது தெரியுது. மைத்திரி உப்பிடிப் பல தடவை செய்ததை ஆரும் கணக்கெடுக்கேல்லை. எல்லாரும் நினைச்சது அவர் அரசியல் செய்யிறார். அவர் ஒரு இராஜதந்திரி. அவர் பெரும்பான்மைக்குச் சப்போட் பண்ணுறார் எண்டு. ஆனால் அவர் சித்தம் கலங்கிப் போயிருக்கிற கதை இப்பதானே தெரிய வந்திருக்கு. இப்ப கூட்டமைப்புக்குத் தெரியும் தாங்கள் எத்தினையாவது தடவை சிங்களத் தலைமையிட்டை ஏமாந்து போனம் எண்டு. சம்பந்தர் அரிவரிக்குப் பிறகு இப்பதான் இரண்டு கை விரலாலையும் எண்ணிப் பாத்தவராம். அப்பவும் கணக்குப் பிழைக்குதாம்." – எண்டதை நான் சொல்ல,

"அண்ணை அவைக்கு தெரியும் உந்த விளையாட்டுகள் எல்லாம். ஆனால் இடையிலை முறிக்காமல் இருந்தவை ஏனெண்டால் அவைக்குக் கிடைச்ச கோடியாலையும். வண்டிப் பொமிற்றாலையும், சொகுசு குறையாமல் அவை குடுத்த வசதியளும், பெரிய சம்பளமும் தான் காரணம் எண்டு உனக்குத் தெரியுமோ? அவை குடுத்த வாகனப் பொமிற்றை வெளியிலை வியாபாரிக்கு நல்ல விலைக்கு வித்துப்போட்டு தாங்கள் வேறை வாகனம் வாங்கிக் கொண்டு மிச்சக் காசை பாங்கிலை போட்டும் இருக்கினமெண்டதும் உனக்குத் தெரியுமோ? இதிலை வெறுவாய் சப்பினது பாவம் அவையின்ரை எடுபிடியள், ஏமாந்தது நீயும் நானுந்தான். சும்மா உதைக் கதைச்சு மினைக்கெடாமல் போய் பாக்கிற வேலையைப் பார்" – எண்டு முதலி மறுத்தான் குடுத்தான்.

"அவன் யோசிக்கிறமாதிரி எல்லாரும் யோசிச்சால் ....?" எண்டு நான் யோசிச்சன்...????!!

—வில்லங்கம் விநாசி



# தமிழில் மிகச் சிறந்த 'த்ரில்லர்' ராட்சசன்!

● சாரு நிவேதிதா

திரைக்கதையில் ராட்சசன் போல் சுத்தமாக இருந்த ஒரு தமிழ் சினிமாவைப் பார்த்ததில்லை என்ற அர்த்தத்தில் ராஜேஷ் எழுதியிருந்த பதிவைப் பார்த்து விட்டு, ராட்சசன் திரைப்படத்தைப் பார்த்தேன்.

நான் கொரியன் த்ரில்லர் படங்களையும் அடிதடி சண்டைப் படங்களையும் மிக விரும்பிப் பார்ப்பவன். சொல்லப்போனால் என் ஒரே பொழுது போக்கு அதுதான். கிட்டத்தட்ட எல்லா கொரியன் படங்களையும் பார்த்து விட்டதால் இப்போது ஹொலிவுட் தொடர்களைப் பார்க்கிறேன்.

இப்படியாக நான் ஒரு த்ரில்லர் விரும்பியாக இருக்கும் அனுபவத்தில் சொன்னால், 'I saw the devil' அளவுக்குப் பிரமாதமான ஒரு த்ரில்லரைப் பார்த்ததே இல்லை. அப்படி ஒரு த்ரில்லர் படம் தமிழில் எடுக்கப்படும் சாத்தியம் உண்டா என்றெல்லாம் ஆச்சரியப்பட்டிருக்கிறேன்.

இப்போது I saw the devil மாதிரி ஒரு த்ரில்லர் தமிழில் வந்து விட்டது. இரண்டரை மணி நேரப் படத்தில் ஒரு நொடி கூட சோர்வாகவோ அலுப்பாகவோ இல்லை. வழக்கமான பாடல்கள், நகைச்சுவை, டூயட் போன்ற கண்றாவிகளும் இல்லை. படத்தின் மர்ம முடிச்சுகள் மிகக் கச்சிதம். இயக்குநர் ராம்குமார் மிகக் கடுமையாக உழைத்திருக்கிறார். இன்ஸ்பெக்டராக நடித்திருக்கும் பெண் அனாயாசமாக நடித்திருக்கிறார். வாத்தியாராக நடித்திருக்கும் மனிதரின் முகத்தைப் பார்த்தாலே வில்லத்தனம் தெரிகிறது. மகாநதியின் துலுக்காணம் ஞாபகம் வந்தது.



படத்தில் நுணுக்கங்கள் அதிகம். ஒரே ஒரு நுணுக்கம் மக்களுக்குப் புரிந்திருக்காது. அந்த இயக்குநர் கொஞ்சம் அதிக நொடிகள் கமராவில் காண்பித்திருக்கலாம். ராதா ரவி சாகும் போது ஹீரோவுக்கு சமிக்ஞை கொடுப்பதற்காக ரத்தக் கறை படிந்த தன் கையைத் தரையில் வைத்து அழுத்தியிருப்பார். அப்படி அழுத்தும் போது ஆறு விரல்கள் வருவது போல், இன்னொரு விரலை மேலதிகமாகப் பதிந்திருப்பார். அதைப் பார்த்துக் கொலையாளிக்கு ஆறு விரல்கள் இருக்கும் என்பதை ஹீரோ யூகிப்பார்.

இப்படிப்பட்ட நுணுக்கம் தான் ஒரு படத்தைத் திரும்பத் திரும்பப் பார்க்க வைக்கின்றது. அந்தக் காட்சியின் முக்கியத்துவத்தைப் பார்வையாளர்களுக்குக் கொஞ்சம் புரிய வைத்திருக்கலாம்.

மற்றப்படி அற்புதமான முதல் தரமான த்ரில்லர்.

# தூரிகை சொல்லும் துயரத் தருணங்கள்

● எஸ்.சுமன்

'ஓவியங்கள் தவிர்த்து உலகிடம் பேசுவதற்கு வேறு ஒன்றுமே இல்லை' என்றவர் உலகப் புகழ் பெற்ற ஓவியரான வின்சென்ட் வான்கா. இதைக் கலையார்வத்தில் மட்டும் அவர் சொல்லவில்லை. வாழ்ந்த காலத்தில் அந்த அளவுக்குப் பெரும் புறக்கணிப்புக்கு அவர் ஆளானார். 37 வயதில் அகாலமாய் முடிந்த வான்காவின் உருக்கமான வாழ்க்கை அட் எடர்னிடிஸ் கேட் ( At Eternity's Gate ) என்ற திரைப்படமாக வெளிவரவுள்ளது.

சிறுவயது முதலே குடும்பம், பள்ளி, மதபோதகர் எனப் பலரால் வான்கா புரிந்துகொள்ளப்படாமலும், போதிய அரவணைப்பின்றியும் மனச்சோர்வுக்கு ஆளானார். வளர்ந்ததும் வறுமையும் சேர்ந்துகொள்ள மன அழுத்தத்தில் விழுந்தார். வாழ்நாளில் பத்தாண்டுகளுக்கும் குறைவான காலத்திலேயே அவர் தூரிகை ஏந்தியிருந்தார். அதிலும் கடைசி 6 ஆண்டுகளில் பின்னாளில் உலகப் பிரசித்தி பெற்ற ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஓவியங்களை வரைந்து தள்ளினார். அதற்கான பொருளையோ புகழையோ வாழ்நாளில் வான்கா ருசிக்கவில்லை என்பது மற்றுமொரு சோகம்.


பிரான்ஸில் வாழ்ந்த கடைசி 2 ஆண்டுகளில் வான்காவை அலைக்கழித்த மனப் பாதிப்புகளும் வறுமையும் அவற்றின் மறு



முனையில் பீறிட்ட கலைத்தாகமும் உச்சத்திலிருந்தன. ஓவியங்களின் வழியே ஆதியும் அந்தமுமற்ற வெளியுடனான வான்காவின் உரையாடல் அப்போதுதான் நிகழ்ந்தது. தன் காதை அறுத்துக்கொண்டது முதல் சர்ச்சைக்குரிய தற்கொலை முயற்சி வரையிலான தருணங்களை இந்தத் திரைப்படம் அலசுகிறது.

கலைஞனின் துயர வாழ்க்கையைப் பகிரும் படம் என்றாலும், வான்காவின் பார்வையிலான காடு, மலை, வானம் உள்ளிட்ட இயற்கைக் காட்சிகளைத் தனித்துவமாகப் படம் பிடித்திருக்கின்றனர். வான்காவாக வில்லெம் டேஃபோ (willem dafoe) நடித்திருக்கிறார். படத்தை இயக்கியவர் ஜூலியன் ஸ்னாபெல் (julian schnabel). சாவதற்கு 2 மாதம் முன்பாக வான்கா வரைந்த ஓவியத்தின் பெயரையே திரைப்படத்தின் தலைப்பாகச் சூட்டியுள்ளனர். அட் எடர்னிடிஸ் கேட் திரைப் படம் இம்மாதம் திரைக்கு வருகிறது.

# பெண்களும் காதல் உலகும்




● எஸ்.எஸ்.லெனின்

விடலைப் பருவத்து பெண்ணின் பட்டாம்பூச்சிக் காதல், மத்திம வயதுப் பெண்ணின் முதிர்ச்சியான காதல் என இருவேறு படங்கள் மூலம் வாழ்வின் தனிப்பெரும் துணையாகும் காதலின் சுசிந்துருகலை பார்க்கப் போகிறோம்.

ஆணின் 'ஓட்டோ கிராஃப் அனுபவங்கள்' ஏராளமான திரைப்படங்களாக வந்திருக்கின்றன. ஒரு பதின்ம வயதுப் பெண்ணின் ஓட்டோகிராஃப் அலப்பறைகளாகக் கடந்த ஓகஸ்டில் 'To All the Boys I've Loved Before' திரைப்படம் வெளியானது. மூன்று சகோதரிகளைக் கொண்ட குடும்பத்தில் பள்ளி முடித்து ,கல்லூரியில் அடியெடுத்துவைக்கும் 16 வயது இளம்பெண் லானா.

இவரைச் சுற்றி நிகழும் சம்பவங்களை இவரது பார்வையிலேயே சொல்வதாகப் படம் விரிகிறது. விடலைப் பருவத்துக்கே உரிய வகையில் அந்தரங்கமாக அவள் பல ஆண்டுகள் கட்டிக்காத்த ரகசியங்களில் ஒன்று அவளறியாது ஓர் அசந்தர்ப்ப தருணத்தில் உடைபடுகிறது. உடன் படித்த சிறுவன், பக்கத்து வீட்டுப் பையன் என, தன்னை ஈர்த்த ஆண்கள் சிலருக்கு தன்னுடைய உணர்வுகளைக் கடிதமாக எழுதி அவற்றையெல்லாம் தானே பொத்தி வைத்திருக்கிறாள்.

சிறுவயது ஈர்ப்பும், களேபரங்களும் அவற்றுக்கு ஆதாரமான உண்மைச் சம்பவங்களுமாக உருக்கமாக நீளும் அந்தக் கடிதங்களை அவ்வப்போது தனிமையில் வாசித்துச் சிலாகிப்பதில் அவளது வாலிபம் திருப்தி கொள்கிறது. திடீரென ஒரு நாள் அந்தக் கடிதங்கள் காணாமல் போகின்றன. அடுத்த நாளே அவளது கனவுக் காதலர்கள் கையில் மேற்படி கடிதங்களுடன் தேடி வருகிறார்கள். அவர்களில் ஒருவன் அவள் அக்காவின் காதலன் வேறு.

இந்த விபரம் அக்காவுக்குத் தெரிவதும், பொத்தி வைத்த கடிதங்கள் வெளியானதன் குட்டு உடைபடுவதும், காதல் கடிதங்களால் நட்பு வட்டத்தில் எழும் தடுமாற்றங்களும், இவையனைத்துக்கும் மத்தியில் அந்தப் பெண்ணின் காதல் என்னவாகிறது என்பதுமே மீதிக் கதை. இதே தலைப்பில் அமெரிக்காவில் வெளியாகி வரவேற்பு பெற்ற புதினத்தைத் தழுவி திரைப்படமாக்கி உள்ளனர். அமெரிக்க கலாசாரம் ஆங்காங்கே உதைத்தாலும், இளம்பருவத்தின் மாசற்ற காதலும், சகோதரிகளின் பாசமுமாக படம் ரசிக்கவே வைக்கிறது.

(1505 முதல் 1948 வரையான யாழ்ப்பாணத்தின் வரலாற்றைக் கட்டுரையாளர் இங்கு தொடராகப் பதிவு செய்யவுள்ளார். இங்கு கூறப்பட்டுள்ள தகவல்கள் பெரும் பாலும் ஆங்கில மூலங்களில் இருந்து பெறப்பட்டவை. தகவல்களில் வேறுபாடு காணப்படும் சந்தர்ப்பங்களில் இரண்டு தகவல்களையும் இங்கு தரவுள்ளதாகவும், அவை தொடர்பில் தான் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை எனவும் கட்டுரையாளர் தெரிவித்துள்ளார்.)




# நில ஒதுக்கீட்டுக்கான அழுத்தம்

1630 இல் Freitas மீண்டும் இலங்கைக்கு அனுப்பப்பட்டான். ஆனால் பதுளையில் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக தோம்பு பதியும் வேலைகள் நடைபெறவில்லை.

### Amouro Roiz ன் சிறந்த அனுகுமுறை

1635-1637காலப்பகுதியில் Amouro Roiz's இரண்டு தடவை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்ததுடன் தோம்பின் முக்கிய பகுதிகள் சுருக்கமாக பூரணப்படுத்தப்பட்டன. ஆறு தோம்பு புத்தகங்களில் தோம்புகள் பதியப்பட்டன. ஒவ்வொரு மாகாணத்திற்கும் மூன்று வடமாரட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, முக்கிய மாகாணமான வலிகாமத்துக்கு இரண்டு, தீவகத்துக்கு ஒன்று என தோம்புகள் இவரால் பூர்த்தியாக்கப்பட்டன. ஆனால் அதற்கு முன்னர் மன்னார், மாந்தோட்டம், வன்னி போன்ற இடங்களின் பதிவுகளை மீளாய்வு செய்யவேண்டி இருந்தது. இவர் தோம்பு பதியும் வேலை பூரணப்படுத்த வேண்டுமென்பதில் தெளிவாக இருந்தார்.

Antonio De fonseka ozouro கொழும்புக்கு தோம்பு பதிவாளராக நியமிககப்பட்டார். இதனை அடுத்து Amouro Roiz's கோவாவுக்கு திரும்பி சென்றார். லிஸ்பன் நிர்வாகம் Amouro Roiz'sஐ மீண்டும் இலங்கைக்கு அனுப்பி தோம்பு பதியும் வேலைகளைப் பூர்த்தியாக்க விரும்பியது. ஆனால் இவரது விஜயத்தில் தாமதம் ஏற்பட்டது.

### தோம்பு பூரணம்

அடுத்த 7-8 வருடங்களில் யாழ்ப்பாணத்தில் எந்த விதமான தோம்பு பதிவுகளும் இடம்பெறவில்லை. 1645 ஏப்பிரல் - ஒக்ரோபர் காலப்பகுதியில் Mascurnos கட்டாயமாக யாழ்ப்பாணத்தில் தங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. காலநிலை சீரின்மை காரணமாக கோவாவுக்கு செல்லும் வழியில் மன்னாரில் தங்க வேண்டி ஏற்பட்டது. இந்தக் காலப்பகுதியில் யாழ்ப்பாண குடாநாட்டினதும் தீவுப்பகுதியினதும் தோம்பு பதியும் வேலையை இவர் பூரணப்படுத்தினார். Amouro Roiz பூரணப்படுத்திய ஆறு புத்தகங்களுடன் ஏழவதாக ஒரு புத்தகத்தை இவர் தயாரித்தார். இதில் ஏற்கனவே தயாரித்த ஆறு புத்தகங்களிலும் விடுபட்டவற்றை உள்ளடக்கினார். இதே போல் மன்னார், மாந்தோட்டம், வன்னி என்பவற்றுக்கும் ஏற்கனவே தயாரித்த புத்தகம் ஒன்றையும் தயாரித்தார். இந்த மூன்று பிரதேசங்களும் முப்பது கிராமங்களை உள்ளடக்கி இருந்ததுடன் இறையாண்மை, நிலப்பரப்பு என்பவற்றையும் கொண்டிருந்தது. இறுதியாக தயாரிக்கப்பட்ட ஆவணம் நியாயதிக்க எல்லைகளை குறிப்பிட்டதுடன் அர்சாங்க ஆவணமாகவும்பாவிக்கப்பட்டது. பூரணப்படுத்தப்பட்ட யாழ்ப்பாண தோம்பு அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்தது. Roiz பிரச்சினைக்கு முன்னர் இதைப் பூரணப்படுத்தினார். அத்துடன் 1637ஆம் ஆண்டு நவம்பர் 28-30, 1642செப்ரெம்பர் 26 ஆகிய திகதிகளில் எழுதிய கடிதங்களில் யாழ்ப்பாணத்தில் இறைவரி, தோம்புகளின் ஊடாகவே பெறப்படுவதாக கடிதம் எழுதினார். Mascarena, Roiz இன் வேலைகளை வெகுவாகப் பாராட்டினார்.

### தோம்புப்பதிவு பிந்தியமைக்கான காரணங்கள்

யாழ்ப்பாண தோம்புப்பதிவை பூரணப்படுத்துவதற்கு கால்நூற்றாண்டு தேவைப்பட்டது. ஆரம்பத்தில் தோம்பு பதியும் வேலை யாழ்ப்பாணத்தில் வசித்த ஓர் உத்தியோகத்தரிடம் ஒப்படைக்கப்பட்டது. இவரது பதவிக்காலம் மூன்று ஆண்டுகள் மட்டுமே. அத்துடன் தோம்பு பதியும் வேலையுடன் மேலதிகமாக ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் கறுவா வியாபாரத்தை கவனிக்க கொழும்பு செல்லவேண்டிய வேலையும் Feritasவிடம் ஒப்படைக்கப்பட்டது. தனது ஒவ்வொரு கொழும்பு விஜயத்தின் போதும் தோம்பு பதியும் வேலை பாதிப்படைவதாக சுட்டிக் காட்டியிருந்தான்.

கோவாவிலிருந்த உயரதிகாரிகள் தோம்பு பூரணப் படுத்தப்படாத நிலையில் ஏனைய வேலைகளை பெரிதாக வரவேற்கவில்லை. தமிழ் ஆவணங்கள் மொழி பெயர்க்கபப்பட வேண்டி இருந்தன. யாழ்ப்பாண விவசாயமுறை பயிர்கள், வயல்களின் சராசரி வருமானம் என்பன பற்றி எல்லாம் கற்றுக்கொள்ள வேண்டி இருந்தது.

### யாழ்ப்பாண நிலங்களை கையகப்படுத்தலும் தோம்பும்

யாழ்ப்பாணத் தோம்பு, கோட்டை இராச்சியத்தின் தோம்பை விட சிறந்ததாக காணப்பட்டது. கோட்டை இராச்சியத்தில் இருந்த தோம்புகளின் எல்லைகள் கிராமங்களாக காணப்பட்டன. கிராமத்தில் இருந்த வளங்கள் தோம்புகளில் காணப்பட்டன.

(சமர் தொடரும்)

---



# மைத்திரியின் ஆட்சிக் கவிழ்ப்பின் பின்னால்

■ ந.பரமேஸ்வரன்

**2015**ஆம் ஆண்டு ஜனவரி எட்டாம் திகதி இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களினதும் ஆதரவுடன் ஆட்சியைக்கைப்பற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கடந்த ஒக்ரோபர் 26ஆம் திகதி தன்னிச்சையாக நாடாளுமன்றத்தைக் கலைத்து மக்களால் தெரிவு செய்யப்பட்டு பிரதமராகப் பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்கவைப் பதவியில் இருந்து நீக்கி விட்டு, மக்களால் தோற்கடிக்கப்பட்ட மகிந்த ராஜபக்சவை பிரதமராக நியமித்துள்ளார். இதன் மூலம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனநாயகத்தை குழி தோண்டிப்புதைத்து விட்டார் என்ற விமர்சனம் சகல தரப்புகளாலும் முன்வைக்கப்பட்டு வருகிறது. இந்த விமர்சனங்கள் ஒருபுறமிருக்க, இலங்கை வரலாற்றை எடுத்துப்பார்த்தால் இப்படியான மரபுகளை மீறி ஆட்சியைக் கைப்பற்றிய சம்பவங்கள் பல இலங்கை வரலாற்றில் இதற்கு முன்னரும் இடம்பெற்றிருப்பது கண்கூடு.

இலங்கையின் வரலாற்றைக்கூறும் நூல் எனக்கூறப்படும் மகாவம்சத்தை எடுத்துப்பார்த்தால் மகன் தந்தையைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றிய சம்பவங்களும் மனைவி கணவனைக்கொன்று ஆட்சியைக் கைப்பற்றிய சம்பவங்களும் இடம்பெற்றுள்ளதை மகாவம்சம் எடுத்துக்காட்டுகிறது. இலங்கை சுதந்திரமடைந்த பின்னரும் இப்படியான மரபுகளை மீறி ஆட்சியைக் கைப்பற்றிய சம்பவங்கள் பல இலங்கை வரலாற்றில் இடம்பெற்றுள்ளன. அவற்றைக் கடந்தகால வரலாறு நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

சுதந்திர இலங்கையின் முதலாவது அரசியல் யாப்பு மீறல் இலங்கை சுதந்திரமடைந்த ஒரு வருடத்துக்குள்ளேயே இடம்பெற்றது. 1949ஆம் ஆண்டு இலங்கையின் தேசபிதா என வர்ணிக்கப்படும் டி.எஸ்.சேனநாயக்க சிறுபான்மை மக்களைப்பாதுகாப்பதற்கென சோல்பரி அரசியல் யாப்பில் இருந்த 29ஆவது ஷரத்தை மீறி இந்திய பாகிஸ்தானிய பிரஜாவுரிமை சட்டத்தைக்கொண்டு வந்து மலையகத்தமிழர்களின் வாக்குரிமையை இல்லாமல் செய்தார். சுதந்திர இலங்கையின் இரண்டாவது அரசியல் யாப்பு மீறலாக தனிச்சிங்களச்சட்ட அறிமுகத்தைக்குறிப்பிடலாம். இலங்கையில் இடம்பெற்ற மிக மோசமான அரசியல் யாப்பு மீறலாக 1972ஆம் ஆண்டு குடியரசு அரசியலமைப்பு உருவாக்கத்தைக் குறிப்பிடலாம். நாடாளுமன்றத்தில் வைத்து இதனை நிறைவேற்ற முடியாது என்பதால் அப்போது ஆட்சியிலிருந்த சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான கூட்டணி அரசாங்கம் நவரங்கஹல மண்டபத்தில் வைத்து இலங்கை குடியரசு அரசியல் யாப்பை உருவாக்கி விட்டு நாடாளுமன்றத்தில்கொண்டுவந்து நிறைவேற்றினார்கள். அதன் பின்னர் ஜே.ஆர் 1978ஆம் ஆண்டு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை அறிமுகம் செய்ததுடன் வெஸ்ட்மினிஸ்டர் முறையின் கீழ் இருந்த இலங்கை நாடாளுமன்றத்தை நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமைக்கு மாற்றினார். இப்படி காலத்துக்குக் காலம் பதவிக்கு வந்த ஆட்சியாளர்கள் அனைவரும், தமக்கு ஏற்ற வகையில் அரசியலமைப்பில் மாற்றங்களையும் திருத்தங்களையும் கொண்டு வந்து இதுவரை 19 திருத்தங்களை இந்தச்சிறிய குட்டி நாடு கடந்த அறுபது ஆண்டுகளுக்குள் கண்டுவிட்டது. வேறு எந்த நாட்டிலும் இப்படி ஒரு குறுகிய காலத்துக்குள் அரசியல் யாப்பில் 19 திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றதாகத் தெரியவில்லை. இதே போல் இலங்கையின் வரலாற்றில் இடம்பெற்ற மிக மோர்சமான ஜனநாயக அல்லது மனித உரிமை மீறல் சம்பவமாக (தமிழர்களுக்கு எதிரான அல்லது யுத்த காலமீறல்களை விடுத்து) சிறிமாவோ பண்டாரநாயக்கவின் குடியுரிமை பறிக்கப்பட்டதைக்குறிப்பிடலாம். இவ்வாறுகாலத்துக்குக்காலம் இலங்கையை ஆட்சி செய்த அனைவரும் டி.எஸ்., பண்டாரநாயக்க, சிறிமா, ஜே.ஆர், சந்திரிகா, மகிந்த என அனைவருமே தமது தேவைக்கு ஏற்ற விதத்தில் அரசியலமைப்பை மாற்றும் வேலையை செய்து வந்துள்ளனர் அந்த வகையில் இப்போது மைத்திரியும் தனது பங்கிற்கு செய்துள்ளார். எனவே இலங்கைத் திருநாட்டில் சம்பிரதாயங்கள், மரபுகள், ஜனநாயக விழுமியங்கள் என்பவற்றை ஆட்சியாளர்கள் மீறுவது என்பது ஒன்றும் புதிய, புதுமையான விடயமல்ல. இதனை வரலாற்றுத் தொடர்ச்சியாக நாங்கள் பார்த்தால் இலங்கை வரலாற்றில் அவ்வப்போது இடம்பெற்று வந்த எதேச்சதிகாரப் போக்கின் தொடர்ச்சியே இப்போது நடைபெற்றுள்ள பிரதமர் பதவி நீக்கம் எனலாம். ■

# எல்லாம் அவர்களின் கைகளில்



இந்திய தேசத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திச் சென்றுள்ள வீரர்கள், அவுஸ்திரேலிய தேசத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வீரர்களுடன் கிரிக்கெட் சமரில் பங்கேற்கத் தயாராகியுள்ள அதேவேளை, அங்கு சில்லறைத்தனமான மோதல்களையும் எதிர்கொள்ளத் தயாராகவே சென்றிருக்கிறனர்.

அவுஸ்திரேலிய அணியை எதிர்த்து அதன் சொந்த மண்ணில் வெற்றி வாகை சூடுவதென்பது அவ்வளவு சுலபமில்லை. அங்கு எத்தகைய தாக்குதல்களையும் எதிர்கொள்ளக்கூடிய மனோதிடத்துடனே எந்தவொரு அணியும் செல்ல வேண்டும் என்பது எழுதப்படாத விதி.

அத்தகையதோர் நிலைப்பாட்டுடன்தான் இந்திய அணி அங்கு சென்று போருக்குத் தயாராகியுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்தியக் கிரிக்கெட் அணி, 3 இருபது-20 போட்டிகள், நான்கு டெஸ்ட் போட்டிகள் மற்றும் 3 ஒருநர்ள் போட்டிகள் கொண்ட பெருந்தொடரில் பங்கேற்கவுள்ளது.

இதில், முதலில் இருபது-20 போட்டிகள் நடைபெறவுள்ளன. முதலாவது போட்டி இலங்கை நேரப்படி இன்று (18) பிற்பகல் 1.20 மணிக்கு ஆரம்பமாகிறது. இரண்டாவது போட்டி 23ஆம் திகதியும், மூன்றாவது போட்டி 25ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

இத்தொடர் முடிந்த பின்னர் டெஸ்ட் போட்டிகள் ஆரம்பிக்கும். அதன்படி முதலாவது டெஸ்ட் போட்டி டிசம்பர் மாதம் 6ஆம் திகதி தொடக்கம் 12ஆம் திகதி வரை நடைபெறும். பின்னர் இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது ஆட்டங்கள் முறையே, 14, 26ஆம் திகதிகள் மற்றும் அடுத்த வருடம்ஜனவரி 3ஆம்திகதிகளில் ஆரம்பிக்கவுள்ளது.

டெஸ்ட் போட்டிகள் முடிந்த பின்னர், ஒருநாள் போட்டிகள் ஆரம்பிக்கும். முதலாவது ஒருநாள் போட்டி அடுத்த வருடம் ஜனவரி மாதம் 12ஆம் திகதியும், இரண்டாவது ஆட்டம் 15ஆம் திகதியும் மூன்றாவது ஆட்டம் 18ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

போட்டிகளின் அட்டவணை இவ்வாறிருக்க, இந்தப் பெருந்தொடர் அவுஸ்திரேலிய மண்ணில் நடைபெறவுள்ளமையால், அங்கு மைதானத்தில் வீரர்களிடையேயும் பெரும் போர் வெடிக்கும் நிலையே உள்ளது.

அவுஸ்திரேலிய அணி அண்மைக்காலகமாகச் சந்தித்து வரும் பெரும் பின்னடைவுகளின் வரிசையில், நடைபெற்று முடிந்த தென்னாபிரிக்க அணியுடனான தோல்வியும் இணைந்துள்ளது.

இந்நிலையில், இந்திய அணியைச் சந்திக்க அந்த அணி தயாராகியுள்ளதா? என்றால் அது கேள்விக்குறிதான்.

சாதாரணமாக வெற்றிப் பாதையில் சென்று கொண்டிருக்கும்போதே எதிரணி வீரர்களை வம்புக்கு இழுக்கும் அவுஸ்திரேலிய வீரர்கள், தற்போதைய பின்னடைவு நிலையில் மிகவும் ஆவேசத்துடன் இருப்பர்.

இதனால், சின்னச் சின்ன விடயங்களுக்கெல்லாம் எதிரணி வீரர்களைச் சீண்டப் பின் நிற்க மாட்டார்கள்.

சீண்டலுக்குப் பெயர்போன அவுஸ்திரேலியர்கள், அண்மையில் பந்தைச் சேதப்படுத்தி தமது தலைவனையும் சக வீரர்கள் இருவரையும் தடைக்குப் பலி கொடுத்தமையும் அந்த அணியின் பின்னடைவுக்கு முக்கிய காரணம்.

குறித்த வீரர்களுக்கு அவுஸ்திரேலியக் கிரிக்கெட் சபையால் விதிக்கப்பட்ட இந்த ஓராண்டுத் தடையை நீக்கப் பல தரப்பினரும் கோரியபோதும், அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை அதை நிராகரித்தது.

இந்நிலையில் அண்மையில் நடைபெற்ற அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபைத் தேர்தலில் ஏற்கனவே தலைவராக இருந்த, டேவிட் பீவெர் 2ஆவது முறையாகயாகவும் தலைவராகத் தெரிவானார்.

எனினும், டேவிட் பீவெர் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். இயர்ல் எட்டிங்ஸ் இடைக்காலத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சபையிலும், மைதானத்திலும் பெரும் பின்னடைவு நிலையில் உள்ள அவுஸ்திரேலிய அணி, இந்திய அணியை வீழ்த்துவதற்கு எந்தவொரு செயலையும் செய்யத் தயாராகவே இருக்கும். அதேவேளை, இந்திய வீரர்களும் அவர்களுக்குச் சலித்தவர்கள் அல்லர். அவர்களுக்கும் கோபம் தாரளமாக வரும்.

இதற்கு, ஓர் எடுத்துக் காட்டாக அவுஸ்திரேலிய செல்ல முன்னர், அந்த அணியின் தலைவர் விராட் கோஹ்லி,

“அவர்கள் எம்மைச் சீண்டாத வரை நல்லது” எனத் தெரிவித்துள்ளமை, அவுஸ்திரேலியர்கள் சீண்டினால் நாமும் பதிலடி கொடுப்போம் என்பதே அதன் அர்த்தமாக அமைந்துள்ளது.

அவுஸ்திரேலிய மண்ணில் போட்டிகள் நடைபெறும்போது, களத்தில் வீரர்கள் மாத்திரமின்றி முன்னாள் வீரர்கள் மற்றும் ஊடகங்கள் என அனைத்துமே எதிரணி வீரர்களைக் கழுவி ஊற்றத் தவறுவதில்லை. இதனால், அங்கு நடைபெறும் போட்டிகளில் பங்கேற்கும் அணிகளுக்கு போட்டித் திறனால் மாத்திரமின்றி மனோதிடத்துடன் வேறு பல எதிர்ப்புகளையும் சந்தித்து விளையாட வேண்டிய நிலையே உள்ளது.

எனவே, பார்ப்போம், இந்திய - அவுஸ்திரேலிய மோதல் எந்த வகையில் அமையப் போகிறது என்பதை.

● தடகளன்

இப்பத்திரிகை மானிப்பாய் வீதி, உடுவில் என்ற முகவரியிலுள்ள அம்பலம் பதிப்பகத்தால், 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 21.11.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.